**Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 110, Anna Salai, Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.**

வெளியீடு : Issued :

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**புதன்கிழமை, ஜூன் 8, 2011—தொகுதி 2—எண் 3**

**Wednesday, the 8th June 2011—Volume 2—No. 3**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

விலை ரூ. **3.00]** **[Price Rs. 3.00**

## 8-6-2011

## உள்ளடக்கம்

பக்கங்கள்


**1. இரங்கற்குறிப்பு—**

*முன்னாள் உறுப்பினர் மறைவு* *169-170*

**2. விதி 110-ன்கீழ் அறிக்கை—**

*(அ) இலங்கைப் பகுதிக்குக் காற்றின் வேகத்தால் இழுத்துச் செல்லப்பட்ட மீனவர்களை விடுவித்தல் குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை* *170-172*

*(ஆ) வேலூர் மாவட்டம், அவலூர் அருகே கே.பி.என். டிராவல்ஸ் பேருந்து விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு நிவாரணம் வழங்குவது குறித்து மாண்புமிகு முதலமைச்சரின்அறிக்கை* *172-173*

**3. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—**

*தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2011* *174*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு* *174*

**4. அரசினர் தீர்மானங்கள்—**

*(அ) ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்தைத் தள்ளிவைத்தல் மற்றும் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்* *175*

பக்கங்கள்

**4. அரசினர் தீர்மானங்கள்**—தொடர்ச்சி

(ஆ) ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்தைத் தள்ளிவைத்து அரசினர் தனித் தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளுதல் — 181-182

**5. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)**—

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2011 — 176-181

*மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு — 176, 179-180, 181

*திரு. டி. லாசர் — 176-177

திரு. சு. குணசேகரன் — 177-179

முனைவர் செ.கு. தமிழரசன் — 179

**6. அரசினர் தனித் தீர்மானம்**—

இலங்கையில் இனப் படுகொலை நிகழ்த்தியவர்களைப் போர்க் குற்றவாளிகள் எனப் பிரகடனப்படுத்த ஐக்கிய நாடுகள் சபையை வற்புறுத்தவும், தமிழர்களுக்கு மறுவாழ்வு அளித்து அனைத்துக் குடியுரிமைகள் வழங்கவும், அதுவரை இலங்கை அரசுமீது பொருளாதாரத் தடை விதிக்க நடவடிக்கை எடுக்கவும் மத்திய அரசை வலியுறுத்துதல் — 182-213

*மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா — 182-184, 207-212

முனைவர் செ.கு. தமிழரசன் — 184-186

*டாக்டர் க. கிருஷ்ணசாமி — 186-189

*முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா — 190-191

திரு. ம. கலை அரசு — 191-192





பக்கங்கள்

**6. அரசினர் தனித் தீர்மானம்**—தொடர்ச்சி

*திரு. என்.ஆர். ரெங்கராஜன் — 192-193

*திரு. ந. நஞ்சப்பன் — 193--196

திரு. கே. கோபிநாத் — 196

திரு. சு. குணசேகரன் — 197-198

திரு. அ. சவுந்தரராசன் — 198--202

திரு. துரைமுருகன் — 202-203

*திரு. விஜயகாந்த் — 203-206

**7. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்**—தொடர்ச்சி — 213-300

*திரு. பழ. கருப்பையா — 213-226

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா — 215, 244-245

திரு. எல். வெங்கடேசன் — 226-232

திரு. பி.ஜி. நாராயணன் — 232-237

*திரு. எஸ். ஜாண் ஜேக்கப் — 237-244

*திருமதி பா. வளர்மதி — 245-251

*திரு. கே. தங்கவேல் — 251-255

*திரு. கே. உலகநாதன் — 256-261

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம் — 262

*திரு. பு. வெற்றிவேல் — 262--266

திரு. அ. கணேஷ்குமார் — 267-271, 273-274

*மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன் — 271-272

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா — 272

பக்கங்கள்

**7. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்**—தொடர்ச்சி

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் 274-275

*திரு. ஜே.சி.டி. பிரபாகர் 275-283

*திரு. ப. பார்த்தசாரதி 283-287

*மாண்புமிகு திரு. பி. தங்கமணி 284-285

*திரு. ஜே.ஜி. பிரின்ஸ் 288-293

திரு. கே. கோபிநாத் 290

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால் 292

திரு. கு.வ. மார்க்கண்டேயன் 294-300

**8. அறிவிப்பு**—

செல்லிடத் தொலைபேசியை அவையில் பயன்படுத்துவதைத் தவிர்த்தல் 234-235

**9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 300

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2042 - வைகாசி 25

## 2011 ஜூன் 8, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. டி. ஜெயக்குமார்** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"பிணியின்மை செல்வம் விளைவுஇன்பம் ஏமம்
அணிஎன்ப நாட்டிற்குஇவ் வைந்து."

நோயில்லாதிருத்தல், செல்வம், விளைபொருள் வளம், இன்பவாழ்வு, நல்ல காவல் ஆகிய இந்த ஐந்தும் நாட்டிற்கு அழகு என்று கூறுவர்.

[**குறிப்பு** : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 1. இரங்கற்குறிப்பு

### முன்னாள் உறுப்பினர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரங்கற்குறிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர் திருமதி அ. கிருஷ்ணவேணி அவர்கள் 23-2-2011 அன்று மறைவுற்ற செய்தியினைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி அ. கிருஷ்ணவேணி அவர்கள், ஆண்டிப்பட்டி தொகுதியிலிருந்து 1962 முதல் 1967 வரையில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பான முறையில் பணியாற்றியுள்ளார்கள்.

இம்முன்னாள் உறுப்பினரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பேரவைத் தலைவர்] [2011 ஜூன் 8

மறைந்த இவ்வுறுப்பினருக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)*

## 2. விதி 110–ன்கீழ் அறிக்கை

### (அ) இலங்கைப் பகுதிக்குக் காற்றின் வேகத்தால் இழுத்துச் செல்லப்பட்ட மீனவர்களை விடுவித்தல் குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் இரண்டு அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள்; அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1-6-2011 அன்று இராமேஸ்வரம் தங்குதளத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற 707 மீன்பிடி விசைப் படகுகளில் இராமேஸ்வரம் பகுதியினைச் சேர்ந்த டி.என். 10/எம்.எப்.பி./581 என்ற விசைப் படகு மற்றும் அதில் மீன் பிடிக்கச் சென்ற 5 மீனவர்கள் மற்றும் டி.என்.12/எம்.எப்.பி./252 என்ற விசைப் படகு மற்றும் அதில் மீன் பிடிக்கச் சென்ற 4 மீனவர்களைத் தவிர, இதர படகுகள் மற்றும் மீனவர்கள் கரை திரும்பிவிட்டனர். இந்த இரண்டு படகுகளில் மீன் பிடிக்கச் சென்ற 9 மீனவர்களும், மண்டபம் பகுதியிலிருந்து மீன் பிடிக்கச் சென்ற இன்னொரு மீன்பிடி விசைப் படகான டி.என்.09/எம்.எப்.பி./153 என்ற விசைப் படகும், அதில் மீன் பிடிக்கச் சென்ற 4 மீனவர்களும் கரை திரும்பவில்லை. இராமேஸ்வரம் பகுதியினைச் சேர்ந்த 2 மீன்பிடி விசைப் படகுகள் மற்றும் அதில் மீன் பிடிக்கச் சென்ற 9 மீனவர்கள் மற்றும் மண்டபம் பகுதியினைச் சேர்ந்த ஒரு மீன்பிடி விசைப் படகு மற்றும் அதில் மீன் பிடிக்கச் சென்ற 4 மீனவர்கள், ஆக மொத்தம் 13 மீனவர்களையும், 3 விசைப் படகுகளையும் கடலோரக் காவல் படை மற்றும் இந்தியக் கப்பற்படைமூலம் கடல் மற்றும் ஆகாய மார்க்கமாகத் தேடிக் கண்டுபிடிக்க 2-6-2011 அன்று எனது அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.



2011 ஜூன் 8] [செல்வி ஜெ ஜெயலலிதா]

கடலோரக் காவல் படையினரால் தேடுதல் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருந்த தருணத்தில், காணாமல் போன 3 விசைப் படகுகளில் இராமேஸ்வரம் பகுதியினைச் சேர்ந்த டி.என்.10/எம்.எப்.பி./581 என்ற விசைப் படகும், அதில் மீன்பிடிப்பு மேற்கொள்ளச் சென்ற 5 மீனவர்களும் மற்றும் மண்டபம் பகுதியினைச் சேர்ந்த டி.என்.09/எம்.எப்.பி./153 என்ற மீன்பிடி விசைப் படகும், அதிலிருந்த 4 மீனவர்களும், ஆக மொத்தம் 9 மீனவர்களும் மீட்புப் படகுகள் உதவியுடன் 3-6-2011 அன்று காலை பத்திரமாகக் கரை திரும்பிவிட்டனர். இராமேஸ்வரம் பகுதியினைச் சேர்ந்த டி.என்.12/எம்.எப்.பி./252 என்ற பதிவு எண் கொண்ட ஒரு படகு மட்டும் மோசமான பருவ நிலை காரணமாக காற்றின் வேகத்தால் இலங்கையிலுள்ள நெடுந்தீவு அருகிலுள்ள பகுதிக்கு இழுத்துச் செல்லப்பட்டு அங்கு அப்படகு மூழ்கியதாகவும், அப்படகில் சென்ற இராமேஸ்வரத்தைச் சேர்ந்த திரு. மூக்குத் துரையின் மகன் திரு. ஜெயக்குமார், வயது 45, திரு. தேவக்குமார் மகன் திரு. பிரபாத், வயது 28, திரு. திவ்யநாதன் மகன் திரு. சுந்தர், வயது 50, திரு. கருப்பையா மகன் திரு. மாரிமுத்து, வயது 45, ஆகிய நான்கு மீனவர்களும் எட்டு மணி நேரம் நடுக்கடலில் தத்தளித்து நீந்தி, இலங்கையிலுள்ள நையினாத் தீவில் பத்திரமாகக் கரை சேர்ந்ததாகவும் தகவல் பெறப்பட்டது.

*முற்பகல் 10-05*

இந்த நான்கு மீனவர்களும் இலங்கை ஊர்க் காவல் படையினரால் காவல் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தகவல் பெறப்பட்டதைத் தொடர்ந்து, இலங்கையிலுள்ள இந்திய தூதரகத்திற்குத் தெரிவித்து, இச்செய்தியை உறுதி செய்திடுமாறும், மேற்குறித்த மீனவர்களுக்கு உரிய அனைத்து உதவிகளையும் செய்திடுமாறும், அவர்களை விரைவில் விடுவித்து தமிழகத்திற்கு அனுப்பி வைத்திட உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அரசால் 3-6-2011 அன்று நிகரிச் செய்தி அனுப்பப்பட்டது. மேலும், தொலைபேசி மூலமும் கேட்டுக்கொள்ளப்பட்டது. இந்த 4 மீனவர்களும் காங்கேசன் துறை நீதிமன்றத்தால் 17-6-2011 வரை காவலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளதாக 6-6-2011 அன்று இலங்கையிலுள்ள இந்திய தூதரகத்திடமிருந்து தொலைபேசி மற்றும் நிகரிமூலம் தகவல் பெறப்பட்டதைத் தொடர்ந்து, நான் மாண்புமிகு

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2011 ஜூன் 8

பாரதப் பிரதமர் அவர்களுக்கு இதுபற்றிக் கடிதம் அனுப்பியுள்ளேன். நான்கு அப்பாவி மீனவர்களையும் உடனடியாக விடுவிக்க இலங்கை அரசை வற்புறுத்துமாறு அதில் நான் பிரதமர் அவர்களைக் கேட்டுக்கொண்டுள்ளேன். மீனவர்களின் நலனைப் பேணிக் காக்கவும், அவர்களின் வாழ்வு மேம்படவும் எனது தலைமையிலான அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (ஆ) வேலூர் மாவட்டம், அவலூர் அருகே கே.பி.என். டிராவல்ஸ் பேருந்து விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு நிவாரணம் வழங்குவது குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கே.பி.என். டிராவல்ஸ்-ஐச் சேர்ந்த படுக்கை வசதி கொண்ட குளிர் சாதனப் பேருந்து நேற்றிரவு சுமார் 9 மணிக்கு சென்னை கோயம்பேட்டிலிருந்து பொள்ளாச்சி நோக்கிப் புறப்பட்டது. இந்தப் பேருந்தில் 5 பெண்கள், 2 குழந்தைகள் உட்பட 23 பயணிகள் பயணம் செய்தனர். இந்தப் பேருந்தை திரு. நாகராஜன் என்ற ஓட்டுநர் ஓட்டிச் சென்றுள்ளார். இந்தப் பேருந்து py01 bh 9919 என்ற எண்ணில் புதுச்சேரியில் பதியப் பெற்றுள்ளது. இந்தப் பேருந்து சென்னை பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில், சென்னையில் இருந்து சுமார் 100 கிலோ மீட்டர் தொலைவில் வேலூர் மாவட்டம், அரக்கோணம் வட்டம், அவலூர் என்னும் இடத்திற்கு அருகே சென்றபோது, அங்கு நின்றிருந்த லாரியைத் தவிர்க்கும் பொருட்டு, பேருந்தின் ஓட்டுநர் பேருந்தை திடீரென்று திருப்பியபோது, கட்டுப்பாட்டை இழந்து, சிறு பாலத்தின் தடுப்புச் சுவற்றில் மோதி, 10 அடி ஆழப் பள்ளத்தில் கவிழ்ந்தது. இதில் குளிர்சாதன இயந்திரம் வெடித்து, தீப்பிடித்து, அதனால், இந்தப் பேருந்து முழுவதும் எரிந்து எலும்புக் கூடாகிவிட்டது. பேருந்து கவிழ்ந்து தீப்பிடித்த இந்த விபத்தில், அப்பேருந்தில் பயணம் செய்த 22 பேர் சம்பவ இடத்திலேயே, தீயில் கருகி உயிரிழந்தனர். திரு. கார்த்திகை ராஜன் என்ற ஒரே ஒரு பயணி மற்றும் பேருந்தின் ஓட்டுநர் இந்த விபத்தில் உயிர் பிழைத்துள்ளனர். பேருந்தின் ஓட்டுநர் திரு. நாகராஜன் வேலூர் வடக்கு காவல் நிலையத்தில் சரண் அடைந்தார். வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு, அவருக்குச் சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. பயணி,



2011 ஜூன் 8] [செல்வி ஜெ ஜெயலலிதா]

திரு. கார்த்திகை ராஜன், காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தகவல் அறிந்ததும், சம்பவ இடத்திற்கு இராணிப்பேட்டை மற்றும் அருகில் இருந்த தீயணைப்பு நிலையங்களில் இருந்து தீயணைப்பு வாகனங்கள் சென்று, தீயை அணைத்தன. வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர், சட்டம்-ஒழுங்கு காவல் துறை கூடுதல் இயக்குநர், வடக்கு மண்டல காவல் துறைத் தலைவர், வேலூர் மாவட்ட காவல் துறை துணைத் தலைவர் மற்றும் காஞ்சிபுரம், வேலூர் ஆகிய மாவட்டங்களின் காவல் துறை கண்காணிப்பாளர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து, தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இந்தச் சம்பவம் பற்றி நேற்று இரவு, அதாவது 7-6-2011 இரவு எனக்குத் தகவல் கிடைத்தவுடன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. வி. செந்தில் பாலாஜி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் வி.எஸ். விஜய், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. டி.கே.எம். சின்னையா ஆகியோரை உடனடியாகச் சம்பவ இடத்திற்கு அனுப்பி வைத்தேன்.

இந்தக் கோர விபத்தில் மரணம் அடைந்த 22 நபர்களின் உடல்கள் கருகிய நிலையில் உள்ளதால், அடையாளம் காண இயலவில்லை. 22 நபர்களின் சடலங்கள் வாலாஜா அரசு மருத்துவமனைக்குப் பிரேதப் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளன. இப்பேருந்தில் பயணம் செய்தவர்களின் விவரம் KPN Travels நிறுவனத்தின் Ticket List-ல் இருந்து பெறப்பட்டுள்ளது. அதை வைத்துப் பயணம் செய்தவர்களைக் கண்டு அறியும் பணி நடைபெற்று வருகிறது.

முற்பகல் 10-10

இந்த விபத்தில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், இந்தப் பேரவை உறுப்பினர்களின் ஆழ்ந்த இரங்கலையும், இந்தப் பேரவையின்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இந்தப் பேருந்து விபத்தில் இறந்தவர்களின் குடும்பங்களுக்குத் தலா ஒரு இலட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

## 3. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2011

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.





## 4. அரசினர் தீர்மானங்கள்

### (அ) ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்தைத் தள்ளிவைத்தல் மற்றும் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் தீர்மானம். பேரவை விதி 13(2)-ன்கீழ், ஆளுநர் உரை மீதான விவாதத்தைத் தள்ளிவைத்து, சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"இன்று நடைபெற இருக்கும் ஆளுநர் உரை மீதான விவாதத்தைப் பேரவை விதி 13(2)-ன்கீழ் தள்ளிவைத்து, சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2011) இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

[2011 ஜூன் 8

## 5. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)

### தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2011

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்). 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2011), மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*“2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2011)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.”*

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேச வாய்ப்பு வேண்டுமென்றால் கையைத் தூக்க வேண்டுமல்லவா? எவ்வளவு நேரம்தான் நான் பார்த்துக்கொண்டிருப்பேன்? பேசவேண்டுமென்றால் கையைத் தூக்குங்கள். அதைத்தான் நான் முதலிலேயே கேட்டேன். சட்டமுன்வடிவின்மீது கருத்துக்கூற விரும்பும் மாண்புமிகு உறுப்பினர்கள், சுருக்கமாகத் தங்களது கருத்துகளைக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன். திரு. ஏ. லாசர்.

***திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் முன்மொழிந்துள்ள இந்தத் திருத்தச் சட்டமுன்வடிவின்மீது ஒரு விஷயத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாகப் பதிவு செய்ய வேண்டுமென்று கருதுகிறேன். ஏற்கெனவே ஒரு நல்ல நோக்கத்தோடு கொண்டுவரப்பட்ட கூட்டுறவுத் துறை, இந்தியாவில், தமிழ்நாட்டில் சிறப்பாகச் செயல்பட்டு வந்தது. சமீப காலங்களில் அதனால் பலன்பெற்ற விவசாயிகளுக்கும், வர்த்தகர்களுக்கும், பலதரப்பட்ட மக்களுக்கும், அதன்மீது மிகப்பெரிய சந்தேகமும், அதனால் பலன் கிடைக்காது என்கிற ஒரு நிலையும் ஏற்பட்டிருக்கிறது. அதுவும் சமீபத்தில், தமிழ்நாட்டில் ஏராளமான கூட்டுறவு அமைப்புகள் மூடப்பட்டுள்ளன. அதில் இருக்கின்றவர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாத நிலை உள்ளது. அப்படியென்றால் அவற்றைக் கவனிப்பதில் உரிய கவனங்கள் செலுத்தப்படவில்லை. அதனால் ஒரு நல்ல நோக்கத்தோடு கொண்டுவரப்பட்ட திட்டம் தமிழ்நாட்டில் சமீப காலத்தில் நலிவடைந்துள்ளது. எனவே, அந்தத் துறையில் ஜனநாயகத்தைப் பலப்படுத்துவதற்கும், செயல்படுத்துவதற்கும் அம்மா அவர்களின் தலைமையில் ஏற்பட்டிருக்கின்ற புதிய அரசு, அவற்றினுடைய ஜனநாயகத் தன்மையைப் பலப்படுத்துகின்ற விதத்தில், பாதுகாக்கின்ற விதத்தில், அவற்றினுடைய பலன் மக்களுக்குச் சென்றடைகின்ற விதத்தில், அந்தத் துறையில் இந்தக் காலஅவகாசம் முடிந்தவுடன் உடனடியாகத் தேர்தலை நடத்தி, அவை ஜனநாயகபூர்வமாகச் செயல்பட்டு அவற்றினுடைய பலன் மக்களுக்குக் கிடைக்கின்ற விதத்தில் புதிய அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

@ 8-6-2011 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



*முற்பகல் 10-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற கால நீட்டிப்பிற்கான சட்டமுன்வடிவை, காலத்தின் சூழ்நிலை கருதி இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் ஆதரிக்கிறோம். ஆனால், அதேசமயத்தில் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக ஒரு கருத்தை அழுத்தமாக இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன். ‘கூட்டுறவே நாட்டுயர்வு’ என்ற அடிப்படைத் தத்துவத்தின் அடிப்படையில் மக்கள் கூட்டுறவாக இயங்க வேண்டும். மக்கள் அந்த அமைப்பில் பங்கெடுக்க வேண்டுமென்ற அடிப்படை நோக்கத்தில்தான் கூட்டுறவு அமைப்புகள் உருவாக்கப்பட்டன. ஆனால், இப்போது அவை படிப்படியாக பல்வேறு அரசியல் காரணங்களுக்காக அதிகாரிகளினுடைய முழுமையான கட்டுப்பாட்டில் சென்ற காரணத்தால், கூட்டுறவு அமைப்புகள்

[திரு. சு. குணசேகரன்] [2011 ஜூன் 8

*அதனுடைய நோக்கத்தை இழந்து, செயல்பாடுகளை இழந்து, மிகப் பெரிய பாதிப்பிற்கு உள்ளாகியிருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில்தான், வைத்தியநாதன் குழுவின் சார்பிலே ஒரு ஆய்வு செய்யப்பட்டு, நாடு முழுவதும் கூட்டுறவு அமைப்புகளை எப்படிச் சீரமைக்க வேண்டும்; ஒழுங்குபடுத்தவேண்டும் என்பதற்கு விரிவானதொரு அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த அறிக்கையின் அடிப்படையில் 2008 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் வைத்தியநாதன் குழு அறிக்கையை ஏற்று அமல்படுத்துவதாக ஒப்பந்தமும் போடப்பட்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில்தான் கூட்டுறவு அமைப்புகளுக்கு இருக்கக்கூடிய பணப் பற்றாக்குறையை ஈடுகட்டுகின்ற வகையில், தமிழ்நாட்டில் வைத்தியநாதன் குழு அறிக்கையை ஏற்றுக்கொண்டால், 1300 கோடி ரூபாய் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும் என்ற அந்த அறிவிப்பின்படி ஒப்பந்தமும் கையெழுத்தானதால், சுமார் 900 கோடி ரூபாய் வரை நமது கூட்டுறவு அமைப்புகளுக்குக் கிடைத்திருக்கிறது. ஆனால், அந்த வைத்தியநாதன் குழு அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கின்ற மிக முக்கியமான அறிவுரை கூட்டுறவுச் சங்கத் தேர்தலை முறையாக, காலத்தில் நடத்த வேண்டும் என்பதாகும். (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மானியக் கோரிக்கையில் விரிவாகப் பேசுங்கள். இது சட்டமுன்வடிவு. இதில் சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.*

**திரு. சு. குணசேகரன்:** *தேர்தலை நடத்தாத காரணத்தால் நமக்கு வரவேண்டிய சுமார் 400 கோடி ரூபாய்கூட இப்போது வராத நிலை இருந்துகொண்டிருக்கிறது. எனவே, கூட்டுறவுத் தேர்தலை நடத்துவது என்பது ஜனநாயகத்தைப் பலப்படுத்துவது. அதிகாரக் குவியலைத் தடுத்து, மக்களும் கூட்டுறவின் மூலமாக, உள்ளாட்சித் தேர்தலின் மூலமாக, அதிகாரங்களில் பரவலாகப் பங்கெடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு இருக்கின்ற அந்தக் கூட்டுறவு அமைப்புகளில் நாம் தேர்தலை முறையாக நடத்த வேண்டும். எனவே, இப்போது புதியதாக அரசு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற இந்த நிலையில், மே மாதத்திற்குள்ளாக இந்தத் தேர்தலை நடத்த முடியாத காரணத்திற்காக ஆறு மாத காலம் நீட்டிக்கலாம். ஆனால், இந்த ஆறு மாதத்திற்கு மேலும் நீட்டிக்காமல், ஆறு மாதத்திற்குள்ளாக வைத்தியநாதன் குழு சொன்னதைப் போன்ற ஒரு முறையான தேர்தலை நாம் நடத்தி, கூட்டுறவு அமைப்புகளை*



2011 ஜூன் 8] [திரு. சு. குணசேகரன்]

*மக்கள் பங்கெடுக்கின்ற இயக்கமாக மாற்ற வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வரை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே நான் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன்.*

**முனைவர் செ.கு. தமிழரசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறு மாத காலம் தனி அலுவலர்கள் நீட்டிப்பு குறித்து மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை வரவேற்கிறோம். 'கூட்டுறவே நாட்டுயர்வு' எங்கே கூட்டுறவு வலுவாக இருக்கிறதோ அங்கே மக்கள் கட்டமைப்பும் வலுவாக இருக்கும் என்பதெல்லாம் மிகச் சரியான மதிப்பீடுகள் என்றாலும்கூட, இதுகுறித்து நான் ஒன்றை மட்டும் தங்கள் வழியாக வலியுறுத்த விரும்புகிறேன். கூட்டுறவுத் தேர்தலை வலியுறுத்துகின்றவர்கள் கூட்டுறவு ஜனநாயகத்தையும் வலியுறுத்த வேண்டும். கடந்தகால அரசு தேர்தலை நடத்தியது. அதற்கு முன்னாலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்தபோது புதிய உறுப்பினர்களைச் சேர்த்து தேர்தலை நடத்த வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை நீதிமன்றத்திலே வலியுறுத்தியிருந்தார்கள். ஆக புதிய உறுப்பினர்களைச் சேர்த்து தேர்தலை நடத்துவதுதான் கூட்டுறவு ஜனநாயகத்தை வலுப்பெறச் செய்வதாக இருக்க முடியும். ஆகவே, புதிய உறுப்பினர்களைச் சேர்த்து தேர்தலை நடத்துவதற்கு வழி செய்கிற வகையிலே இன்றைக்கு ஆறு மாத காலம் தனி அலுவலர்களை நீடிக்கச் செய்தாலும், புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கு இந்தப் புதிய அரசு அப்படிப்பட்ட சட்டத் திருத்தம் கொண்டு வருவதற்கு, சட்டத்தை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற கோரிக்கையோடு இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிறேன்.*

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் தேர்தலை நடத்த வேண்டுமென்று சொன்னார்கள். மாண்புமிகு அம்மா அவர்களைப்*

[திரு. செல்லூர் கா. ராஜு] [2011 ஜூன் 8

பொறுத்தளவுக்கு, தேர்தலை நடத்துவது, தேர்தலை எதிர்கொள்வது என்பதை என்றைக்கும் அம்மா அவர்கள் எந்தச் சூழ்நிலையிலேயும் தவிர்த்தது கிடையாது. இன்றைக்கு இந்தச் சங்கங்களைப் பொறுத்தளவுக்கு, பல்வேறு இடங்களில் பல்வேறு சங்கங்களுக்கு சென்ற அரசு நடத்திய தேர்தலில் குளறுபடி ஏற்பட்டு, உச்ச நீதிமன்றத்திலே வழக்கு நிலுவையில் இருக்கிறது. அது வந்தவுடன் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோருடைய கருத்துகளையும் அறிந்து மாண்புமிகு அம்மா அவர்கள் சரியான முடிவு எடுப்பார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க.* (ஆம்)

*மறுப்போர் 'இல்லை' என்க.* (இல்லை)

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.*

*சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.*

*பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.*

*பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க.* (ஆம்)

*மறுப்போர் 'இல்லை' என்க.* (இல்லை)

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.*

*பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*



2011 ஜூன் 8] [பேரவைத் தலைவர்]

*ஏற்போர் 'ஆம்' என்க.* (ஆம்)

*மறுப்போர் 'இல்லை' என்க.* (இல்லை)

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2011) நிறைவேற்றப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க.* (ஆம்)

*மறுப்போர் 'இல்லை' என்க.* (இல்லை)

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.*

## 4. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

### (ஆ) ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்தைத் தள்ளிவைத்து அரசினர் தனித் தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் தீர்மானம். பேரவை விதி 13(2)-ன்கீழ் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தைத் தள்ளிவைத்தல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

[2011 ஜுன் 8

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதி 13(2)-ன்கீழ் இன்று நடைபெறவிருக்கும் ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்தைத் தள்ளிவைத்து, இன்று முன்மொழியப்பெறும் அரசினர் தனித் தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவை முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## 6. அரசினர் தனித் தீர்மானம்

**இலங்கையில் இனப் படுகொலை நிகழ்த்தியவர்களைப் போர்க் குற்றவாளிகள் எனப் பிரகடனப்படுத்த ஐக்கிய நாடுகள் சபையை வற்புறுத்தவும், தமிழர்களுக்கு மறுவாழ்வு அளித்து அனைத்துக் குடியுரிமைகள் வழங்கவும், அதுவரை இலங்கை அரசுமீது பொருளாதாரத் தடை விதிக்க நடவடிக்கை எடுக்கவும் மத்திய அரசை வலியுறுத்துதல்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பன்னாட்டு போர் நெறிமுறைகளை மீறி இலங்கையில் இனப்படுகொலையை நிகழ்த்தி போர்க் குற்றம் புரிந்தவர்களைப் போர்க் குற்றவாளிகள் என்று பிரகடனப்படுத்த ஐக்கிய நாடுகள் சபையை இந்திய அரசு வற்புறுத்த வேண்டுமென்றும், இலங்கையில் உள்ள அகதிகள் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கு முழு மறுவாழ்வு அளித்து,



2011 ஜுன் 8] [செல்வி ஜெ ஜெயலலிதா]

அவர்கள் வசித்த இடங்களிலேயே அவர்களை மீண்டும் குடியமர்த்தி, சிங்களர்களுக்குரிய அனைத்துக் குடியுரிமைகளையும் தமிழர்களுக்கு இலங்கை அரசு வழங்கும் வரையில் மற்ற நாடுகளுடன் இணைந்து இலங்கை அரசுமீது பொருளாதாரத் தடையை விதிக்க வேண்டுமென்றும், மத்திய அரசை வலியுறுத்தி தமிழ்நாடு அரசு சார்பில் பின்வரும் தீர்மானத்தினை நான் முன்மொழிய விழைகிறேன்.

*முற்பகல் 10-25*

### தீர்மானம்

"தமிழனின் பண்பு யாருக்கும் தாழ்ந்தவனாக இருப்பதல்ல; யாரையும் தாழ்த்துவதல்ல" என்றார் பேரறிஞர் அண்ணா. இப்படிப்பட்ட உயரிய எண்ணத்தைக் கொண்ட தமிழர்கள் உலகெங்கும் பரவியிருக்கிறார்கள். மொழி மற்றும் கலாச்சார பாரம்பரியத்தில் ஒற்றுமையுடன் திகழும் இலங்கைத் தமிழர்களுக்கும், தமிழ்நாட்டில் வாழும் தமிழர்களுக்கும் இடையே உள்ள தொப்புள்கொடி உறவு அனைவரும் அறிந்த ஒன்றாகும். இலங்கைக்கு விடுதலை கிடைத்துவிட்டாலும், அங்கு வாழும் தமிழர்கள் அவர்கள் நாட்டிலேயே இரண்டாம் தர குடிமக்களாக நடத்தப்படுவதை எதிர்த்து, இலங்கைத் தமிழர்கள் பல்லாண்டுக் காலமாகப் போராடி வந்தனர். இவர்களின் கோரிக்கைகளில் உள்ள நியாயத்தை உணர்ந்து, தேவையான அரசமைப்புச் சட்டத் திருத்தங்களைக் கொண்டு வந்து, தமிழர்கள் கவுரவத்துடனும், சம உரிமையுடனும், சுயமரியாதையுடனும் வாழ்வதை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்காமல், அவர்களை முற்றிலும் ஒழித்துக்கட்ட இலங்கை அரசு நடவடிக்கை எடுத்தது.

1. பரவலாக குண்டுமழை பொழிந்து அப்பாவி மக்களைக் கொன்று குவித்தது;

2. மனிதர்கள் வாழும் இடங்களின்மீதும், மருத்துவமனைகள்மீதும் குண்டுகளை வீசியது;

3. மனிதாபிமான முறையில் செய்ய வேண்டிய உதவிகளைச் செய்ய மறுத்தது;

4. உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று சந்தேகப்படக்கூடியவர்கள்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2011 ஜூன் 8

*உட்பட இந்தச் சண்டையில் பலியானவர்கள் மற்றும் எஞ்சியுள்ளவர்கள்மீது மனித உரிமை மீறல்களை நிகழ்த்தியது;*

*5. இலங்கை அரசை விமர்சிப்பவர்கள் மற்றும் ஊடகங்கள் உட்பட போர்ப் பகுதிக்கு வெளியே இருப்பவர்கள்மீது மனித உரிமை மீறல்களை நிகழ்த்தியது போன்ற கடுமையான, நம்பத்தகுந்த குற்றச்சாட்டுக்களை உள்நாட்டுப் போரின்போது இலங்கை அரசு நிகழ்த்தியுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளரால் நியமனம் செய்யப்பட்ட குழு கண்டறிந்து இருக்கிறது.*

*எனவே, இத்தகைய போர்க் குற்றங்கள் நிகழ்த்தியவர்களைப் போர்க் குற்றவாளிகள் என்று பிரகடனப்படுத்த ஐக்கிய நாடுகள் சபையை இந்திய அரசு வலியுறுத்த வேண்டும் எனவும், தற்போது இலங்கை முகாம்களில் உள்ள தமிழர்கள் அனைவரும் தங்களது சொந்த இடங்களுக்குத் திரும்பி, சிங்களர்களுக்கு இணையாக கண்ணியமாக வாழ வகை செய்யும் வரையில், அனைத்துக் குடியுரிமைகளையும் தமிழர்கள் பெறும் வரையில், மற்ற நாடுகளுடன் இணைந்து இலங்கை அரசின்மீது பொருளாதாரத் தடையை விதிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை இந்திய அரசைக் கேட்டுக்கொள்கிறது." (மேசையைத் தட்டும் ஒலி)*

*இந்தத் தீர்மானத்தின்மீது அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் பேசிய பிறகு, இதுபற்றிய எனது கருத்துகளை மேலும் எடுத்துரைக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *தீர்மானத்தின்மீது விவாதம். கருத்து தெரிவிக்க விரும்பும் உறுப்பினர்கள் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கின்றேன். முதலில், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள். (குறுக்கீடு) முனைவர் செ.கு. தமிழரசன், நீங்கள் பேச விரும்புகிறீர்களா? அதனால்தான் நான் முதலிலேயே கையைத் தூக்கச் சொன்னேன். சரி, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

**முனைவர் செ.கு. தமிழரசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கை மண்ணில் ஒவ்வொரு நாளும் வெந்து வீழ்ந்து கொண்டிருக்கிற தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க*



2011 ஜூன் 8] [முனைவர் செ.கு. தமிழரசன்]

*8 கோடி தமிழர்களின் ஒட்டுமொத்த உரிமைக் குரலாக விளங்குகிற, உலகத் தமிழர்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்குகிற, மாண்புமிகு தமிழக முதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி) போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு கொண்டு வந்திருக்கிற இந்த அரசினர் தனித் தீர்மானத்தை எங்கள் இயக்கத்தின் சார்பிலே வரவேற்பதிலே நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.*

*தமிழ் மொழியையும், தமிழ் இனத்தையும் தனது சொந்த விளம்பரத்திற்குப் பயன்படுத்துகிற அப்படிப்பட்ட இயல்புக்கு மாறாக எந்த வகையிலும் தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதிலும், தமிழர்களின் வாழ்வை மேம்படுத்துவதிலும், தமிழர்களின் குரலை உலக அரங்கிலே ஒலிக்கச் செய்வதிலும் நான் சமரசம் செய்து கொள்ளவே மாட்டேன், ஏற்றுக்கொண்ட கொள்கையிலே மிக உறுதியாக இருக்கிற அப்படிப்பட்ட பண்பு எனக்கு உண்டு என்று இன்று உலகத்திற்குச் சொல்கிற (மேசையைத் தட்டும் ஒலி) வகையிலே இந்தப் பேரவையின் முதல் கூட்டத் தொடரிலேயே தமிழர்களுடைய உரிமைகளை எதிரொலிக்கிற, உலகத்தின் கவனத்திற்குக் கொண்டு வரச் செய்கிற இந்தத் தீர்மானத்தை மிகத் துணிவோடு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள் என்கிறபோது தமிழ் இனமே இந்தத் தீர்மானத்தை வரவேற்க, வாழ்த்த, பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*கூப்பிடும் தொலைவிலே இருக்கிற இலங்கை மண்ணிலே நம் தொப்புள்கொடி உறவுகளான தமிழ் மக்கள் படுகொலைக்கு உள்ளாவது, கற்பழிப்புக்கு உள்ளாவது, சுரண்டப்படுவது, சொந்த மண்ணிலேயே இரண்டாம் தர குடிமக்களாக நடத்தப்படுவதை இந்தத் தீர்மானத்திலேயே அந்த வரியை மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்கிறபோது, இலங்கைத் தமிழர் பிரச்சினையிலே அதை அரசியலாக்கி, அந்த அரசியலைக் கொண்டே இயக்கம் நடத்துபவர்களுக்கு மத்தியிலே, நான் அந்த மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த இன்றைக்கு இந்தத் துணிவான தீர்மானத்தை முன்மொழிந்திருக்கிறேன் என்று சொல்கின்ற வகையிலே, இரண்டாம் தர குடிமக்களாக, அடுத்த நாட்டு மக்களானாலும் அவர்கள் நம்முடைய தொப்புள்கொடி*

உறவுகள் என்று இங்கே வலியுறுத்தி, இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்திருப்பதை நான் முழுக்க முழுக்க பாராட்டி, வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 10-30*

படுகொலை, கற்பழிப்பு, அதைவிட ஒவ்வொரு நாளும் சொந்த மண்ணிலேயே அவர்கள் வாழ்வுரிமை இழந்தவர்களாகக் கருதப்படுகின்ற அவலம், இதற்கும் மேலே அவர்கள் மனிதாபிமானம் இல்லாத வகையிலே அந்த மக்களைச் சீர்குலையச் செய்வது போன்ற செயல்களைக் கண்டித்து, இந்தக் குற்றத்தைச் செய்தவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் போர்க் குற்றவாளிகளாக உலக அரங்கிலே நிறுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியும், இந்தக் குற்றத்திற்குத் துணை நிற்கின்ற அந்த நாட்டிற்குப் பொருளாதாரத் தடை விதிக்க வேண்டுமென்றும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை எங்கள் இயக்கத்தின் சார்பிலே மனப்பூர்வமாக முன்மொழிந்து, வழிமொழிந்து, அதற்கும் மேலே, பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதுபோல் 'உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம்' என்பதற்கு இலக்கணமாக இருக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தையும், அதன் வடிவமாக இருக்கக்கூடிய முதலமைச்சர் அவர்களையும் வாழ்த்தி (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தீர்மானத்தை நான் வரவேற்று அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய எல்லையிலிருந்து 26 கிலோ மீட்டருக்கு அப்பாலுள்ள இலட்சக்கணக்கான ஈழத் தமிழ் மக்கள் தங்களுடைய சுதந்திரத்திற்காகவும், சுய நிர்ணய உரிமைக்காகவும் ஐம்பதாண்டு காலத்திற்கும் மேலாகப் போராடி வருகிறார்கள். எனினும், அவர்களுடைய போராட்டம் இன்னும் முற்றுப்பெற்றதாகத் தெரியவில்லை. பயங்கரவாதிகளுக்கு எதிரான போர், தீவிரவாதத்தை ஒழித்துக்கட்டுகிறேன் என்ற பெயரில் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 3-ஆம் தேதியும், மே மாதம் 18-ஆம் தேதியும், சிங்களப் பேரினவாத அரசு, ராஜபக்சேவின் அரசு, ஈழத் தமிழ் மக்கள்மீது நடத்திய





மனிதாபிமானமற்ற தாக்குதலில், முள்ளிவாய்க்காலில் முப்பதாயிரம் பேர்கள் ஒரே நேரத்தில் படுகொலைக்கு ஆளானார்கள். சர்வதேச போர் விதிமுறைகளுக்கு மாறாக ஈழத் தமிழ் மக்கள்மீது போர் தொடுத்த ராஜபக்சே சர்வதேச நீதிமன்றத்திலே குற்றவாளியாக நிறுத்தப்படவேண்டும் என்று கடந்த இரண்டு ஆண்டு காலத்திற்கும் மேலாக உலகெங்கும் வாழக்கூடிய தமிழ் மக்கள் குரல் கொடுத்து வருகிறார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு ஈழத் தமிழ் மக்கள் மீதான போர் நிறுத்தப்பட வேண்டும் என்று கோரி உண்ணாவிரதம் இருந்தபொழுது, நாங்களெல்லாம் அதிலே கலந்துகொண்டு வாழ்த்தினோம். கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு, இந்தப் போர் முடிந்த பிறகு, நான் கோவையிலே நடத்திய மாநாட்டிற்காக மலேசியத் தமிழர்களை அழைப்பதற்குச் சென்றேன். நீங்கள் எல்லோரும் தமிழகத்திலிருந்து எதற்காக வருகிறீர்கள்; இலட்சக்கணக்கான தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டபொழுது தமிழகத்திலிருந்து எதிர்ப்புக் குரல் வரவில்லை. இங்கே இருக்கக்கூடிய ஆட்சியாளர்கள் குரல் கொடுக்கவில்லை என்று தமிழர்கள் எல்லோரும் வெட்கி, நாணித் தலைகுனியக்கூடிய வகையிலே உலகத் தமிழர்கள் நம்மையெல்லாம் ஏளனமாகப் பார்த்தார்கள். ஆனால் இன்று ஆறு கண்டங்களிலே வாழ்கின்ற எட்டு கோடி தமிழர்களுடைய தன்மானத்தைத் தூக்கி நிறுத்தக்கூடிய வகையிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சார்பாக (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ் மக்களுக்கு எதிராகப் போர்க் குற்றம் புரிந்த ராஜபக்சே குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்பட வேண்டுமென்று கொண்டுவரப்பட்டிருக்கின்ற தீர்மானத்தை நான் ஆதரிக்கிறேன்.

நேற்றுகூட அன்பு சகோதரர் திரு. குணசேகரன் அவர்கள் பேசியபொழுது, அதிலே அம்மா அவர்கள் ஈழத் தமிழ் மக்கள் குறித்துக் கருத்து சொல்லவில்லையே என்று ஏங்கினேன். ஒரு நாள்கூட எங்களது ஏக்கத்தை விட்டுவைக்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு இன்றே விடையளித்திருக்கிறார்கள்.

*முற்பகல் 10-35*

பேரவைத் தலைவர் அவர்களே, ஈழத் தமிழ் மக்களுக்கு எதிராக நடந்த போர் சாதாரணமானதல்ல. அந்தப் போர் இன்றும்

முற்றுப்பெற்றதாகத் தெரியவில்லை. ஒரே நாளிலே முப்பதாயிரம் பேர் கொன்று குவிக்கப்பட்டார்கள். மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட ஈழத் தமிழ் மக்கள் முள்வேலி முகாம்களிலே அடைக்கப்பட்டார்கள். அவர்களையெல்லாம் விடுதலை செய்துவிட்டோம் என்று சொன்னார்கள். ஆனால் இன்றும் இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் சிறு சிறு முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்திய அரசால் ஈழத் தமிழ் மக்களுக்காக அனுப்பப்படக்கூடிய எந்தவிதமான உதவிகளும் தமிழ் மக்களுக்குச் சென்றடைவதில்லை. 500 டிராக்டர்கள் அனுப்பினார்கள், அவற்றிலே 26 டிராக்டர்கள் மட்டும்தான் தமிழர்களுக்குச் சென்றடைந்திருக்கின்றன. 50,000 வீடுகள் கட்டுவதற்கு வேண்டிய இலட்சக்கணக்கான சிமெண்ட் மூட்டைகளை இந்திய அரசு அனுப்பி வைத்தது. அவை தமிழர்களுக்குச் சென்றடையவில்லை. எனவே, இவையெல்லாம் நடைபெறுவதற்குக் காரணம், அங்கிருக்கக்கூடிய சிங்களப் பேரினவாத அரசு, தமிழ் மொழியையும், தமிழினத்தையும் சிங்களர்களுக்கு நிகராக மதிப்பதற்குத் தயாராக இல்லை. தமிழ் மக்கள் தானாக முன்வந்து அவர்கள் ஆயுதப் போராட்டங்களை எடுக்க முன்வரவில்லை. 50 ஆண்டுக் காலத்திற்கும் மேலாக ஜனநாயகரீதியான போராட்டங்களை நடத்தினார்கள். ஏதோ ஒருசில ஜனநாயகவாதிகள், சிங்கள அரசிலே பதவி வகித்தவர்கள், தமிழர்களுக்கு ஏதாவது உறுதி கொடுக்க வந்தால், அவர்களும் பலாத்காரமாக வெளியேற்றப்பட்டார்கள், கொல்லப்பட்டார்கள் அல்லது பதவியிறக்கம் செய்யப்பட்டார்கள். இந்த நிலையில்தான் தமிழினத் தலைவர் தந்தை செல்வா அவர்களுடைய தலைமையில் வட்டுக்கோட்டை மாநாட்டிலே தமிழர்களுக்கு உண்டான தனி நாடு போன்றதொரு கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அதுதான் பின்பாக தனி ஈழக் கோரிக்கையாக மலர்ந்தது. எனவே, தனி ஈழம் அவர்கள் கேட்கக்கூடிய சூழ்நிலை எப்போது உருவாயிற்று என்று சொன்னால், தமிழ் மொழிக்கு ஓர் அங்கீகாரம் இல்லாதது, தமிழர்கள் சிங்களர்களுக்குச் சமமாக மதிக்கப்படாத சூழ்நிலையினால் உருவாயிற்று. இதைத்தான் சிங்களத்திலேயிருந்து வந்த ஒரு பாதிரியார் அவர்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர், முன்வரிசைத் தலைவர்கள் எல்லோரும் பேச வேண்டும். அதனால் கொஞ்சம் co-operate பண்ணுங்கள்.





**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** சிங்களத்திலேயிருந்து வந்த ஒரு பாதிரியார் மிக அழகாகச் சொன்னார். If there are two langauages, there will be one nation. If there is only one language, there will be two nations. அதாவது, இரண்டு மொழிகள், இரண்டு இனங்கள் என்று சொன்னால், ஒரு தேசமாக இருக்கும். ஒரே மொழி, ஒரே இனம் என்று சொன்னால், இரண்டு தேசங்களாக இருக்கும் என்று சொன்னார்கள். அந்த அடிப்படையில்தான் தமிழர்களுக்குச் சமமான அந்தஸ்து இல்லை, மதிப்பு இல்லை, மரியாதை இல்லை, எனவே தங்களால் அவர்களோடு இணைந்து வாழ முடியாத சூழலில்தான் அவர்கள் தனி ஈழம் கேட்டார்கள். அவர்கள் அதற்காகக் கொடுத்த விலை, இரண்டு இலட்சம் உயிர்கள். எனவே, அப்படிப்பட்ட நியாயத்திற்காகவும், ஜனநாயக உரிமைகளுக்காகவும் போராடிய தமிழ் மக்கள்மீது, சர்வதேசப் போர் விதிமுறைகளுக்கு மாறாக நடந்துகொண்ட ராஜபக்சேவை குற்றவாளிக் கூண்டில் நிறுத்தினால் மட்டும்தான் தமிழர்கள் அங்கே சமமாக வாழ முடியும்; அவர்களும் மனிதர்களாக வாழ முடியும். எனவே, அப்படிப்பட்டதொரு தீர்மானம் இந்த அவையிலே நிறைவேற்றப்படுவது மட்டுமல்ல, அவர் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்படுகின்ற வரையிலே இங்கிருந்து குரல், ஆதரவுக் குரல் ஓங்கி ஒலித்துக்கொண்டேயிருக்க வேண்டும்.

அதுமட்டுமல்ல, இப்போது அங்கே ஈழத்திலே என்ன நடக்கிறது என்பதை அறிந்து வருவதற்கு, மாண்புமிகு அம்மா அவர்களே, உண்மை நிலைமையைத் தெரிந்து வருவதற்காகத் தமிழகத்திலேயிருந்து ஒரு சட்டமன்றக் குழுவை அனுப்பி வையுங்கள். அப்போதுதான், அங்கே இருக்கக்கூடிய நிலைமைகளையெல்லாம் தமிழக மக்களுக்கும் சொல்ல முடியும். இந்திய அரசுக்கும் சொல்ல முடியும். எனவே, இப்போது இந்தத் தீர்மானம் என்பது தமிழகத்தினுடைய வரலாற்றில், உலகத் தமிழர்களுடைய வரலாற்றில், உலகெங்கும் வாழக்கூடிய, அகதிகளாக வாழக்கூடிய 15 இலட்சம் தமிழர்கள், ஈழத்திலே இன்னும், குற்றுயிரும் கொலையுயிருமாக இருக்கக்கூடிய தமிழர்களுக்கு ஓர் ஆதரவுக் கரமாக இருக்கும். இதுதான், ஈழத் தமிழர்களுடைய விடுதலைக்கு உண்டான ஒரு திறவுகோலாக அமையும் என்பதையும் சுட்டிக்காட்டுகிறேன். எனவே, இந்தத் தீர்மானத்தை நான் மனதார வரவேற்று விடைபெறுகிறேன், வணக்கம்.

[2011 ஜூன் 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா.

முற்பகல் 10-40

***முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பக்கத்து நாடான இலங்கையிலே, உலகத் தமிழர்களால் ஈழம் என்று அழைக்கப்படக்கூடிய பகுதியிலே, இந்த நூற்றாண்டில் நடைபெற்ற மிக மோசமான போர்க் குற்றங்களுக்குக் காரணமாகயிருந்த கொடுங்கோலன் ராஜபக்சே, போர்க் குற்றவாளியாக நிறுத்தப்படுவதற்கு இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்தி, மாண்புமிகு தமிழக முதல்வர் இன்று கொண்டு வந்திருக்கக்கூடிய தீர்மானம், உலகம் முழுவதும் வாழக்கூடிய தமிழர்களுக்கு, அவர்கள் பட்ட காயங்களுக்கு மருந்து தடவக்கூடிய ஒரு தலைசிறந்த தீர்மானமாக இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே, பல மனித உரிமை அமைப்புகள், குறிப்பாக, Human Rights Watch ஈழத்திலே தமிழர்களுக்கு எதிராக சிங்களப் பேரினவாத அரசு புரிந்த கொடுங்கோன்மைகளையெல்லாம் விரிவாக அறிக்கைகள் அளவிலே அளித்திருந்தாலும்கூட, தற்போது, ஐ.நா.வினுடைய பொதுச் செயலாளர் பான் கீ மூன் அமைத்த உண்மை அறியும் குழு, இன்று பரிதவித்து நிற்கக்கூடிய இலங்கைத் தமிழர்களுக்கு, ஈழத் தமிழர்களுக்கு ஒரு ஆயுதமாக இராஜபக்சேவை தண்டிப்பதற்கான ஒரு வழியாக அமைந்திருக்கின்றது. ஆனால், இந்தப் போர்க் குற்றங்கள் நடைபெற்றுக்கொண்டிருந்த நேரத்தில், தமிழகத்தில், தமிழர்களுடைய நலனைக் காக்கின்றோம் என்று சொல்லி ஒரு ஆட்சி இருந்தது. இராஜபக்சே என்னென்ன போர்க் குற்றங்களையெல்லாம் செய்தார் என்று எந்த ஐ.நா.-வினுடைய குழு அறிக்கைத் தந்திருக்கின்றதோ அந்த நிகழ்வுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற நேரத்திலே இங்கே உண்ணாவிரத நாடகம் மட்டுந்தான் நடைபெற்றது. (மேசையைத் தட்டும் ஒலி) இதைத் தடுத்து நிறுத்துவதற்காக மத்திய அரசு நடவடிக்கை எடுத்துவிட்டது என்று சொல்லி ஒருசில நிமிடங்களிலே அந்த உண்ணாவிரத நாடகமும் முடிந்து விட்டது. ஆனால், எம் தமிழ் சொந்தங்கள் அழித்தொழிக்கப்பட்டனர். ஆனால், ஆட்சிக்கு வந்த புதிதிலேயே, இந்த முதல் கூட்டத் தொடரிலேயே நம்முடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு இராஜபக்சேவை போர்க் குற்றவாளியாக நிறுத்த வேண்டுமென்று



2011 ஜூன் 8] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

சொல்லியிருக்கக்கூடிய இந்தத் தீர்மானம், ஒவ்வொரு தமிழருடைய உள்ளக் குமுறல்களைப் பிரதிபலிக்கக்கூடிய தீர்மானமாக அமைந்திருக்கிறது. மனித நேய மக்கள் கட்சி இந்தத் தீர்மானத்தை வரவேற்கின்றது. பொருளாதாரத் தடை மட்டும் போதாது. இதற்குமேலே ஒரு படி சென்று, ஏனென்றால் இராஜபக்சே இன்றளவும் போர்க் குற்றத்தைச் செய்து கொண்டு வருகின்றார். இன்றளவும் நம்முடைய ஈழத் தமிழ்ப் பெண்கள் பாலியல் பலாத்காரத்திற்கு இலக்காகி வருகிறார்கள். இதற்கெல்லாம் காரணம், இலங்கை அரசுக்கு, இந்தியப் பேரரசு உதவியாக இருக்கின்றது, தன்னை எப்படியும் காப்பாற்றும் என்று இராஜபக்சே நினைத்துக் கொண்டிருக்கிறார். தமிழக அரசு கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தோடு சேர்த்து நான் ஒரு கோரிக்கையை வைக்கின்றேன். இலங்கையிலே, ஈழத்திலே நம்முடைய தமிழ் மக்கள் வாழ்வுரிமையைப் பெற வேண்டுமென்றால் அதற்கு இந்தியாவே செய்யக்கூடிய ஒன்று இலங்கையுடனான ராஜ்ய உறவை, diplomatic relations-ஐ உடனே துண்டிக்க வேண்டுமென்றும், அதையும் தீர்மானமாக நிறைவேற்ற வேண்டுமென்றும் சொல்லி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த இந்தத் தீர்மானத்தை மனப்பூர்வமாக, உளப்பூர்வமாக வரவேற்று அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, உலக நாடுகள் எல்லாம் ஒன்று சேர்ந்து போர்க் குற்றவாளி என்று அறிவிக்கப்பட்டிருக்கிற இராஜபக்சேவை கூண்டில் ஏற்ற வேண்டுமென்று குரல் கொடுத்திருக்கின்றார்கள். ஐக்கிய நாடுகள் சபை போர்க் குற்றவாளி என்று பிரகடனப்படுத்தியிருக்கின்றது. இந்த நிலையில் மனித நேய மாண்புக்கு மாறாக நடந்து கொண்ட இலங்கை அரசின்மீது பொருளாதாரத் தடையை விதிக்க மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமென்கின்ற தீர்மானத்தைப் பாட்டாளி மக்கள் கட்சி முழுமனதோடு வரவேற்கிறது. தீர்மானத்தைக் கொண்டு வந்த முதல்வர் அவர்களையும், தமிழக அரசையும் வெகுவாகப் பாராட்டுகின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி).

இலங்கைப் பிரச்சினையில், பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனர் மருத்துவர் அய்யா அவர்கள் தொப்புள்கொடி

[திரு. ம. கலை அரசு] [2011 ஜூன் 8

உறவினர்களுக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டுமென்பதில் முனைப்பாகச் செயல்பட்டு வருகிறார்கள் என்பதை இந்த நாடு நன்கு அறியும். பல்வேறு காலக்கட்டங்களில், உண்ணாவிரதம் ஆர்ப்பாட்டம், போராட்டம் என்றெல்லாம் இலங்கை அரசுக்கு எதிராக நடத்தியதையெல்லாம் நாம் நன்கு உணர்வோம். சரித்திரப் புகழ்வாய்ந்த இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கின்ற தமிழக அரசையும், மாண்புமிகு முதல்வர் அவர்களையும் பாராட்டுகிறோம். அதேநேரத்தில் தமிழ் ஈழம் ஒன்றுதான் நிரந்தரத் தீர்வாக இருக்கும் என்பதையும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் இந்தப் பேரவையில் பதிவு செய்கிறோம். இந்த நேரத்தில் கர்நாடகாவில் இருக்கக்கூடிய அந்த மக்களெல்லாம் அவர்களுக்கு ஒரு பிரச்சினை என்று சொன்னால், அவர்கள் அனைவரும் கட்சிக்கு அப்பாற்பட்டு, மதத்திற்கு அப்பாற்பட்டு ஒன்று திரண்டு குரல் கொடுக்கின்றார்கள். அதேபோல், இங்கே இருக்கக்கூடிய தமிழர்களுடைய வாழ்வு மலர வேண்டுமென்பதற்காக நாம் அனைவரும் ஒன்றாகத் திரண்டு, ஓரணியில் நின்று நம்முடைய கொள்கையெல்லாம் இலங்கைத் தமிழர்களுடைய பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும், ஈழம் அமைய வேண்டும் என்பதைக் குறிக்கோளாக ஏற்று, ஓரணியில் நின்று நம்முடைய குரலை ஓங்கி ஒலித்து மத்திய அரசுக்குத் தெரிவிக்க வேண்டுமென்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

*முற்பகல் 10-45*

*__திரு. என்.ஆர். ரெங்கராஜன்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தைப் பொறுத்தவரையில், நம்முடைய தொப்புள்கொடி உறவான இலங்கைத் தமிழர்களின் நலனைப் பாதுகாப்பதிலே காங்கிரஸ் பேரியக்கம் மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. மத்திய அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. போருக்குப் பின்பு பல்வேறு நிதி உதவிகளையெல்லாம் நமது தமிழர்களுடைய நலனுக்காக மருத்துவக் குழுக்கள் போன்றவற்றையெல்லாம் இலங்கைக்கு அனுப்பி அவர்களுடைய நலன் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதிலே மத்திய அரசைப் பொறுத்தவரையிலே மிகுந்த அக்கறை கொண்டுள்ளது என்பதை



2011 ஜூன் 8] [திரு. என்.ஆர். ரெங்கராஜன்]

இந்த நேரத்திலே நான் பதிவு செய்கின்றேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இலங்கைத் தமிழர்களின் நலனுக்காகப் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்த எங்களுடைய அன்புத் தலைவர் ராஜீவ் காந்தி அவர்கள், தன்னுடைய இன்னுயிரையே இலங்கைத் தமிழர்களுக்காக அளித்தார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. அந்த வகையிலே. பல்வேறு நடவடிக்கைகளை மத்திய அரசு எடுத்துக் கொண்டிருக்கின்றது. எனவே, தமிழகத்தைப் பொறுத்தவரையில், இன்றைக்கு இங்கு நிறைவேற்றப்படக்கூடிய தீர்மானத்தை காங்கிரஸ் இயக்கத்தின் சார்பாக வரவேற்று அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.

*__திரு. ந. நஞ்சப்பன்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள இந்தத் தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் முழுமையாக வரவேற்கிறோம். உலகம் எங்கும் இருக்கிற தமிழர்கள், இந்திய அரசு எடுத்த தவறான நடவடிக்கையால் நெஞ்சுடைந்து போன உலகத் தமிழர்கள் 10 கோடி பேர் நெஞ்சத்திலும் பாலை வார்த்ததுபோல, அன்னையாக அமர்ந்து இங்கு ஒரு சிறப்பான தீர்மானத்தைக் கொண்டு வந்ததற்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஈழத்தில் நடைபெறுவது இன்றோ, நேற்றோ தொடங்கப்பட்டது அல்ல. நீண்ட நெடிய நாட்களாக உரிமை பறிக்கப்பட்டு, முடியுரிமை பறிக்கப்பட்டு, வாழ்வுரிமையே பறிக்கப்படுகின்ற சூழ்நிலையில், இராணுவ ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டபோது மக்கள் சாதாரணமான உரிமைதான் கேட்டார்கள். ஆனால், படுகொலைதான் நிகழ்ந்தது. கற்பழிப்புதான் நிகழ்ந்தது. நீண்ட நெடிய இன அழிப்பை தொடர்ச்சியாக நடத்தி வந்தார்கள். இந்தத் தீர்மானத்தில் மிகச் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது இன ஒழிப்பு என்பதை மையப்படுத்தி சுட்டிக்காட்டியிருப்பதை நாம் முழுமையாக வரவேற்கிறோம்.

1947 ஆம் ஆண்டில் 40 இலட்சம் மக்கள் இருந்ததாக அங்கே கணக்கு காட்டப்படுகிறது. ஆனால், இன்றைக்கு வெறும் 18 இலட்சம் மக்கள்தான் இருப்பதாக கணக்கு கூறுகிறது. தொடர்ச்சியாக இன ஒழிப்பு நடைபெற்று வந்திருக்கிறது.

[திரு. ந. நஞ்சப்பன்] [2011 ஜூன் 8

அதுவும் சொல்லப்போனால் அவர்களுடைய நிலம் பறிக்கப்பட்டது, உரிமை பறிக்கப்பட்டது, கலாச்சாரம் மறுக்கப்பட்டது, மொழி மறுக்கப்பட்டது. உச்சகட்டமாகத்தான் அங்கு இருக்கிற இளைஞர்கள் போராடத் தொடங்கினார்கள். அது விடுதலைப் புலிகளா? ஈழ மக்கள் புரட்சிகர முன்னணியா? TELO-வா என்ற கணக்கெல்லாம் பார்க்க வேண்டியதில்லை. நீண்ட நெடிய தமிழர்கள் போராட்டம் அது. உரிமை மறுக்கப்பட்டதால் எழுப்பப்பட்ட போராட்டம். ஆனால், அங்கு நடைபெற்றது இன அழிப்பு முறைதான், இனப் போர்தான். இந்த இனப் படுகொலையை இந்திய அரசே முன்னின்று நடத்தியிருக்கிறது என்பதுதான் எதார்த்தமான உண்மை.

மத்திய அரசு, சிங்கள அரசிற்கு, இலங்கை அரசிற்கு இராணுவத் தளவாடங்கள், பொருளாதார உதவிகள், இராணுவ இரகசியப் பயிற்சிகள் போன்ற அனைத்து உதவிகளையும் செய்து கொடுத்ததோடு, இந்தியத் தூதர்கள், இந்திய இராணுவத் தளபதிகள் அனைவரும் அங்கு அமர்ந்துகொண்டு, அந்தப் போரை வழி நடத்தினார்கள். அங்கேயிருக்கிற ஈழத் தமிழர்களைப் படுகொலை செய்வதற்கு இந்திய அரசே காரணமாக இருந்திருக்கிறது. மறைந்த பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களும், மறைந்த பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களும் ஈழப் பிரச்சினையில் சரியான நிலை எடுத்திருந்தார்கள். ஆனால், இன்றைய காங்கிரஸ் தலைமை தடம் புரண்டு போயிருக்கிறது. அதற்குத் தமிழகத்தில் இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசும், அதன் கூட்டணிக் கட்சிகளும், அதன் கூட்டணியாக இருந்தும்கூட, எவ்விதமான எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை என்பது மட்டுமல்ல; சாதாரணமான தீர்மானத்தை நிறைவேற்றினார்கள்; வெற்றுத் தீர்மானமாகத்தான் அது இருந்தது. ஆக, இன்றைக்கு ஈழப் படுகொலைக்கு மூல காரணம் இந்திய அரசினுடைய கொடூர நடவடிக்கை என்றுதான் உலக அரங்கிலேயே தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஐக்கிய நாடுகள் சபையில் ஏற்கெனவே இலங்கைக்கு ஆதரவாக இந்திய அரசு சென்றிருக்கிறது. இன்றைக்கு ராஜபக்சேவைப் போர்க் குற்றவாளி என்று அறிவித்திருக்கிற நிலையில், ஐக்கிய நாடுகள் சபையும் அறிவித்திருக்கிற நிலையில், ஐக்கிய (குறுக்கீடு) . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்த பிறகு வாய்ப்பு தருகிறேன்.



2011 ஜூன் 8]

**திரு. ந. நஞ்சப்பன்:** ஐரோப்பிய தேசங்கள் எல்லாம் ஒன்றுகூடி அங்கே விவாதம் நடத்திக் கொண்டிருக்கின்ற நிலையில், இந்திய அரசு மௌனம் சாதிக்கிறது. இந்திய அரசு இனப் படுகொலைக்கு ஆதரவாக இருக்கிறது என்பதைத்தான் இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக, உலகம் எங்கும் நடக்கிற இனப் படுகொலையை, ஜனநாயகப் படுகொலையைக் கண்டித்த இந்தியா உலக அரங்கில் தன்னிகரற்ற முத்திரைப் பதித்த இந்தியா, இன்றைக்குத் தடம் புரண்டுபோய் இருப்பதை வேதனையோடு பார்க்கிறோம். ஆக, அதன் பார்வையில் மாறுதல் வேண்டும். இந்திய அரசு அதனுடைய போக்கில் மாற்றத்தைக் காண வேண்டும். இந்திய அரசிற்கு ஈழ மக்களைப் பாதுகாப்பதில் தார்மீக உரிமை உண்டு. இந்திய இலங்கை ஒப்பந்தங்கள் என்ன ஆயின? இலங்கைக்குச் சிக்கல் வரும்பொழுதெல்லாம் ஓடோடிச் சென்ற இந்தியாவினுடைய குரல் என்ன ஆனது? அங்கு இருக்கிற சிங்கள அரசு, அதைத் தூக்கி எறிந்துவிட்ட நிலையைத்தான் நாம் தொடர்ந்து பார்த்திருக்கிறோம். ஆக, உலக அரங்கில் இன்றைக்குத் தனிமைப்படுத்தப்பட்டிருக்கிறது ராஜபக்சேவின் இலங்கை அரசு. எனவே, அவருக்கு ஆதரவாக இந்திய அரசு நடவடிக்கை எடுத்தால், நிச்சயமாக இந்தியாவில் வேறுவிதமான எதிர்ப்புணர்வுகள் கிளம்பும் என்பதை மட்டும் இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டுகிறேன்.

*முற்பகல் 10-50*

தமிழ் மீனவர்கள் 500 பேருக்குமேல் படுகொலை செய்யப்பட்டபோது இந்திய அரசு வேடிக்கை பார்க்கிறது. பாகிஸ்தான்கூட இந்தியாவிற்குப் பகை நாடுதான். உலகில் எந்த நாடும் மீனவர்களைச் சுட்டுக் கொன்றதில்லை; பாகிஸ்தான்கூட சுட்டுக் கொன்றதில்லை. இலங்கை அரசு 500 பேரை சுட்டுக் கொன்றிருக்கிறது. ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களைக் காயப்படுத்தி இருக்கிறது. இந்திய அரசு அவ்வப்போது ஆலோசனை சொல்லுகிறதே தவிர, அதற்கு நிரந்தரத் தீர்வு என்பது நிச்சயமாக வரவில்லை. ஆகவே, இவ்வாறு நிலை எடுத்தால் இந்திய நாட்டின் ஒன்றுமையையும், ஒருமைப்பாட்டையும் காப்போம் என்று சபதம் ஏற்று இருக்கிற நாம், அந்த ஒற்றுமைக்கு வேட்டு வைக்கிற காரியத்தை மத்திய அரசே செய்கிறது என்பதுதான் இந்த நேரத்திலே வெளிப்படுத்தக்கூடிய ஒன்றாக இருக்கும். ஆக, மத்திய அரசு தன்னுடைய போக்கில் மாற்றம் காணாவிட்டால் இந்தத் தேர்தலில்

[திரு. ந. நஞ்சப்பன்] [2011 ஜூன் 8

மக்கள் பலத்த அடி கொடுத்தார்களே, அதுபோல வருங்காலத்திலும் இங்கே வேறுவிதமான எதிர்ப்புணர்வு கிளம்பும். அது நிச்சயமாக வெடித்துக் கிளம்புகிறபோது ஆட்சியாளர்கள் அதற்குரிய தண்டனையை அனுபவிக்க வேண்டிய கட்டாயம் வரும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, வெற்றுத் தீர்மானமாக இல்லாமல், போர்ப் பிரகடனமாக இந்த அவையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வைத்திருக்கிறார்கள். உலகம் எங்கும் இதை வரவேற்பார்கள். நிச்சயமாக இந்தத் தீர்மானம் வெற்றி பெறுகின்ற அளவுக்கு இந்த அரசு தொடர்ந்து முன்முயற்சிகளை எடுக்கும் என்கின்ற நம்பிக்கையோடு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து விடைபெறுகிறேன். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோபிநாத், என்ன சொல்லப் போகிறீர்கள்?

**திரு. கே. கோபிநாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்டை மாநிலமான சிலோன் பிரச்சினையில், தமிழ்நாட்டில் இருக்கிற அத்தனை கட்சிகளும் கட்சி வேறுபாடில்லாமல் நம்முடைய தொப்புள்கொடி உறவின் பிரச்சினைகளைப் பேசிக் கொண்டிருக்கிறோம். இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியும் இதை வரவேற்றது. ஆனாலும்கூட, இதற்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தான் ஏதோ நேராகச் சென்று அங்கு இருக்கிற பிரச்சினைகளைப் பார்த்ததுமாதிரி, மத்திய அரசாங்கத்தைத் தாக்கிப் பேசியிருக்கிறார். Actual-ஆக மத்திய அரசினால்தான் இந்த அளவுக்கு நம்முடைய தமிழ்ச் சகோதரர்களுக்கு உதவி செய்யப்பட்டுள்ளது. எங்கள் தலைவர் ராஜீவ் காந்தி அவர்களையே நாங்கள் பலிகொடுத்தோம் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ரெங்கராஜன் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். இப்போதுகூட அங்கிருக்கிற தமிழின மக்களுக்காக மத்திய அரசாங்கம் என்னென்ன உதவிகள் செய்திருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருமே அந்தப் பிரச்சினையில் ஒன்றாக இருந்து, அங்கு இருக்கிற தமிழ் மக்களுக்காக நாம் குரல் கொடுக்கின்ற நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் மத்திய அரசை தாக்கிப் பேசியவற்றை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று சொல்லி, அதை வன்மையாக நான் கண்டிக்கிறேன்.



2011 ஜூன் 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அங்கே நடந்த எதார்த்தத்தைத்தான் அவர் குறிப்பிட்டார். அவர் ஒன்றும் தாக்கிப் பேசவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ராஜீவ் காந்தி கொலை என்பது யாரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய செயல் அல்ல. இன்றைக்கு முதல்வராக இருக்கக்கூடிய மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட திரு. ராஜீவ் காந்தியினுடைய மரணத்தை வன்மையாகக் கண்டித்து, அதற்கு நியாயம் வழங்கவேண்டும் என்பதற்காக எவ்வளவு அழுத்தமாகத் தொடர்ந்து குரல் கொடுத்துக் கொண்டிருந்தார்கள் என்பதைத் தமிழகம் அறியும். திரு. ராஜீவ் காந்தி மரணமடைந்த நேரத்தில் அவரோடு உடன் இருந்த எங்களுடைய மாநிலச் செயலாளர் திரு. தா. பாண்டியன் அவர்கள் குண்டுக் காயங்களால் பாதிக்கப்பட்டு, இன்றும் அந்தக் குண்டுத் துகள்களை உடலிலே தாங்கிக் கொண்டிருக்கிறார் என்பதையும் காங்கிரஸ் கட்சி நண்பர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, அது வேறு ஒரு சம்பவம். ஆனால், இலங்கையிலே சமீபத்தில் நடைபெற்ற போர் என்பது, ஒரு இன அழிப்புப் போராக, அப்பாவி மக்களைத் தாக்கி, பெண்கள் என்றும், குழந்தைகள் என்றும் பார்க்காமல், ஒரு இனத்தையே அழித்த இனப் போர். அந்தப் போரை நேரடியாக ராஜபக்சே நடத்தினாலும், மறைமுகமாக இந்திய அரசாங்கம் இராணுவ உதவிகளை அனுப்பி, தொழில்நுட்ப உதவிகளை அனுப்பி, இராணுவ நிபுணர்களை அனுப்பி, நமது வரிப் பணத்திலிருந்து ஏவப்பட்ட விண்கலங்களிலிருந்து, செயற்கைக்கோள்களிலிருந்து எப்படியெல்லாம் அங்கே மக்கள் நகர்கிறார்கள் என்பதையும் பார்த்து, அவர்களுக்கு உதவிகளைச் செய்ததன் மூலமாகத்தான் இவ்வளவு பெரிய அழிவு ஏற்பட்டது என்பதை ஐ.நா.-வினுடைய அறிக்கை அப்பட்டமாக வெளிப்படுத்தியிருக்கிறது. அந்த விஷயத்திற்குள்ளே இப்போது போனால் அதிக நேரமாகிவிடும். ஆனால், இவ்வளவு நடந்தும், அன்றைக்கு இங்கே இருந்த மாநில அரசு, மத்திய அரசிலே தொடர்ந்து இடம் வகித்தாலுங்கூட, தீர்மானங்களை நிறைவேற்றினார்களே தவிர, இந்த யுத்தத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு ஒருமுறைகூட ஆக்கப்பூர்வமான நடவடிக்கையை எடுக்கவில்லை என்பது தமிழகத்தினுடைய வரலாறு. *(மேசையைத் தட்டும் ஒலி)* அப்படிப்பட்ட நிலையில், இப்போது

[திரு. சு. குணசேகரன்] [2011 ஜுன் 8

ஐ.நா. ஒரு குழுவை அனுப்பி, ஒரு அறிக்கை வெளியிட்டதற்குப் பின்னால், ஒரு அகிம்சையை விரும்பக்கூடிய, இன்னும் சொல்லப்போனால் உலக அளவிலே நடுநிலை நாடுகளுக்குத் தலைமையேற்ற non-aligned countries-க்குத் தலைமையேற்ற இந்திய நாடு, வெளியுறவுக் கொள்கையில் தடம் புரண்டு, இந்த ஐ.நா. அறிக்கையை ஏற்று, இராஜபக்சேவை சர்வதேசக் குற்றவாளியாக அறிவிக்க வேண்டுமென்று எந்தவொரு வார்த்தையும் சொல்லாமல், ஐரோப்பிய நாடுகள் மனித உரிமையை வலியுறுத்தி அதற்கான நடவடிக்கையில் ஈடுபடுகிற நேரத்தில் தன்னுடைய ராஜ்ஜிய செல்வாக்குகளைப் பயன்படுத்தி, ஒவ்வொரு நாடாகச் சென்று இன்றைக்கு அந்த அறிக்கையை வெளியிடாமல் தடுப்பதற்கும், அந்த அறிக்கையின்மீது நடவடிக்கைகள் எடுக்காமல் இருப்பதற்குமான முயற்சிகளை செய்து கொண்டிருக்கிறார்கள். இது இன்றைக்கு உலகம் அறிந்த உண்மை.

*முற்பகல் 10-55*

எனவேதான், தமிழக மக்கள் கடந்த தேர்தலிலே காங்கிரஸ் கட்சியைத் துடைத்தெறிந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரை, தமிழர் விரோத இயக்கமாக, கட்சியாக மாறியிருக்கிறது. 1956-இலே திராவிட முன்னேற்றக் கழகத்தைத் துவக்கிய நேரத்திலே அறிஞர் அண்ணா அவர்கள், “காங்கிரஸ் கட்சி இந்த மண்ணுக்குச் சொந்தமல்ல, காங்கிரஸ் கட்சி தமிழருக்கு விரோதமான இயக்கம்” என்று இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை எப்படி நடத்தினாரோ அந்தக் கொள்கை காங்கிரஸ் கட்சிக்கு இன்றும் தொடர்கிறது. எனவே, காங்கிரஸ் கட்சி மட்டுமல்ல, காங்கிரஸ் கட்சியோடு துணை நிற்கிற அத்தனை இயக்கங்களுமே தமிழர்களைக் காட்டிக் கொடுக்கிற இயக்கங்கள் என்பதை நான் இந்த நேரத்திலே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** ‘சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம்’ என்று சொல்லத்தக்க, மிகப் பெரும் கொடுமையை கடந்த 25 ஆண்டுக்காலமாக இலங்கையிலே தமிழர்களுக்கு எதிராக அந்த அரசு போர்க் குற்றங்களை, மனித உரிமை மீறல் குற்றங்களை நடத்தியது. தமிழர்களுக்கு ஏற்கெனவே அங்கே இருந்த சம உரிமை



2011 ஜுன் 8] [திரு. அ. சவுந்தரராசன்]

பறிக்கப்பட்டு, மெல்ல மெல்ல தமிழ் மக்களுடைய வேலைவாய்ப்பு சுருக்கப்பட்டு, இனி வாழ வழியில்லை என்கிற நிலையிலேதான் தமிழ் மக்களும் புதியதாக இருந்த பல்வேறு அமைப்புகளும் ஒன்றாகச் சேர்ந்து தமிழ் மக்களுடைய நியாயங்களை நிலைநாட்ட போராட்டத்தைத் தொடங்கினார்கள். இந்தப் போராட்டக் காலம் முழுவதும் தமிழ் மக்கள் கண்ணீரிலும், செந்நீரிலும் குளித்தார்கள்.

தமிழ்நாட்டினுடைய மிக உயர்ந்த மன்றமான இந்த மன்றத்திலிருந்து இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை எதிர்த்தும், அந்த மக்களோடு நம்முடைய ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தவும் ஒரு தீர்மானத்தை முன்மொழிந்திருக்கிற நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வரை நான் மனதாரப் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த மனித உரிமை மீறல்களுக்கான விளக்கங்கள் இந்தத் தீர்மானத்திலேயே விரிவாக இருக்கின்றன. இன்னொரு நாடு என்கிற வகையில் அந்த நாட்டில் அவர்கள் என்ன செய்வார்கள், செய்யமாட்டார்கள் என்பது ஒரு பக்கம். ஆனால், அந்த நாட்டிலேயும் மனித உரிமைகளை விசாரிக்கக்கூடிய ஆணையம் இருக்கிறது. அந்த நாட்டிலேயும் இதுபோன்ற சம்பவங்களை விசாரிப்பதற்கான, உச்ச நீதிமன்ற நீதிபதிகளைக் கொண்ட உயர் மட்டக் குழுக்களை அமைக்க முடியும். நம்முடைய தீர்மானத்தில், அவர்கள் செய்கிறார்கள், இல்லை என்பது பிரச்சினையில்லை. அதிலேயும் அவர்கள் தவறிழைத்தால், அதிலேயும் அவர்கள் செய்ய மறுத்தால், நாம் இதைக்கூட செய்ய மறுக்கிற ஓர் அரசு என்று சொல்ல வாய்ப்பு இருக்கிறதென்கிற வகையில் இலங்கையில் இருக்கிற மனித உரிமை ஆணையம், இலங்கையில் இருக்கிற உச்ச நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதி உள்ளிட்டவர்கள் உள்ளிட்ட ஒரு விசாரணையை அங்கே நடத்த வேண்டும். காரணம், ஐக்கிய நாட்டுச் சபையிலிருந்து நான் ஒரு குழுவை அனுப்புகிறேன் என்ற ஐ.நா. பொதுச் செயலாளர் சொன்னபோது, அந்தக் குழுவை இலங்கைக்குள் அவர்கள் அனுமதிக்கவில்லை. இப்போது அறிக்கை வெளியிட்டிருக்கிற அந்தக் குழுவும்கூட இலங்கைக்குள் செல்லாமலேயே, கிடைக்கிற எல்லா தகவல்களையும் வைத்துக்கொண்டுதான் அவர்கள் இந்த அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். அந்த அறிக்கையிலேயே இவ்வளவு பெரிய கொடுமைகள். மருத்துவ உதவிகளைச் செய்ய செஞ்சிலுவைச் சங்கத்தை அனுமதிக்க முடியாது என்கிற அளவுக்கு

[திரு. அ. சவுந்தரராசன்] [2011 ஜூன் 8

மருத்துவமனைகள்மீது குண்டு வீச்சு, செஞ்சிலுவைச் சங்கத்தை அனுமதிக்க முடியாது, உணவு கொடுக்க முடியாது, மருந்து கொடுக்க முடியாது, எங்களுக்கு எதிராக இராணுவமே கொடுமை செய்கிறது என்ற புகார்களுக்கு எந்தவிதமானத் தீர்வும் இல்லை. மக்களை ஒரே இடத்தில் அவர்கள் குவித்து வைத்ததுகூட விடுதலைப் புலிகளுடைய ஆயுதத் தாக்குதல்களிலிருந்து தங்களைத் தற்காத்துக்கொள்வதற்கான ஒரு மனிதத் தடையாகவே அவர்கள் வைத்திருந்தார்களோ என்று கருதத்தக்க அளவுக்கு அந்தப் பகுதியிலே மக்கள் குவித்து வைக்கப்பட்டார்கள். அதனால் மக்கள் உயிரிழந்தார்கள். ஆகவே, இந்தக் கொடுமையை நிகழ்த்தியவர்கள் ஓர் அரசு. இந்தக் கொடுமையை நிகழ்த்தியவர்கள் ஓர் இராணுவம். ஒரு அரசுக்கு மனித உரிமையை மீறுகிற உரிமை கிடையாது. ஒரு இராணுவம் எந்தச் சூழ்நிலையிலும் மனித உரிமையை காலில் போட்டு மிதிக்கக்கூடாது. மனித உரிமைகளையும், இதர உரிமைகளையும், அடிப்படை உரிமைகளையும் காப்பாற்ற வேண்டிய அரசும், இராணுவமும், போலீசும், அவற்றை மீறி, “வேலியே பயிரை மேய்ந்ததைப்போல்” ஒரு நிலைமையை உண்டாக்குவார்களானால், அது மிகப்பெரிய கொடுமை. அந்தக் கொடுமை இலங்கையிலே நிகழ்ந்திருக்கிறது. ஆகவே, அதற்கு எதிராக நாம் நியாயம் கேட்டுத்தான் தீரவேண்டும். இன்னொரு நாடு என்கிற வகையிலே மத்திய அரசாங்கத்தை நாம் வலியுறுத்த வேண்டியிருக்கிறது. இப்போது மத்திய அரசாங்கத்திற்கு எதிரான தீர்மானத்தை நாம் கொண்டு வந்திருக்கிறோம். மத்திய அரசாங்கத்திற்கு நான் உதவி கேட்டு அல்லது நடவடிக்கை கேட்டு ஒரு கடிதம் எழுதிவிடுகிறேன் என்று சொல்லி நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கையைக் கழுவிவிட்டிருக்கலாம். ஆனால் அப்படி கையைக் கழுவாமல் இந்த மன்றத்தின் தீர்மானமாகவே கொண்டு வந்திருப்பது என்பது இன்னொரு பாராட்டுக்குரியது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால் ஏற்கெனவே அதற்கு முன் உதாரணங்கள் இருக்கின்றன. ஏற்கெனவே இங்கே அஞ்சல்வழி என்பதுதான் ஒரு மிக முக்கியமான அரசியல் வழியாகவே இருந்திருக்கிறது. அவருக்கு ஒரு முற்றுப்புள்ளி இங்கே வந்திருக்கிறது.

*முற்பகல் 11-00*

இந்தத் தீர்மானத்தை நான் வழிமொழிகிறபோது, கனிவோடு முதலமைச்சர் அவர்களுடைய பார்வைக்கு ஒன்றைக்



2011 ஜூன் 8] [திரு. அ. சவுந்தரராசன்]

கொண்டுவருகிறேன். ஒரு அறிவுரையாக அல்லது மற்றதாக நான் சொல்கிறேன் என்று எடுத்துக்கொள்ளக் கூடாது. கனிவோடு ஒரு விஷயத்தை நான் சொல்ல விரும்புகிறேன். ஒரு பொருளாதாரத் தடை என்று அந்தத் தீர்மானத்தில் நாம் முன் வைக்கக்கூடிய அந்த ஆலோசனை, உலகம் முழுவதும் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்ட நாடுகளில், யார் இந்தக் குற்றத்தைச் செய்தானோ, அவன் அந்தத் தடையால் பாதிக்கப்படவில்லை. போர்க் குற்றத்தைச் செய்த இராணுவம் அல்லது போர்க் குற்றத்தைச் செய்த ஆட்சியாளர்கள் இதனால் பாதிக்கப்படப் போவதில்லை. அமெரிக்கா பல நாடுகளின்மீது இதேபோன்ற பொருளாதாரத் தடையை இஷ்டத்திற்கு விதித்தது; ஈராக்கின் மீது விதித்தார்கள். விளைவு, 10 இலட்சம் குழந்தைகள் செத்துமடிந்தன. ஈராக்கில் இப்பொழுது ஒரு தலைமுறையே இல்லை. அநேகமாக 20 வயது வாலிபன் இன்றைக்கு ஈராக்கில் இல்லை என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். கடந்த 20 ஆண்டுகளாக இருந்த அந்தப் பொருளாதாரத் தடை காரணமாக, குறிப்பாக, பொருளாதாரத் தடை விதிக்கப்பட்ட நாடுகளிலே, பெண்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டார்கள். குழந்தைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டார்கள். இப்போது நாம் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுகிறபோது, இலங்கை இராணுவம், ஆட்சியாளர்கள் இந்தப் போர்க் குற்றத்திற்குக் காரணமானவர்கள் என்பவர்களையும், இலங்கை மக்களையும், நம்முடைய தமிழ் மக்கள் உட்பட அவர்களையும் பிரித்துப் பார்க்க வேண்டுமென்று நான் கருதுகிறேன். இந்தப் பொருளாதாரத் தடை மிச்சம் இருக்கிற நம்முடைய சொந்தத் தமிழர்களையும் பாதித்துவிடுமோ என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகுந்த பாசத்தோடு, கனிவோடு நிச்சயமாகப் பார்ப்பார்கள்; பார்க்க வேண்டும் என்பது என்னுடைய பணிவான வேண்டுகோள். அந்த அடிப்படையிலே பொருளாதாரத் தடை எல்லோரையும் பாதிக்கும். அங்கு இருக்கிற குழந்தைகளைப் பாதிக்கும், மற்றவர்களைப் பாதிக்கும் என்பதால் குற்றம் இழைத்தவர்களை நாம் தனியாக pin point பண்ணி அவர்களுக்கு எதிரான நடவடிக்கையை, நாம் வலியுறுத்துவதிலே தவறில்லை, வலியுறுத்துவது என்பது மிகமிக அவசியம். அந்த அடிப்படையிலே நான் என்னுடைய ஒரு திருத்தத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். இந்த மத்திய அரசாங்கம் இவ்வளவு பெரிய கொடுமை நிகழ்வதற்கு இடையிலேயே வலுவாக ராஜ்ய ரீதியாக தலையிட்டு இருப்பார்களானால், இலட்சக்கணக்கான

[திரு. அ. சவுந்தரராசன்] [2011 ஜூன் 8

அல்ல; பல ஆயிரக்கணக்கான தமிழர்களைக் காப்பாற்றியிருக்க முடியும். மிக வலுவாக, ராஜ்ய ரீதியாக மத்திய அரசாங்கம் தலையிட்டு இருக்குமானால், இன்றைக்கு நாம் இவ்வளவு பெரிய புலம்பல்களைக்கூட நடத்த வேண்டிய தேவை இருந்திருக்காது. உள்நாட்டில் நடக்கிற விஷயம் வேறு. எந்த நாடாக இருந்தாலும் மனித உரிமை மீறப்படுவது என்பது வேறு. அது சர்வதேசப் பிரச்சினை என்கிற அடிப்படையில் நாம் பார்க்கவேண்டிய பிரச்சினையாக இருக்கிறது. இதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கனிவோடு பார்க்க வேண்டும் என்று நான் சொன்ன அந்தத் திருத்தத்தோடு இந்தத் தீர்மானத்தை நான் ஆதரிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தி.மு.க. சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை எங்கள் கட்சியின் சார்பில் நாங்கள் முதலிலேயே ஆதரிக்கிறோம். காரணம் இது தேவையான ஒன்று. இலங்கை வாழ் தமிழர் பிரச்சினை நீண்ட நெடுங்காலமாக இருக்கிற பிரச்சினை. தமிழ்நாட்டில் இருக்கிற எல்லா கட்சிகளும் ஒரு விதத்தில் அந்தப் பிரச்சினையை, இலங்கை வாழ் தமிழர்களை ஆதரித்து இருக்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டில் இருக்கிற கட்சிகள் ஒருவருக்கொருவர் மனமாச்சர்யங்களோடு இங்கே போரிட்டுக்கொண்டிருக்கிறோம். என்னைப் பொறுத்தவரையில், ஆயிரம் கருத்து வேறுபாடுகள் ஒவ்வொரு கட்சிக்கும் அணுகுமுறையிலே உண்டு. நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்; நாங்கள் என்ன செய்தோம் என்று பேசுகிற நேரம் இது அல்ல; பேசுகிற இடமும் இதுஅல்ல. பேசுவதற்கு அடுத்து இந்தத் தீர்மானத்தை விட்டு, General Discussion-லேகூட பல பிரச்சினைகளைப் பேசலாம். ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தீர்மானம், ஒட்டுமொத்தமாக இந்தச் சட்டமன்றத்தினுடைய ஏகோபித்தத் தீர்மானமாக தமிழ் மக்களுடைய குரலை எதிரொலிப்பதாக மத்திய சர்க்காருக்கும் தெரிவிக்க வேண்டும்; இலங்கை அரசும் அறிய வேண்டும்.

முற்பகல் *11-05*

இலங்கையின்மீது இப்படிப்பட்ட ஒரு பொருளாதாரத் தடை விதிப்பது தேவையான ஒன்று. காரணம் இலங்கை அரசு



2011 ஜூன் 8] [திரு. துரைமுருகன்]

அட்டூழியம் செய்கிறது என்பதை நாம் பேசிக்கொண்டிருந்தோம், தமிழ் உணர்வுள்ளவர்கள் பேசிக் கொண்டிருந்தோம். தமிழ்நாட்டு மக்கள் பேசினார்கள். இந்தியத் திருநாட்டிலே ஜனநாயகத்திலே நம்பிக்கைக் கொண்ட சிலபேர் பேசினார்கள். ஆனால் இன்றைக்கு ஐ.நா.வினுடைய நடவடிக்கைக்குப் பிறகு உலகம் பேசுகிறது, இலங்கை அரசு தவறு இழைக்கிறது என்று. ஆக, இலங்கை அரசுமீது எத்தகைய தடைகளை விதித்தாலும் சரி, இங்கே நண்பர்கள் சுட்டிக்காட்டியதைப்போல், தூதுவருடைய உறவைத் துண்டித்தாலும் சரி, வேறு எத்தகைய நடவடிக்கைகளை இலங்கையின்மீது மத்திய அரசு எடுத்தாலும், உலகம் நம்மை வரவேற்கும். எனவே, அத்தகைய நிலையில் மத்திய அரசை நாம் ஒட்டுமொத்தமாக வற்புறுத்துகிறோம் என்பதற்கு அடையாளமாக எந்தவிதமான மனமாச்சர்யமும் இல்லாமல் இந்தத் தீர்மானத்தை நாம் ஒட்டுமொத்தமாக ஆதரிக்க வேண்டுமென்று வேண்டி விரும்பி வாழ்த்தி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

***திரு. விஜயகாந்த்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த இந்தத் தீர்மானத்திற்கு எனது சார்பாகவும், எங்களது கட்சியின் சார்பாகவும் முதலில் நன்றியைத் தெரிவித்து வரவேற்கிறோம். அடுத்ததாக, எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பேசினார்கள். இந்தப் பிரச்சினையை நாம் எப்படி அணுகவேண்டுமென்று, ஒரு சிறிய திருத்தத்தோடு உங்களிடம் சொல்லிக்கொள்கிறேன். இந்தப் பிரச்சினையைப்பற்றி போன தடவையே, சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரும், இதே சட்டமன்றத்தில் பேசினார்கள், அப்போது முன்னாள் முதலமைச்சர் அவர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள், அவசர அவசரமாக உண்ணாவிரதம் இருந்து, குடும்பத்தோடு உண்ணாவிரதம் இருந்து, இடையிலே சண்டை நின்றுவிட்டது என்று சொன்னார். ஒரு முதலமைச்சர் அவர்கள் எந்தளவுக்குப் பேசினார்கள் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். அதே முதல்வர் மறுநாள் சொல்கிறார், “மழைவிட்டாலும் தூவானம் விடவில்லை என்று”. இதை எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர் பேசினாலும், இது எந்தளவுக்கு சாத்தியம் என்று தெரியவில்லை. இப்போது வரவேற்பு முக்கியம் என்கிறார். அதேநேரத்தில் பாராளுமன்ற

[திரு. விஜயகாந்த்] [2011 ஜூன் 8

எம்.பி. குழுக்களை இலங்கைக்கு அனுப்பி, அவர்கள் எல்லோரும் இங்கே வந்து தமிழர்களுக்கு சம உரிமை வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னார்களே, (மேசையைத் தட்டும் ஒலி) இலங்கைத் தமிழர்கள் அங்கு எந்தளவுக்குப் பாதிக்கப்பட்டார்கள் என்பது இப்போது தெரியும். அதாவது ஐ.நா. சபை போர்க் குற்றவாளி என்று இராஜபக்சேவை சொல்கிறது. இதற்கு முன்னால் இருந்த அரசு சாட்சியாகத்தான் இதையெல்லாம் நான் பேசுகிறேன். பெயர்கள் வேண்டுமானால் எப்படியும் இருக்கலாம். தமிழ் இன சமுதாயத்தை அழித்த பெருமை யாருக்கு இருக்கும் என்றால் போன ஆட்சியாளர்களுக்குத்தான் இருக்கும் என்று அடித்துச் சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏன் இதையெல்லாம் சொல்கிறேன் என்றால், கோபத்திலோ வேறு எதிலும் என்னுடைய பிரதிபலிப்பு இல்லை. முன்னொரு காலத்தில், சாலிகிராமத்தில் நான் குடியிருந்த இடத்தில்தான் இலங்கைத் தமிழர்களெல்லாம் இருந்தார்கள். அப்போது அவர்களுக்காக எவ்வளவோ பிரச்சினைகளை நான் சந்தித்திருக்கிறேன். அவர்களிடம் நான் பேசியிருக்கிறேன். அவர்கள் படிப்பதற்கும், இலங்கை செல்வதற்கும் நான் உதவி இருக்கிறேன். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பின் வரிசையில் அமர்ந்திருக்கும் உறுப்பினர்கள் அமைதியாக இருக்கவும். நீங்கள் பேசுங்கள்.

**திரு. விஜயகாந்த்:** இரண்டு நாட்களுக்கு முன்பு டி.வி.யிலே சொன்னார்கள். கிட்டத்தட்ட ஒரு பகுதியிலே 8 இலட்சம் தமிழர்களைக் காணவில்லை என்று. நான் சொல்லவில்லை; இலங்கை அரசின் மக்கள் தொகை கணக்கெடுப்பில் சொல்கிறார்கள். இதை நான் டி.வி.யிலும் பார்த்தேன்; நாளிதழிலும் படித்தேன். அந்த 8 இலட்சம் பேரில் கிட்டத்தட்ட 4 இலட்சம் பேர் எங்கே இருக்கிறார்கள் என்று இலங்கை அரசைக் கேட்டதற்கு, முள்வேளியில் 40 ஆயிரம் தமிழர்களைக் கொன்றது போக, மீதி 4 இலட்சம் தமிழர்கள் எங்கே என்று கேட்கும்போது, தெரியாது; வெளிநாட்டிற்குச் சென்று இருக்கலாம் என்று வாய்கூசாமல் சொல்கிறார்கள். இந்த நான்கு இலட்சம் பேர் எங்கே போயிருக்கிறார்கள் என்று கேட்கிறார்கள். அந்தளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் இலங்கைத் தமிழர்கள்.

அதேமாதிரி எதிர்க்கட்சி உறுப்பினர் காங்கிரஸ் கட்சியை இந்த மாதிரி பழி கூறவேண்டாம் என்று சொன்னார். எனக்கு இதில்



2011 ஜூன் 8] [திரு. விஜயகாந்த்]

என்ன தோன்றுகிறது என்றால், எல்லோருமாக சேர்ந்து 1972 இல் இருந்து வஞ்சிக்கப்பட்டது தமிழ்நாடு. திராவிட முன்னேற்றக் கழகத்தால் வஞ்சிக்கப்பட்டே இருந்துவந்திருக்கிறது தமிழ்நாடு. காவிரி பிரச்சினையாக இருந்தாலும் எந்தப் பிரச்சினையைத் தொட்டாலும், இன்றுவரை தமிழ்நாடு பாதிக்கப்பட்டது திராவிட முன்னேற்றக் கழகத்தால்தான். (குறுக்கீடுகள்) நான் பேசி முடித்துவிடுகிறேன். பிறகு யாராக இருந்தாலும் பேசலாம். (குறுக்கீடுகள்) இதை ஏன் நான் சொல்கிறேன் என்றால், பேப்பரில் படித்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர் பேசி முடித்துவிடட்டும். (குறுக்கீடுகள்) நான் குறுக்கீட்டை allow பண்ணவில்லை. (குறுக்கீடுகள்) I am not allowing. Please sit down. உட்காருங்கள், அவர் பேசி முடிக்கட்டும்.

**திரு. விஜயகாந்த்:** இதை நான் சொல்லவில்லை. வரலாறு சொல்கிறது. இதை ஏன் நான் சொல்கிறேன் என்றால், பேப்பரில் படித்து மீட்டிங்கில்கூட பேசினேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Please sit down. உட்காருங்கள். அவர் பேசிமுடிக்கட்டும். உட்காருங்கள், உட்காருங்கள் (குறுக்கீடுகள்). அவர் சொல்லி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) ஒரு எதிர்க்கட்சித் தலைவர் பேசுகிறார். நீங்கள் குறிப்பெடுத்துக்கொள்ளுங்கள். பின்னர் பேசலாம். (குறுக்கீடு) திரு. விஜயகாந்த், பேசுங்கள்.

முற்பகல் 11-10

**திரு. விஜயகாந்த்:** நீங்கள் பதில் சொல்லும்போது சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) ஆகையினாலே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசட்டும். நான் இப்போது குறுக்கிட allow செய்யவில்லை. (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். I am not allowing.

**திரு. விஜயகாந்த்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்திற்கு நாங்கள் வரவேற்புக் கொடுக்கிறோம். (குறுக்கீடுகள்) பொருளாதாரத் தடையை விதிக்க வேண்டுமென்று நாங்கள் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர் தன்னுடைய கருத்தை இங்கே சொல்கிறார். முதலில் அவர் என்ன சொல்கிறார் என்று கேட்டுக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்)

[பேரவைத் தலைவர்] [2011 ஜூன் 8

I am not allowing. Please sit down. *(குறுக்கீடுகள்)* அனைவரும் உட்காருங்கள்.

**திரு. விஜயகாந்த்:** சாதாரண குடிமகனாக இருந்து, சட்டமன்ற உறுப்பினராக ஆனவன். *(குறுக்கீடுகள்)* நான் பாதிக்கப்பட்டவன். *(குறுக்கீடுகள்)* விவசாய மக்கள் பாதிக்கப்பட்டதால் நான் பேசுகிறேன். பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம். *(குறுக்கீடுகள்)*

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நீங்கள் உட்காருங்கள். உங்கள் கருத்தைச் சொல்லிவிட்டீர்கள், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* இல்லை, இல்லை. *(குறுக்கீடுகள்)* எதிர்க்கட்சித் தலைவர் பேசி முடிக்கட்டும்.

**திரு. விஜயகாந்த்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இன்றைக்கு இவ்வளவு தூரம் குரல் கொடுக்கிறார்கள். கடந்த ஆட்சியிலே அவர்கள் எங்களைப் பேச விட்டார்களா? இங்கேயிருக்கிற சட்டமன்ற உறுப்பினர் யாருக்காவது சபையிலே பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தார்களா? வாய்ப்புக் கொடுக்காதவர்கள்தான் இன்றைக்குப் பேசுகிறார்கள். நான் அன்றைக்கு இதே இடத்திலே உட்கார்ந்திருந்தேன். முதன்முதலாகப் பேசும்போது 1/2 மணி நேரம், அதன்பிறகு 20 நிமிடங்கள், பிறகு 10 நிமிடங்கள், பேரவைத் தலைவரிடம் கேட்டால் 5 நிமிடம் கொடுத்தார்கள். இன்றைக்கு உண்மையைச் சொல்கிறேன். உண்மையிலேயே நான் தேர்தல் பிரச்சாரத்திலே பேசும்போது, அவர்கள் பதில் குரல் கொடுத்தார்களா? இன்றைக்கு சட்டசபையிலே மட்டும் பேசுகிறார்களே? *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும். எதிர்க்கட்சித் தலைவர் பேசட்டும்.

**திரு. விஜயகாந்த்:** என்னுடைய உணர்வுகளை இங்கே நான் பிரதிபலிக்கிறேன். அதேபோல, மாண்புமிகு முதலமைச்சர் அவருடைய உணர்வுகளை இங்கே பிரதிபலித்திருக்கிறார்கள். அதை நானும், என்னுடைய கட்சியும் வரவேற்கிறோம் என்று சொல்லிக்கொண்டு அமர்கிறேன். *(குறுக்கீடுகள்)* நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*



2011 ஜூன் 8]

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசிவிட்டீர்கள். *(குறுக்கீடு)* அவருடைய கருத்தை அவர் சொல்லிவிட்டார். வேறொரு சந்தர்ப்பத்திலே நீங்கள் பேசுங்கள். *(குறுக்கீடுகள்)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)*

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் தீர்மானத்தில் என்னையும் இணைத்துக்கொள்கின்றேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கை நாட்டிற்கு பிரிட்டிஷ் அரசாங்கத்திடமிருந்து விடுதலை கிடைத்துவிட்டாலும், அங்கு வாழும் தமிழர்கள், தங்கள் சொந்த நாட்டிலேயே இரண்டாம் தர குடிமக்களாகக் கருதப்பட்டனர். இதனையடுத்து, தமிழர்களுக்கு எதிரான இலங்கை அரசின் அடக்குமுறைகளை எதிர்த்தும் “சுயாட்சி அந்தஸ்து” தனி ஈழம் உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு உட்பட பல்வேறு தமிழ் அமைப்புகள் 1980-களிலிருந்து தொடர்ந்து குரல் எழுப்பிப் போராடியதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உட்பட தமிழ்நாட்டிலுள்ள அத்தனை அரசியல் கட்சிகளும், தமிழக மக்களும், இலங்கைத் தமிழர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதிலும், அவர்களுக்குச் சம உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பதிலும் மிகுந்த விருப்பம் கொண்டிருந்தார்கள். இது மட்டுமல்லாமல், அவர்களுக்குத் தங்களுடைய தார்மீக ஆதரவினையும் அளித்தனர்.

இந்தச் சூழ்நிலையில், தமிழீழம் என்ற போர்வையில் தீவிரவாதம் தலைதூக்க ஆரம்பித்து, இதன் காரணமாக, தமிழ்ச் சகோதரர்களே படுகொலை செய்யப்பட்ட சம்பவங்கள் எல்லாம் நடந்தேறின. இதன் உச்சகட்டமாக இந்திய நாட்டின் பாதுகாப்பிற்கும், இறையாண்மைக்கும், ஒருமைப்பாட்டிற்கும் ஊறு விளைவிக்கும் வகையில், முன்னாள் பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள், விடுதலைப் புலிகள் அமைப்பினரால் 1991 ஆம் ஆண்டு தமிழ் மண்ணில் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டார்.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2011 ஜூன் 8

இதனையடுத்து, விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதிருந்த அனுதாபம் கடுமையான எதிர்ப்பாக மாறிவிட்டது.

1992 ஆம் ஆண்டு நான் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தபோது, என்னுடைய வற்புறுத்தலின்பேரில், விடுதலைப் புலிகள் இயக்கத்தை 1967 ஆம் ஆண்டு சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின்கீழ் மத்திய அரசு தடை செய்து, அந்தத் தடை உத்தரவு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நீட்டிக்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 11-15

இது மட்டுமல்லாமல், முன்னாள் பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி கொலையில் முதல் குற்றவாளி பிரபாகரனை உடனடியாக இலங்கை அரசு கைது செய்து இந்திய அரசிடம் ஒப்படைக்க வேண்டுமென்றும், தடை செய்யப்பட்ட இயக்கத்தைச் சார்ந்த எவரையும் இந்தியாவிற்குள் நுழைய அனுமதிக்காமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மத்திய அரசை வலியுறுத்தி 2002 ஆம் ஆண்டு இந்தச் சட்டமன்றப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இலங்கை அரசின் அதிபராக திரு. மஹிந்தா ராஜபக்சே பொறுப்பேற்றுக் கொண்டார். 2006 ஆம் ஆண்டு மே மாதத்தில் தமிழகத்திலும் துரதிருஷ்டவசமாக ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. மைனாரிட்டி தி.மு.க. அரசுக்கு திரு. மு. கருணாநிதி தலைமை வகித்தார். மத்தியிலும், தி.மு.க. அங்கம் வகிக்கும் காங்கிரஸ் தலைமையிலான ஆட்சி 2004 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது.

இந்தச் சூழ்நிலையில், இலங்கையில் அமைதியை ஏற்படுத்தும் போர்வையில் தமிழர்கள் மீதான அடக்குமுறைகளை இலங்கை அரசு கட்டவிழ்த்துவிட ஆரம்பித்தது. 2008 ஆம் ஆண்டு துவக்கத்தில், இலங்கை இராணுவத்தினர் 100 பேருக்கு அரியானா மாநிலத்தில் இந்திய இராணுவம் இரகசியமான முறையில் போர் பயிற்சி அளித்ததாகவும், இலங்கை இராணுவத்தினருக்கு அதிநவீன ரேடார் கருவிகள் உட்பட பல்வேறு வகையான ஆயுதங்களை இந்திய அரசு வழங்கியதாகவும், இந்திய இராணுவத்தின் மூத்த அதிகாரிகள் சிலர் இலங்கை சென்று வந்ததாகவும், அப்போது ஊடகங்களில் செய்திகள் வந்தன.



2011 ஜூன் 8] [செல்வி ஜெ ஜெயலலிதா]

அப்போது முதலமைச்சராக இருந்த திரு. கருணாநிதிக்கு இவை அனைத்தும் நன்கு தெரிந்திருக்கும். இந்தியாவிடமிருந்து தனக்குத் தேவையான இராணுவ உதவிகளைப் பெற்றுக்கொண்ட இலங்கை இராணுவம், 2008 ஆம் ஆண்டு இறுதியிலும், 2009 ஆம் ஆண்டு துவக்கத்திலும் இலங்கைத் தமிழர்களைக் கடுமையாகத் தாக்க ஆரம்பித்தது.

இலங்கையில் போர் நிறுத்தத்தை ஏற்படுத்த, இலங்கை அரசை மத்திய அரசு நிர்ப்பந்திக்க வேண்டுமென மத்திய அரசில் அங்கம் வகிக்கும் தி.மு.க. வலியுறுத்த வேண்டுமென்றும், இதற்கு காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசு செவிசாய்க்கவில்லையெனில், மத்திய அரசுக்கு அளித்துவரும் ஆதரவினை தி.மு.க. விலக்கிக்கொள்ள வேண்டுமென்றும் நான் பலமுறை வற்புறுத்தினேன். ஆனால், அப்போது மைனாரிட்டி தி.மு.க. அரசின் முதலமைச்சராக இருந்த கருணாநிதியோ அதைச் செய்யவில்லை. மாறாக, “அனைத்துக் கட்சிக் கூட்டம்”, “சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் கூட்டம்”, “தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தீர்மானம்”, “மனிதச் சங்கிலி போராட்டம்”, “பிரதமருக்குத் தந்தி”, “நாடாளுமன்ற உறுப்பினர்கள் இராஜினாமா என்ற அறிவிப்பு”, “இராஜினாமா கடிதங்களைத் தானே பெற்றுக்கொண்டது”, “இறுதி எச்சரிக்கை என்ற அறிவிப்பு” என பல்வேறு வகையான நாடகங்கள்தான் முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதியால் நடத்தப்பட்டன.

இவற்றின் உச்சகட்டமாக, காலை சிற்றுண்டியை வீட்டில் முடித்துவிட்டு தலைமைச் செயலகம் செல்லும் வழியில் (மேசையைத் தட்டும் ஒலி) திடீரென்று “போர் நிறுத்தம் ஏற்படும் வரை உண்ணாவிரதம்” என்று அறிவித்து, கடற்கரையில் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொள்ள ஆரம்பித்தார் முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி. மதிய உணவு வேளை வந்தவுடன், நண்பகல் 12-00 மணியளவில் “விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையை இலங்கை அரசு முடித்துக்கொண்டுவிட்டது” என்ற செய்தியை ஊடகங்களுக்கு அறிவித்துவிட்டு, தன்னுடைய உண்ணாவிரதத்தை முடித்துக்கொண்டுவிட்டார். இதன்மூலம் “உண்ணாவிரதம்” என்னும் அறப்போராட்டத்தைக் கேலிக்கூத்தாக்கிவிட்டார் முன்னாள் முதலமைச்சர். (மேசையைத் தட்டும் ஒலி)

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2011 ஜூன் 8

“போர் நிறுத்தம் ஏற்பட்டுவிட்டது” என்ற முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதியின் பேச்சைக் கேட்டு, பாதுகாப்பாகப் பதுங்குக் குழிகளில் பதுங்கியிருந்த இலட்சக்கணக்கான அப்பாவித் தமிழர்கள் வெளிவந்தனர். இவ்வாறு வெளிவந்த அப்பாவி இலங்கைத் தமிழர்கள்மீது இலங்கை இராணுவத்தினர் கொத்துக்கொத்தாக இடைவிடாது குண்டுகளை வீசி அவர்களை ஈவு இரக்கமின்றி படுகொலை செய்தனர். இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர்கள் இலங்கை இராணுவ முகாம்களில் கம்பிகளாலான வேலிகளுக்குப் பின்னால் அடைத்து வைக்கப்பட்டதாகவும், முகாம்களில் அடைக்கப்பட்டுள்ள தமிழ்ப் பெண்கள் இலங்கை இராணுவப் படையினரின் கண் முன்னேயே பொது இடங்களில் இயற்கை உபாதைகளைக் கழிக்கக்கூடிய நிலைமைக்கும், குளிக்கக்கூடிய நிலைமைக்கும் ஆளாக்கப்பட்டதாகவும், தமிழர்கள் குடியிருந்த பகுதிகளிலெல்லாம் சிங்களர்கள் குடியேறியிருப்பதாகவும் செய்திகள் வந்தன. ஆனால், கனிமொழி உட்பட ஐக்கிய முற்போக்குக் கூட்டணி சார்பில் இலங்கை சென்று, இலங்கை அதிபர் ராஜபக்சேவுடன் சிரித்துப் பேசி, விருந்துண்டு, பரிசுப் பொருட்களைப் பெற்று சென்னை திரும்பிய நாடாளுமன்றக் குழுவோ, (மேசையைத் தட்டும் ஒலி) “இலங்கைத் தமிழர்கள் எல்லோரும் நலமாக இருக்கிறார்கள்” என்று ஒரு உண்மைக்கு மாறான தகவலை வெளியிட்டது. உண்மை நிலை என்னவென்றால், போரினால் இடம் பெயர்ந்த தமிழர்கள் மறுவாழ்வு பெறாமல், இன்னமும் அவதிப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

*முற்பகல் 11-20*

“போர் நிறுத்தம் ஏற்பட்டுவிட்டது” என்ற உண்மைக்கு மாறான தகவலைக் கூறி, இலங்கைத் தமிழர்களை இலங்கை இராணுவத்திடம் காட்டிக் கொடுத்துவிட்டார் முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி. (மேசையைத் தட்டும் ஒலி) “தமிழினப் பாதுகாவலர்” என்று தன்னைத்தானே சொல்லிக்கொண்டு, தமிழினப் படுகொலைக்குத் துணை போயிருப்பதைப் பார்க்கும்போது, “உறவு போல் இருந்து, குளவி போல் கொட்டுவது” என்னும் பழமொழிதான் நினைவிற்கு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)



2011 ஜூன் 8] [செல்வி ஜெ ஜெயலலிதா]

இவற்றையெல்லாம் நான் இங்கே சுட்டிக்காட்டுவதற்குக் காரணம், முன்னாள் முதலமைச்சரைக் குற்றம்சாட்ட வேண்டும்; முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசை குறை சொல்ல வேண்டுமென்பதற்காக அல்ல. “அப்பாவி இலங்கைத் தமிழர்கள் உயிரிழப்பதற்கு முந்தைய அரசு காரணமாக அமைந்துவிட்டதே” என்ற ஆற்றாமையால்தான், இவற்றை நான் இங்கே குறிப்பிடுகிறேன். முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசின் சுயநலப் போக்கு மற்றும் கையாலாகாத்தனம் காரணமாக, பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் இலங்கை இராணுவத்தின் குண்டு மழைக்குப் பலியாகியிருக்கிறார்கள்; குண்டு மழைக்கு விலக்களிக்கப்பட்ட பகுதி மற்றும் மருத்துவமனைகள் மீதெல்லாம், இலங்கை இராணுவம் குண்டு மழை பொழிந்திருக்கிறது; மனிதாபிமான அடிப்படையில் நிவாரணப் பொருட்கள் மக்களைச் சென்றடைவதை இலங்கை அரசு தடுத்து நிறுத்தியிருக்கிறது; உணவு மற்றும் குடிநீர்ப் பற்றாக்குறை காரணமாக, ஏராளமான தமிழர்கள் மரணமடைந்துள்ளனர்; மனித உரிமை மீறல்கள் நிகழ்ந்துள்ளன.

இந்தக் காரணங்களுக்காகத்தான் இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இங்கே பேசிய மாண்புமிகு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்டு கட்சி உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள், “பொருளாதாரத் தடையைக் கொண்டு வர வேண்டும்” என்ற வரிகளை விலக்கிக் கொண்டால் என்ன என்ற ஒரு கருத்தை இங்கே தெரிவித்தார். இதனால் அப்பாவித் தமிழ் மக்களும் பாதிக்கப்படுவார்களே என்ற ஒரு கருத்தைச் சொன்னார். இப்போதே இலங்கை அரசு யாருக்கும் பணியவில்லை. அங்கே வாழ்கின்ற இலங்கைத் தமிழர்களுக்கு, சிங்களர்களோடு அனைத்து உரிமைகளையும், குடியுரிமைகளையும் வழங்க வேண்டுமென்று இந்தியா சொன்னாலும், யார் சொன்னாலும், அவர்கள் அதை மதிக்கவில்லை. அதனால், அவர்களை எப்படி வழிக்குக் கொண்டு வருவது? அவர்களை வழிக்குக் கொண்டு வருவதற்கு ஒரே வழி பொருளாதாரத் தடைகள்தான். இதுவொரு தற்காலிகமான முறைதான். இந்திய அரசும், இன்னும் சில நாடுகளும் இணைந்து, இலங்கை அரசின்மீது ஒரு பொருளாதாரத் தடையைக் கொண்டு வந்தால், குறுகிய காலத்திற்குள்ளேயே நாம் சொல்வதை இலங்கை அரசு கேட்டுத்தான் ஆக வேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஏற்படும். (மேசையைத் தட்டும் ஒலி) வேறு வழியில்லை என்பதற்காகத்தான் இதைச் சேர்த்திருக்கிறோம்.

இந்தத் தீர்மானத்தின்மீது இங்கே கருத்துத் தெரிவித்துப் பேசிய இன்னும் சில மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபோது, ஐ.நா. சபை ராஜபக்சேவை போர்க் குற்றவாளி என்று அறிவித்துவிட்டதாக இங்கே தெரிவித்தார்கள்; அப்படியில்லை. ஐ.நா. சபையின் பொதுச் செயலாளர் திரு. பான் கீ மூன் அவர்கள் ஒரு குழுவை அமைத்து, அவர்கள் அங்கே நிகழ்த்தப்பட்ட போர்க் குற்றங்களைப் பற்றி ஓர் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென்று உத்தரவிட்டார். அந்தக் குழு சமர்ப்பித்த அறிக்கையில், இப்படிப்பட்ட போர்க் குற்றங்களெல்லாம் நிகழ்த்தப்பட்டதாகக் கூறப்படுகிறது; அங்கே வாழ்கின்ற தமிழ் மக்கள்மீது இத்தகைய குற்றங்களெல்லாம், கொடுமைகளெல்லாம் நிகழ்த்தப்பட்டுள்ளன என்பதையெல்லாம் தெரிவித்துவிட்டு, இதனை இலங்கை அரசே விசாரிக்க வேண்டும் என்றுதான் சொல்லியிருக்கிறார்களே தவிர, இதை உறுதியும் செய்யவில்லை; ராஜபக்சேவோ, மற்றவர்களோ போர்க் குற்றவாளிகள் என்று ஐ.நா. சபை அறிவிக்கவுமில்லை. அதனால்தான் இந்தத் தீர்மானத்தில் "இந்திய அரசு போர்க் குற்றம் புரிந்தவர்களை, போர்க் குற்றவாளிகள் என்று பிரகடனப்படுத்த வேண்டும்; இதற்கு ஐ.நா. சபையை வலியுறுத்த வேண்டும்" என்று தீர்மானம் கொண்டு வந்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

எனவே, மனிதாபிமானமற்ற முறையில், ஈவு இரக்கமின்றி பல்லாயிரக்கணக்கான இலங்கைத் தமிழர்கள் சுட்டுக் கொல்லப்படுவதற்குக் காரணமானவர்களைப் போர்க் குற்றவாளிகள் என்று பிரகடனப்படுத்த ஐக்கிய நாடுகள் சபையை இந்திய அரசு வற்புறுத்த வேண்டுமென்றும்; இலங்கையில் உள்ள அகதிகள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கு முழு மறுவாழ்வு அளித்து, அவர்கள் வசித்த இடங்களிலேயே அவர்களை மீண்டும் குடியமர்த்தி; சிங்களர்களுக்கு உரிய அனைத்து குடியுரிமைகளையும் தமிழர்களுக்கு இலங்கை அரசு வழங்கும் வரையில் மற்ற நாடுகளுடன் இணைந்து இலங்கை அரசுமீது பொருளாதாரத் தடையை விதிக்க வேண்டும் என்றும் மத்திய அரசை வலியுறுத்தி, அரசு சார்பில் என்னால் முன்மொழியப்பட்ட தீர்மானத்தினை இந்த மாமன்றம் ஒருமனதாக நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.





*முற்பகல் 11-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள வரலாற்றுச் சிறப்பும், முக்கியத்துவமும் வாய்ந்த இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றும்போது தி.மு.க. வெளிநடப்புச் செய்துள்ளது துரதிருஷ்டவசமானது.

## 7. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது மேலும் விவாதம். முதலில் திரு. பழ. கருப்பையா அவர்கள் உரையினைத் தொடரலாம். உங்களுக்கு உரையாற்ற ஒதுக்கப்பட்ட நேரம் 10 நிமிடங்கள்.

***திரு. பழ. கருப்பையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போற்றுதலுக்குரிய எங்களின் தாய், தமிழ்நாட்டு முதலமைச்சர் வரலாற்றுப் புகழ்மிக்க தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கின்ற இன்றைக்கு இந்த அவையில் ஆளுநரின் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகின்ற வாய்ப்பு கிடைத்தது குறித்து நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

ராஜபக்சே ஒரு போர்க் குற்றவாளி என்றும், அந்தப் போர்க் குற்றவாளியின் நாட்டிற்குப் பொருளாதாரத் தடை விதிக்கப்பட வேண்டுமென்றும், உலக அரங்கின் கவனத்தை ஈர்க்கின்ற வகையிலும், இதற்கு முன்னர் இருந்த அரசு மத்திய அரசோடு இணைந்து செய்த கேடுகளுக்கும், வஞ்சகச் செயல்களுக்கும்

ஈடுகட்டுகின்ற வகையிலும், அடுத்து வந்திருக்கின்ற அம்மாவின் அரசு உலகத் தமிழர்களுக்கு, குறிப்பாக ஈழத் தமிழர்களுக்கு நன்மை செய்கின்றவகையில், அவர்களுடைய உரிமையில் பங்குகொள்கின்ற வகையில், இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிய இந்த அவையில் நானும் ஒரு அங்கமாக, அம்மாவின் தொண்டனாக இருக்கின்ற வாய்ப்பு கிடைத்தது குறித்து நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஈழத் தமிழர்களுக்கு மட்டுமல்ல; தமிழ்நாட்டு மீனவர்களுக்கும் இதுபோல பெருங்குரல் கொடுத்தவர்கள் அம்மா. கச்சத் தீவைப் பற்றி இடையறாது இந்த நாட்டிலே பேசப்படுகிறதே, அது இலங்கைக்கு தூக்கிக் கொடுக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்டாலும், அப்படித் தூக்கி கொடுக்கப்பட்ட காலம், முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் காலமாக இருந்தாலும், அன்றைக்குப் பேருக்கு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டு அவர் அமைதி அடைந்துவிட்டாலும், இத்தனை காலத்திற்குப் பிறகும் இன்றைக்கு தமிழ்நாட்டிலே உள்ள மீனவர்களெல்லாம் இலங்கை அரசால் சுட்டுக்கொல்லப்படுவதற்கு மிகப் பெரிய காரணம், அவர்கள் கச்சத் தீவையொட்டி மீன் பிடிக்கிறார்கள் என்பதுதான். 500 மீனவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார்கள். 500 அனுதாபக் கடிதங்கள் அனுப்பப்படுகின்றன. இதோடு தங்களுடைய கடமை முடிந்துவிட்டதாக அவர்கள் கருதினார்கள். ஆனால், அம்மா அவர்கள் இதற்குத் தீர்வு காணவேண்டுமென்றுதான் நடவடிக்கை எடுக்கிறார்கள். இந்தக் கச்சத் தீவிற்கு அருகில் தான் மீன் வளம் இருக்கிறது. கச்சத் தீவோ தமிழ்நாட்டுக்குச் சொந்தமானது. இராமநாதபுரம் ராஜாவுக்குச் சொந்தமாக இருந்து, சுதந்திர தமிழ்நாட்டிலே இணைந்தது. மத்திய அரசாங்கம் இலங்கை அரசைக் கைக்குள் வைத்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தின் பேரில் அந்தத் தீவைக் கொடுத்தபோது, அன்றைக்குக் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்திருக்க வேண்டிய கருணாநிதி அரசு, பெயருக்கு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டு, இன்று வரையில் அமைதியாக இருக்கக்கூடிய நிலைமையில், அம்மா அவர்கள் மீனவர்களுக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்காக, அவர்கள் ஒரு காரியத்தினைச் செய்தார்கள். நான் கேட்கிறேன், கச்சத் தீவையொட்டி மீன் பிடிக்காமல் கோபாலபுரத்திலா மீன் பிடிக்க முடியும்? கச்சத் தீவில்தானே மீன் வளம் இருக்கிறது. கச்சத் தீவு தமிழ்நாட்டிற்குச் சொந்தமானதுதானே! இதைத் தூக்கிக் கொடுத்துவிட்டாயே ஒரு சுண்டைக்காய் நாட்டிற்கு. அதனால்





என்னுடைய நாட்டில் எதிர்ப்பு ஏற்படுகிறது என்று சொல்லி, திரும்பப் பெறவேண்டும் என்பதற்காக அம்மா உச்ச நீதிமன்றத்தில் ஒரு வழக்குத் தொடுத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தனி ஒரு பெண்ணாக, முதலமைச்சராகக்கூட அல்ல, எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது அவர்கள் தன்னுடைய பெயரிலேயே ஒரு வழக்கினைத் தொடுத்தார்கள். அந்த வழக்கு. . .

*முற்பகல் 11-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கச்சத் தீவு பிரச்சினை சம்பந்தமாக உச்ச நீதிமன்றத்தில் தனி ஒரு பெண்ணாக நான் வழக்கு தொடுக்கவில்லை. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளராக (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்றரை கோடி உறுப்பினர்களின் தலைவியாக இந்த வழக்கை நான் தொடுத்திருக்கிறேன்.

**திரு. பழ. கருப்பையா:** அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மட்டுமல்ல, ஏழு கோடி தமிழர்களின் சார்பாகவும் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களின் குரலாகவும் தான் இந்த வழக்கைத் தொடுத்தார்கள் என்பதிலே ஒரு மறுப்பும் கிடையாது. அந்த வழக்கு தொடுக்கப்பட்ட பிறகுதான் இப்படி ஒரு தீர்வு காணமுடியும் என்று என்னைப் போன்ற எளியவர்களுக்குத் தெரிய வந்தது. அம்மா உச்ச நீதிமன்றத்திலே அந்த வழக்கைத் தொடுத்தபோது சொன்னார்கள், ராஜீவ் காந்தி காலத்திலே ராஜீவ் காந்தியும், ஜெயவர்த்தனாவும் சேர்ந்து ஈழத் தமிழர்களுக்காக ஒரு தனி மாநிலத்தையே ஏற்படுத்தி, அவர்களுக்கு ஒரு முதலமைச்சரை உண்டாக்கி, சில உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பது என்று ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டபோது, அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில்தான் முதலமைச்சராக வரதராஜ பெருமாள் வந்தது. இவற்றிற்கெல்லாம் பிறகு ராஜபக்சே காலத்திலே அப்படி ஒரு மாநிலம் உருவாக்கப்பட்டது செல்லாது என்று சொல்லி, இலங்கை உச்ச நீதிமன்றத்தால் அந்த மாநிலம் இரத்து செய்யப்பட்டது. இதை அம்மா அவர்கள் சுட்டிக்காட்டிச் சொல்லுகிறார்கள், இலங்கை உச்ச நீதிமன்றத்தில் ராஜீவ் காந்தியும், ஜெயவர்த்தனாவும் சேர்ந்து, இவர் இந்த நாட்டின் தலைமை

[திரு. பழ. கருப்பையா] [2011 ஜூன் 8

அமைச்சர், அவர் அந்த நாட்டினுடைய குடியரசுத் தலைவர், இரண்டு பேரும் சேர்ந்து செய்துகொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் தமிழர்களுக்காக ஒரு தனி மாநிலம் உருவாக்கப்பட்டது செல்லாது என்று இலங்கை உச்ச நீதிமன்றத்தில் தீர்ப்பு கூறுகின்றபோது அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், ராஜீவ் காந்தி என்கின்ற மனிதர் அவர் எவ்வளவு பெரிய பதவியில் இருந்தாலும், ஜெயவர்தனா என்கின்ற மனிதர் எவ்வளவு பெரிய பதவியில் இருந்தாலும் இவர்கள் இரண்டு பேரும் செய்து கொண்ட ஒப்பந்தம் தனி ஒப்பந்தம் ஆகுமே தவிர, அது நாட்டின் ஒப்பந்தமாக ஆக முடியாது. ஏனென்றால், அந்த ஒப்பந்தம் இலங்கைப் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்படவில்லை. ஆகவே அந்த ஒப்பந்தம் செல்லாது என்று இலங்கை உச்ச நீதிமன்றம் சொன்னதை அடிப்படையாக வைத்து அம்மா சொன்னார்கள்; கச்சத் தீவை இந்திரா காந்தி, கருணாநிதியின் சம்மதத்தோடு இலங்கை அரசுக்கு அளித்தது, இந்திய பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்படாத காரணத்தினாலே அந்தத் தீர்மானம் செல்லாது என்று சொல்லி அவர்கள் வழக்குப் போட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வழக்கு விரைந்து எடுத்துக்கொள்ளப்படுகின்றபோது இந்தக் கச்சத் தீவு பிரச்சினைக்குத் தீர்வு கிட்டும் என்பதை நான் சொல்லிக்கொண்டு, ஆளுநர் உரையில் ஒன்றிரண்டு செய்திகளைத் தெரிவிக்க வேண்டுமென்று நான் விரும்புகின்றேன்.

இந்த அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தவர்கள் வெளியே போய் சொல்கிறார்கள், 'பழைய நல்ல திட்டங்கள் எல்லாம் கைவிடப்பட்டுவிட்டன' என்று. நான் சொல்ல விரும்புகின்றேன் பழைய திட்டங்கள் ஏன் கைவிடப்பட்டன? அவை கைவிடப்பட்டதற்குக் காரணம் அவை தகுதி இல்லாத திட்டங்கள் என்பதுதான். புதிய திட்டங்கள் கொண்டுவரப்படுவதற்குக் காரணம், பழைய திட்டங்கள் இத்துப்போன திட்டங்கள் என்ற காரணத்தாலும், அதிலே சொந்த சுயநலங்கள் இருந்த காரணத்தினாலும் அந்தத் திட்டங்கள் கைவிடப்பட்டனவே தவிர, வேறு காரணத்தால் அல்ல.

முற்பகல் 11-35

அம்மா, அரசு கேபிளை மீண்டும் உயிர்ப்பித்திருக்கிறார்கள். அவர்களுடைய சென்ற ஆட்சிக் காலத்தின் இறுதியில் அவர்கள்



2011 ஜூன் 8] [திரு. பழ. கருப்பையா]

தனியாருடைய கேபிள் நிறுவனத்தை அரசு கையகப்படுத்துவதற்கு ஒரு சட்டமுன்வடிவைக் கொண்டுவந்தார்கள். அந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றவிடாதவாறு, அன்றைக்கு கவர்னரை கையெழுத்து போடவிடாமல் தடுத்து அந்தச் சட்டமுன்வடிவு நிறுத்தி வைக்கப்பட்டது. ஆனால், அன்றைக்கே அந்தச் சட்டமுன்வடிவைத் திருப்பி அனுப்பியிருந்தால் மீண்டும் அம்மா அதை நிறைவேற்றி இருப்பார்கள். ஆனால், அதற்குப் பிறகு அடுத்த ஆட்சியில் அந்தச் சட்டமுன்வடிவு இரத்து செய்யப்பட்டது. இதிலே மிகப் பெரிய வருத்தம் என்னவென்றால், அதை முன்னாள் முதலமைச்சர் தன்னுடைய குடும்ப நன்மைக்காக அந்தச் சட்டமுன்வடிவை இரத்து செய்துவிட்டு அதனுடைய பலன் தன்னுடைய குடும்பத்து உறுப்பினர்களுக்குப் போக வேண்டுமென்று கருதுகிறபோது தோழமைக் கட்சிகளும் அதற்கு உடந்தையாக இருந்ததுதான். ஒரு தனி மனிதனுடைய குடும்பத்து நன்மைக்காக, தோழமைக் கட்சிகள் பொதுவான நலனைப் பாதிக்கக்கூடியவற்றுக்குக்கூட துணையாக இருந்தார்கள். அப்படி அந்தச் சட்டமுன்வடிவு இரத்து செய்யப்பட்டு, மீண்டும் தனியாருக்கே அந்த கேபிள் டி.வி. போய் சேர்ந்தது. நான் சொல்கிறேன்; நல்ல பல திட்டங்கள் கைவிடப்பட்டன என்று சொல்கிறார்களே, அந்த நல்ல பல திட்டங்கள் யாருக்குப் பலனளித்தன என்பதற்கு ஒரு சிறு கணக்குச் சொல்கிறேன். 1½ கோடி பேருக்கு இலவச டி.வி. வழங்கியதாக அவர்கள் சொல்கிறார்கள். வீதியில் போனவன், வந்தவன் எல்லோருக்கும் விரட்டி விரட்டி டி.வி. கொடுத்தது, அவனுடைய நன்மைக்கா, இவர்களுடைய நன்மைக்கா? (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நாம் பார்க்க வேண்டும். ஒரு ஆளுக்கு கேபிளுக்கு 200 ரூபாய் வசூல் செய்கிறார்கள். 1½ கோடி பேருக்கு அரசுப் பணம் 4 ஆயிரம் கோடி ரூபாயைச் செலவிட்டு, 1½ கோடி பேருக்கு மாதம் ஒன்றுக்கு 300 கோடி ரூபாய் தனியார் கேபிள் நிறுவனத்தால் வசூல் செய்யப்பட்டது. ஒரு மாதத்திற்கு 300 கோடி ரூபாய் என்று சொன்னால், 12 மாதத்திற்கு 3,600 கோடி ரூபாய். அப்படியானால், 5 ஆண்டுகளுக்கு 18 ஆயிரம் கோடி ரூபாய் கேபிள் நிறுவனத்தால் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியினுடைய குடும்பத்தினரால் வசூல் செய்யப்பட்டிருக்கிறது என்றால், அரசுப் பணத்தில் 4 ஆயிரம் கோடி ரூபாய் செலவு செய்து இலவச டி.வி. வழங்கப்பட்டது, மக்களின் நன்மைக்காகவா அல்லது அந்தச் சொந்தக்

[திரு. பழ. கருப்பையா] [2011 ஜூன் 8

குடும்பத்தினுடைய சொந்த நன்மைக்காகவா என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, எல்லா நல்லத் திட்டங்களையும் விட்டுவிட்டார்கள் என்று நீங்கள் சொல்வது, உங்களுடைய குடும்பத்திற்கு நல்லதாக இருந்த திட்டங்களை விட்டுவிட்டார்கள் என்ற பொருளே தவிர, நாட்டிற்கு நல்லதாக இருந்த திட்டங்களை விட்டுவிட்டார்கள் என்பது பொருளல்ல. இப்பொழுது அரசு கேபிள் நிறுவனம் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அதை அரசு கையகப்படுத்தி கடைக்கோடியிலுள்ள சாதாரண கேபிள்தாரர்கள் பாதிக்காமல், இந்த அரசு குறைவான கட்டணத்தில் மக்களுக்கு இதை வழங்கப்போவது என்பது நாட்டு நன்மைக்காகத்தான். உங்களுடைய சொந்த நன்மை வேண்டுமானால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகின்றன்.

அதுமட்டுமல்ல; இந்த கவர்னர் உரையிலேயே என்னை ஈர்த்த இரண்டு வரிகள் உண்டு. கவர்னர் உரையில் 14 ஆம் பக்கத்தில் 16-வது பாராவில் "அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி இல்லையெனில், பொருளாதார வளர்ச்சியினால் மட்டுமே வறுமையை முழுமையாக அகற்றிவிட முடியாது என்ற உண்மையை இந்த அரசு நன்கு உணர்ந்துள்ளது." "அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி இல்லையெனில், பொருளாதார வளர்ச்சியினால் மட்டுமே வறுமையை முழுமையாக அகற்றிவிட முடியாது" என்ற உண்மையை இந்த அரசு அறிந்திருக்கிறது என்பது, இந்த நாட்டில், உலக அழகிகளின் கன்னங்களைப்போல் வழுவழுப்பான தார்ச் சாலைகள் நாடு முழுவதும் போடப்பட்டிருந்தாலும், 40 சதவிகித மக்கள் வறுமையிலே வாழ்கிறார்கள். அவர்களை உள்ளடக்குகின்ற வகையிலே ஆளுநர் உரை கூறுகிறது. மன்மோகன் சிங்கும், அலுவாலியாவும் liberalised economy-ன் மூலமாக இந்த நாடு வளப்பட்டுவிட்டது என்று சொல்வதற்கு மாற்றாக, மேட்டுக்குடியினர்தான் வளப்பட்டிருக்கிறார்கள்; ஏழை எளியவர்களையும் உள்ளடக்கிய பொருளாதாரத் திட்டங்களைத் தமிழ்நாடு அரசு போடும். அதை இந்த அரசு உணர்ந்திருக்கிறது. அவர்களையும் உள்ளடக்குகின்ற வகையில், அந்தத் திட்டங்களின் பலன் ஏழை எளிய மக்கள் பயனடையுமாறு திட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு, பொருளாதார மாற்றம் ஏற்படும் என்று அம்மாவின் தலைமையில் உள்ள தமிழ்நாடு அரசு அறிவித்திருக்கிறது என்பது மிகப் பெரிய



2011 ஜூன் 8] [திரு. பழ. கருப்பையா]

ஒன்றாகும். ஆகவே, பொருளாதாரத் திட்டங்களால் மட்டும் பலன் அடைந்துவிட முடியாது. அது ஏழை எளியவர்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டுமென்று அம்மாவின் அரசு ஆளுநர் உரையில் அறிவித்திருப்பது என்பது மிகவும் சிறந்தது.

இன்னொன்று; ஊரக வீட்டு வசதித் திட்டம்! நேற்று தொடங்கினேன்; அதற்குள் அவை முடிந்துவிட்டது. 75 ஆயிரம் ரூபாய்க்கு ஒரு வீடு என்று சொன்னார்கள். "அழகான வீட்டுக்கு நன்றி, ஒழுகாத வீட்டுக்கு நன்றி" என்று ஆனந்தி என்கின்ற சிறுமியின் பெயரால் தொலைக்காட்சியிலே விளம்பரம் வேறு செய்துகொண்டார்கள். மேற்கூரையே போட முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) ரூபாய் 75 ஆயிரத்தைக்கொண்டு வீட்டுக்கு சுவர்கள்தான் எழுப்ப முடியும். மேற்கூரை இருக்காது. எப்படி ஒழுகாமல் இருக்கும் என்று அவர்கள் சொல்லவில்லை. அதுமட்டுமல்ல, அவர்கள் ஒன்று சொன்னார்கள், 6 ஆண்டுக் காலத்தில் 21 இலட்சம் வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும் என்று. எவனாவது இப்படிச் சொல்வானா? தனக்கு எஞ்சி இருக்கிற காலம் ஒரு ஆண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) தனக்கு எஞ்சி இருக்கிற ஒரு ஆண்டு காலத்தில் எவ்வளவு வீடு கட்டுவோம் என்று உலகத்திலே திட்டம் சொல்வார்களா? அடுத்த ஆட்சிக் காலத்திற்கும் அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திற்கும் சேர்த்து திட்டங்களைச் சொல்வார்களா? (மேசையைத் தட்டும் ஒலி) நான் கேட்கிறேன், ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்? 6 ஆண்டுகளில் 21 இலட்சம் வீடுகள் கட்டுவோம், 12 ஆண்டுகளில் 42 இலட்சம் வீடுகள் கட்டுவோம்; 24 ஆண்டுகளில் 84 இலட்சம் வீடுகள் கட்டுவோம் என்றும் சொல்ல வேண்டியதுதானே? பெருக்கிச் சொல்ல வேண்டியதுதானே? மக்களை பிரமிக்க வைத்து, ஏமாற்ற வேண்டியதுதானே? அந்த அடிப்படையில், அந்த ஆண்டில் கட்டுவோம் என்று சொல்வது 3 இலட்சம் வீடுகள். ஆனால் அதில் எத்தனை ஆயிரம் வீடுகள் கட்டி இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு மந்திரிகளிடம் கணக்கு இருக்கும், சொல்வார்கள். 3 இலட்சம் வீடுகள்தான் ஒரு ஆண்டில் கட்டுவதாகவே சொன்னார்கள். அதிலே பல ஏழைகள் கடனாளிகளானதுதான் மிச்சம்.

முற்பகல் 11-40

அந்தத் தொகைக்குள் வீடு கட்ட முடியாது. அதில் ஒரு பெரிய பித்தலாட்டம் நடந்திருக்கிறது. இரண்டுவிதமான அட்டைகளை

மக்களுக்கு வழங்கியிருக்கிறார்கள். ஒரு அட்டையில் 'த்'-னா என்று எழுதியிருந்தது. மற்றொன்றில் 'நி'-னா, 'த்'-னா என்று எழுதியிருந்தது. என்னமோ சீனா தானா என்று விலாசம் போடுவதுபோல், முதலில் எனக்கு ஒன்றும் புரியவில்லை. என்ன என்று விசாரித்தபோதுதான் சொன்னார்கள். இதை வெளிப்படையாகச் சொல்ல வேண்டியது தானே, ஏதோ இராணுவ ரகசியக் கோடுபோல் சொல்ல வேண்டிய அவசியம் என்ன? 'த்'-னா என்றால் தகுதியுள்ளவன் என்று பொருள் என்றார்கள், தகுதியுள்ள அட்டை. அந்தத் 'த்'-னாவை இவர்கள் வெளிப்படையாகச் சொல்லியிருப்பார்கள். ஆனால் 'நி'-னா, 'த்'-னாவை வெளிப்படையாகச் சொல்ல முடியாது என்பதால் 'த்'-னாவையும் சொல்லவில்லை. 'நி'-னா, 'த்'-னா என்பதற்கு என்ன பொருள் என்றால், நிபந்தனைத் தகுதி. அதாவது தகுதியுள்ளவன் என்பதன் பொருள். அரசு இடத்தில் வீடு கட்டிக்கொள்கிறவன். அதற்கு அரசு அனுமதியளித்து விடும். 'நி'-னா, 'த்'-னா என்பவன் நிபந்தனைத் தகுதியுடையவன். அவன் அரசு இடத்தில் இருக்க மாட்டான். கோயில் இடத்தில் இருப்பான். தனியார் இடத்தில் இருப்பான், வேறு இடத்தில் இருப்பான். இந்த 'நி'-னா, 'த்'-னா அட்டைகள்தான் அதிகம். 21 இலட்சம் அட்டைகளில் 19 இலட்சம் அட்டைகளை வழங்கி முடித்துவிட்டார்கள். இந்த 19 இலட்சம் அட்டைகளில் 'த்'-னா அட்டைகளைவிட 'நி'-னா, 'த்'-னா அட்டைகள்தான் அதிகம். 'நி'-னா, 'த்'-னா என்பது என்னவென்று சொன்னால், இவன் நமக்கு வீடு கிடைக்காது என்று புரிந்துகொண்டு ஓட்டு அளிக்கமாட்டான் என்று இவர்கள் பயந்தார்கள். அதனால்தான் இதை 'த்'-னா, 'நி'-னா, 'த்'-னா என்றெல்லாம் ஆக்கினார்கள். ஆகவே. நான் கேட்கிறேன். இந்த நிபந்தனைத் தகுதியை கோயில் இடங்களிலோ அல்லது தனியார் இடங்களிலோ எவ்வாறு பெறமுடியும் என்பதற்கு என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், தடையின்மைச் சான்றிதழை அவனே பெற்று வரவேண்டும்என்றும் சொல்கிறார்கள். எந்தத் தனியார் இவனுக்குத் தடையின்மைச் சான்றிதழ் தருவான்? எந்தக் கோயிலில் இவனுக்கு தடையின்மைச் சான்றிதழ் கொடுப்பார்கள். இவன் எப்போது 'நி'-னா, 'த்'-னா வீடு பெறுவான்? ஆக இந்த 'த்'-னா கொஞ்சம் பேர்களுக்கு வீடு கொடுப்பதற்கு, அதுவும் கூரையில்லாத வீடு கொடுப்பதற்கு, இந்த 'நி'-னா, 'த்'-னா என்று நிரம்ப நபர்களை ஏமாற்றி, 19 இலட்சம் அட்டைகளை வழங்கினார்கள் என்றால், நான் கேட்கிறேன் இந்த





மாதிரி ஒரு அரசே பொய்மையில் ஈடுபடுமானால்,

"பொய்யும், ஏமாற்றும் தொலைகின்ற காலம் வந்ததே;
நல்லோர், பெரியோர் என்னும் காலம் வந்ததே;
கெட்ட நயவஞ்சகக்காரர்களுக்கு நாசம் வந்ததே"

என்றார்கள். பொய்யும், ஏமாற்றும் தொலைகின்ற காலம் இப்போதுதான் வந்திருக்கிறது. ஒரு மாதத்திற்கு முன்னால்தான் வந்திருக்கிறது. என்ன அநியாயம் இது? மக்களை இப்படி வெளிப்படையாக ஏமாற்றியிருக்கிறார்களே!

கேபிள் டி.வி.-யை தனது சொந்த குடும்ப நலனுக்கு வைத்துக்கொண்டு, மக்கள் நலன்போல் காட்டுவது. 'நி'-னா, 'த்'-னா என்று மக்களுக்குப் புரியாத code word-களைப் போட்டு அட்டை கொடுத்து, உனக்கும் வீடு தருகிறேன் என்று மக்களை ஏமாற்றுவது. இப்படி மக்களை ஏமாற்றியே ஒரு அரசு வாழ வேண்டும் என்கின்ற நிலையில் இருந்து இப்போது நாடு விடுபட்டு இருக்கிறது. ஆனால் முந்தாநாள் முன்னாள் முதல்வர் சொல்கிறார்.

"கையது கொண்டு, மெய்யது பொத்தி வாழ்கின்ற" ஏழைகளுக்குத்தானே வீடு கொடுக்க வேண்டுமென்று நினைத்தேன்; எதற்காக இதை எதிர்க்கிறார்கள்? அம்மா அரசு எதற்காக இதைக் கைவிட வேண்டும் என்று கேட்டிருக்கிறார். நான் உண்மையிலே சொல்கிறேன். அது ஒரு நல்ல பாட்டுதான்!

"கையது கொண்டு, மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலது தழீஇப் பேழையுள்
இருக்கும் பாம்பென உயிர்க்கும் ஏழை."

அந்த ஏழைக்கு இவர் வீடு கட்டவில்லை. அந்த வீடு போதுமானதும் இல்லை. அவன் காலை, கையை நீட்ட முடியாது. அவன் தன் மனைவி மற்றும் பிள்ளைகளோடு உருண்டு புரளக்கூட முடியாது. ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்கள் நல்லபடியாக, உருண்டு புரளட்டும், என்று சொல்லி 300 சதுர அடியில் (மேசையைத் தட்டும் ஒலி) சூரிய மின் சக்தியோடு, பசுமை வீட்டினை கட்டி கொடுக்கப் போகிறார்கள். அதுவும் ரூ.1,80,000-க்குக் கட்டிக் கொடுக்கப் போகிறார்கள். அதனை நீயே கட்டிக்கொள் என்றால் அவன் தாலியை அடகு வைத்துதான் கட்ட வேண்டும். அதுவும் ரூ.75,000-க்குள் வீடு கட்ட முடியாது.

[திரு. பழ. கருப்பையா] [2011 ஜூன் 8

இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ரூ.1,80,000-க்கு 300 சதுர அடியில் வீடு கட்டிக் கொடுக்கப்போகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). அந்தப் பொறுப்பை அரசே ஏற்றுக்கொண்டு வீடுகளைக் கட்டி கொடுக்கப் போகிறது என்பதுதான் தலையாயது. மாண்புமிகு அம்மா அவர்கள் எந்தப் பொறுப்பையும் இன்னொருவர் கையில் விட்டுவிடுவது கிடையாது. அவர்கள் தன் பலத்தைக் கொண்டு ஆட்சி நடத்துகிறவர்கள். தானே முன்னின்று மக்களுக்குத் திட்டங்கள் போய்ச் சேர வேண்டும் என்று நினைப்பார்கள். ஆகவே 'நி'-னா, 'த'-னா-வெல்லாம் ஒழிந்து இன்றைக்கு அம்மாவின் அரசில் பேழையுள் இருக்கும் பாம்பைப் போல் சுருண்டு கிடக்காமல் காலை, கையை நீட்டிக்கொண்டு மக்கள் சௌகரியமாக வீடுகளில் வாழ்கின்ற நிலைமை அம்மாவின் ஆட்சிக் காலத்தில் ஏற்படும் என்று சொன்னால், பழைய திட்டங்களையெல்லாம் நாங்கள் விட்டது நல்லதற்கா கெட்டதற்கா என்று நான் கேட்க விரும்புகின்றேன்?

முற்பகல் 11-45

அது மட்டுமல்ல; கடைசியாக ஒன்று. இந்த நில ஆக்கிரமிப்பு மிகப் பெரிய அளவில் அம்மாவின் கவனத்திற்கு வந்திருக்கிறது. தமிழ்நாடு முழுவதும் இன்றைக்கு மிகப்பெரிய அளவில் நடப்பது என்பது, அந்த land mafia-தான். Land mafia பற்றி ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆளுநர் உரை என்பது அம்மாவின் ஆட்சியின் திட்ட விளக்கவுரைதானே! ஆளுநருக்கு நன்றி செலுத்துகிறோம் என்பது இன்னொரு வகையில் அம்மாவிற்குச் செலுத்துகின்ற நன்றிதானே! (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, நம்முடைய ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். சட்ட விரோதமாகப் பறிக்கப்பட்ட சொத்துக்கள் இந்த ஆட்சியில் மீட்டுத் தரப்படும் என்று ஆளுநர் உரை சொல்கிறது. சட்ட விரோதமாகப் பறிக்கப்பட்ட சொத்துக்கள் இந்த ஆட்சியில் மீட்டுத் தரப்படும் என்று சொன்னால், எதற்கு அவருக்கு அவ்வளவு கோபம் வருகிறது? எந்தெந்தச் சொத்துக்களை மீட்கப் போகிறீர்கள் என்கிறார். நான் சொல்கிறேன், நாடு முழுவதும் சட்ட விரோதமாக Mafia Gangs இந்தச் சொத்துக்களையெல்லாம் கைப்பற்றி இருக்கின்றன. அவர், அம்மா ஆட்சியில் 15 நாட்களில் என்னென்ன குற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன என்று ஒரு பட்டியல் போடுகிறார். அதிலே மிகவும் குறிப்பாக என்னைக் குறிப்பிட்டு, "பழ. கருப்பையா வீட்டு ஆச்சியினுடைய தாலிகூடப் பறிக்கப்பட்டிருக்கிறது" என்று



2011 ஜூன் 8] [திரு. பழ. கருப்பையா]

சொன்னார். பறிக்கப்பட்டது; ஆனால், 3 மணி நேரத்தில் மீட்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய துணைவியாரிடம் நான் சொன்னேன், "3 மணி நேரத்தில் மீட்கப்பட்டிருக்கிறது; நீ பயப்பட வேண்டாம்; இது கருணாநிதி ஆட்சி இல்லை; அம்மாவினுடைய ஆட்சி; (மேசையைத் தட்டும் ஒலி) அதனாலே பயப்பட வேண்டிய தேவையில்லை; அச்சமில்லாமல் இரு" என்று சொன்னேன்.

அதுமட்டுமல்ல; இவர் பட்டியல் போடுவது ஒரு பக்கம் இருக்கட்டும். இவர்கள் என்ன செய்தார்கள் என்பதற்கு என் தொகுதியில் நடந்த ஒன்றைச் சொல்கிறேன். துறைமுகம் தொகுதியில் அங்கப்ப நாயக்கன் தெரு என்ற ஒரு தெரு இருக்கிறது. அதிலே முஸ்லிம்கள் படிக்கும் உருது பெண்கள் பள்ளி ஒன்று இருக்கிறது. அந்தப் பள்ளிக்குச் சொந்தமான இடத்தை முஸ்லிம் முன்னோர்கள் குறைவான விலையைப் பெற்றுக்கொண்டு கார்ப்பரேஷனுக்குக் கொடுத்திருக்கிறார்கள். கார்ப்பரேஷன் அதை உருது பெண்கள் பள்ளியாக நடத்தி வந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையில் தனியார்கள் அதற்குள் நுழைந்து அந்த இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டுவிட்டார்கள்; பள்ளிபோக மீதமுள்ள காலியிடத்தை. கடந்த 5 ஆண்டுகளாக, ஆளுங்கட்சியினுடைய தயவு இல்லாமல் அது ஆக்கிரமிக்கப்பட்டிருக்க முடியாது. அதைச் செய்தவன் எவனாக இருந்தாலும், அதற்குப் பிறகு கார்ப்பரேஷன் வழக்குத் தொடுத்தபோது, அதற்கு ஸ்டே வாங்கப்பட்டிருக்கிறது. தி.மு.க. அரசு வக்கீலினுடைய துணையில்லாமல் அதற்கு ஸ்டே வாங்கியிருக்க முடியாது. பல ஆண்டுகளாகத் தடையாணை பெறப்பட்டு அந்த இடம் மீட்கப்படாமலேயே இருக்கிறது. நான் சொல்கிறேன் கருணாநிதி அவர்களுக்கு, திருடுகிறவர்கள் எல்லாம் ஆந்திர மாநிலத்திற்குப் போய் விட்டார்கள் என்று அம்மா சொன்னதனுடைய அடிப்படை, போகாமல் இருப்பவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்பதுதானே தவிர, இந்த ஆட்சியில் தப்பானவர்கள் இருப்பார்களா, இல்லையா என்பது கேள்வி இல்லை. அவர் சொல்வதுபோல, எல்லா ஆட்சியிலும் தப்பானவர்கள் இருப்பார்கள். தப்பானவர்களை அம்மாவின் அரசு அனுமதிக்குமா, அனுமதிக்காதா என்பதைத்தான் பார்க்க வேண்டும். அந்த அடிப்படையிலே உங்களுடைய ஆட்சியில் 5 ஆண்டுகாலமாக உருது பெண்கள் பள்ளியின் இடத்தை ஆக்கிரமித்து வைத்திருக்கிறீர்கள். ஸ்டே இன்றைக்கு வரைக்கும் உடைக்கப்படவில்லை. இப்போது அம்மாவினுடைய

ஆட்சியிலேதான் இது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது. அந்த ஸ்டே இன்றைக்கு வரையிலும் இருக்கிறது. அதை எவன் செய்ய முடியும்? இதற்கான ஆயிரம் ஆவணங்களை கார்ப்பரேஷன் பகிரங்கமாக வைத்திருக்கிறது. கமிஷனரிடம் கேட்டால், கமிஷனர் சொல்கிறார், 'நாங்கள் என்ன செய்வது, ஆட்சியினர் எங்களை விடவில்லை' என்று சொல்கிறார். உங்கள் ஆட்சிக்கும், எங்கள் அம்மாவின் ஆட்சிக்கும் உள்ள வேறுபாடு இதுதான். தவறானவர்களைப் பாதுகாப்பது உங்கள் ஆட்சியின் பாங்கு.

இன்னொன்று சொல்கிறேன்; மூர் முதல் தெருவில் உள்ள ஒரு சந்தினை, ஏற்கெனவே நடமாட்டத்தில் இருந்த சந்தினை மறித்து வீடு கட்டிவிட்டார்கள். இதுவும் ஸ்டேயில் இருக்கிறது. சந்தினை மறித்து வீடு கட்டினால் அதற்கும் தி.மு.க. அரசாங்க வக்கீல் ஸ்டே வாங்க இடம் கொடுக்கிறார்; இன்னும் பிராட்வேயையே மறித்து வீடு கட்டியிருப்பார்கள், இன்னொரு முறை அந்த ஆட்சி தொடர்ந்திருந்தால்! இதெல்லாம் நடக்காமல் போனது அம்மாவினுடைய ஆட்சி வந்த காரணத்தினாலேதான். இந்த Land Mafia Gang கலங்கிப் போயிருக்கிறது. நான் ஒன்று மட்டும் சொல்கின்றேன், பிழையானவர்கள் எல்லா ஆட்சியிலும் இருப்பார்கள். பிழையானவர்களை ஒடுக்க வேண்டும் என்று அம்மா நினைக்கிறார்கள், அதுதான் முக்கியமானது. எந்தவொரு ஆட்சியிலும் நல்லவர்கள் நலம்பெற வேண்டும் என்பதுதான் மிக முக்கியமானது என்று சொல்லி என்னுடைய தொகுதியில் ஏராளமான பிரச்சினைகள் உள்ளன. அவற்றில் ஒன்றை மட்டும் சொல்லிவிட்டு அமர விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதி ஒரு விநோதமான தொகுதி. அம்மா என்னை அங்கே நிற்க வைத்து, என்னை ஒரு ஆளாக்கி இங்கே கொண்டு வந்து வைத்திருக்கிறார்கள். ரொம்ப பயந்துவிட்டேன், இந்தத் தொகுதிக்கு முதன்முதலாக நான் போனபோது. அங்கே இஸ்லாமிய மக்கள் ஒரு பகுதி, வட இந்திய மக்கள் இன்னொரு பகுதி, தமிழ் மக்கள் இன்னொரு பகுதி, ஒடுக்கப்பட்ட மக்கள் இன்னொரு பகுதி என நான்கு பகுதிகளாக அங்கே இருக்கிறது. ரொம்ப அதிகமான சேரிகள் உள்ள பகுதி அந்தப் பகுதிதான். என்னுடைய பகுதியில்தான் துறைமுகம் இருக்கிறது; என்னுடைய பகுதியில் இருந்துதான் அம்மா ஆட்சி செலுத்துகிறார்கள்; (சிரிப்பு) பெரிய ஆஸ்பத்திரி இருக்கிறது; ரிசர்வ் பேங்க் இருக்கிறது;





சென்ட்ரல் ஸ்டேஷன் இருக்கிறது; எல்லாமே என்னுடைய தொகுதியிலேதான் இருக்கின்றன. 13 சேரிகளும் என்னுடைய தொகுதியிலேதான் இருக்கின்றன; தெருவிற்கு தெரு ரோட்டோர மக்கள் என்னுடைய தொகுதியிலேதான் இருக்கிறார்கள். ஆற்றோர மக்களுக்கெல்லாம் வீடு கட்டிக் கொடுப்பதாக இப்போது அம்மா அவர்கள் சொன்னபோது, நான் அவ்வளவு மகிழ்ந்தேன். ஏனென்றால் கூவம் ஆறு என்னுடைய தொகுதியைத்தான் ஊடறுத்துக் கொண்டு ஓடுகிறது. (சிரிப்பு) அந்தத் தொகுதியில் உள்ள மக்களுக்கெல்லாம் வீடு கிடைக்கும். ரோட்டோர மக்களுக்காக அம்மா அவர்களிடம் நான் வழிபட்டு வேண்டிக்கொள்கிறேன், இந்த ரோட்டோர மக்களுக்குத் தற்காலித் தீர்வாக night shelters என்று சொல்லப்படுகின்ற இரவு தங்கும் இடங்களை அம்மா ஏற்படுத்தித் தந்து, இரவு நேரத்தில் அவர்கள் தெருவிலே படுக்காமல், இரவிலே அங்கு வந்து படுத்துக்கொள்வதற்கும், காலைக் கடன்களைக் கழித்து, குளித்து விட்டு மீண்டும் வேலைக்குச் செல்வதற்கும் முதலிலே தற்காலிக ஏற்பாடுகளைச் செய்து அவர்கள் வாழ்வில் பெரும் மலர்ச்சியை நீங்கள் ஏற்படுத்தவேண்டும். முதற்கட்டமாக, அதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று என்னுடைய தாய் அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-50*

ஒரே ஒரு செய்தி. வள்ளலார் என்னுடைய தொகுதியிலேதான் வாழ்ந்தார். இந்த சென்னையை "தருமமிகு சென்னை" என்று சொன்னார்.

"தருமமிகு சென்னையில் கந்தக்கோட்டத்துள் வளர்
தலமோங்கு கந்தவேலே!"

என்று பாடினார். இந்த தருமமிகு சென்னையை, 5 முறை ஒருவர் அதருமமிகு சென்னையாக ஆக்கிவிட்டார் (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா மீண்டும் மூன்றாவது முறையாக இதைத் தருமமிகு சென்னையாக ஆக்குவதற்கு வந்திருக்கிறார்கள். வள்ளலார் ஒரு இடத்திலே சொல்லுவார், "கருணை இல்லாத ஆட்சி கடுகி ஒழிய வேண்டும்; அருள் நயந்த நன்மார்க்கர் ஆள வேண்டும்; நல்லோர் நினைத்த நலம் பெற வேண்டும், எல்லோரும் இசைந்து வாழ வேண்டும்" என்று சொன்னார். என்னுடைய தொகுதியில் வாழ்கிற இஸ்லாமிய மக்களும், வட இந்திய மக்களும், ஒடுக்கப்பட்ட

மக்களும், தமிழ்ப் பெருங்குடி மக்களும் ஒருவரோடு ஒருவர் சார்ந்து, ஒருவரை ஒருவர் தழுவி எந்தவித பிணக்கமும் இல்லாமல், என்னுடைய தொகுதியில் மட்டுமல்ல தமிழ்நாடு முழுவதும் ஒருவரை ஒருவர் தழுவி, பாதுகாப்போடு அவர்கள் வாழ்கின்ற நல்லிணக்க அரசாக நம்முடைய அம்மாவின் அரசு திகழும். அந்த நம்பிக்கையை என்னுடைய தொகுதி மக்களுக்கும் நான் ஊட்ட விரும்புகின்றேன். வள்ளலார் சொன்னார்:

"கருணையில்லா ஆட்சி கடுகி ஒழிக,
அருள் நயந்த நன்மார்க்கர் ஆள்க
நல்லோர் நினைத்த நலம் பெறுக
எல்லோரும் வாழ்க இசைந்து"

என்று சொன்னார். நல்லோர்தான் நலம் பெற வேண்டும். கெட்டவன் நலம் பெறக் கூடாது. எப்போதும் மார்க்ஸ் - haves and have nots என்பவர்களுக்கிடையே போர் இருக்கிறது என்று சொன்னதுபோல அம்மாவினுடைய அரசு have nots-னுடைய அரசு. ஆகவே, நல்லோருக்கும், பொல்லோருக்கும் எப்பொழுதும் சண்டை இருக்கும். அம்மாவினுடைய அரசு நல்லோரின் அரசு என்று சொல்லி, "கருணையில்லா ஆட்சி கடுகி ஒழிக; அருள் நயந்த அம்மாவின் ஆட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) நல்லோர் நினைத்த நலம் பெறுக" என்று சொல்லி, மீண்டும் போற்றுதலுக்குரிய தாயை வணங்கி விடைபெறுகின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈழத் தமிழர்களுக்காக இன்றையதினம் இந்த அவையிலே தீர்மானம் கொண்டு வந்திருக்கிற இந்த நேரத்திலே பேசுகின்ற வாய்ப்பை வழங்கியதற்காக நான் மீண்டும் ஒரு முறை எனது நன்றியைத் தெரிவித்து, விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் தாலுகா, காணை ஒன்றியத்திற்குட்பட்ட கோனூர் என்ற குக்கிராமத்திலே, ஏழை விவசாயக் குடும்பத்திலே பிறந்து, அதே காணை ஒன்றியம், காங்கேயனூர் என்ற கிராமத்திலே வளர்ந்த என்னை, தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் மாவட்ட கழகச் செயலாளராக ஆக்கி, கட்சியிலே உயர் மட்டக் குழு





உறுப்பினராக்கி, பொது வாழ்க்கையிலே என்னை ஈடுபடுத்தியதோடு அரசியலில் மிளிர்வதற்குப் பணம் தேவையில்லை, தன்னம்பிக்கையும் தைரியமும் இருந்தால் போதும். தடைகள் எதுவானாலும் தகர்த்தெறிந்து தவிடு பொடியாக்கி தனக்கென ஒரு இடத்தைப் பிடிக்கலாம் என்ற தாரக மந்திரத்தை என்னைப் போன்ற சாதாரணமானவர்களுக்கெல்லாம் சொல்லிக் கொடுத்து, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் தமிழக சட்டப் பேரவைக்குள்ளே ஒரு சட்டமன்ற உறுப்பினராக நுழைவதற்கு வாய்ப்பளித்த சொக்கத் தங்கம், எங்கள் அண்ணா (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்றப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு டாக்டர் கேப்டன் அவர்களின் பாதம் பணிந்து எனது கன்னி உரையைத் துவக்குகின்றேன்.

திருக்கோவிலூர் தொகுதியிலே நான் வெற்றி பெறுவதற்காக உளுந்தூர்பேட்டையிலே என்னை அறிமுகப்படுத்தி, முரசு சின்னத்திலே வாக்குகளைச் சேகரித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேபோன்று, எனது வெற்றிக்காக திருக்கோவிலூரிலே பிரச்சாரம் மேற்கொண்ட மாதர் குல மாணிக்கம் எங்களது அண்ணியார் அவர்களுக்கும், மார்க்சிஸ்ட் கட்சியினுடைய தமிழ் மாநிலச் செயலாளர் திரு. இராமகிருஷ்ணன் அவர்களுக்கும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய தமிழ் மாநிலச் செயலாளர் உயர்திரு பாண்டியன் அவர்களுக்கும், அ.இ.அ.தி.மு.க., தே.மு.தி.க. மற்றும் கூட்டணிக் கட்சியின் நிர்வாகிகளுக்கும், செயல் வீரர்களுக்கும், திருக்கோவிலூர் தொகுதியிலே எனக்கு வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*முற்பகல் 11-55*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரைமீது நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கான விவாதத்தில் கலந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். ஆளுநர் உரைக்கான புத்தகத்தில், பக்கம் 3, வரிசை எண் 4-இல், வரி 9-இல் குறிப்பிட்டுள்ளபடி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு அமைந்தபோதெல்லாம் சமூக விரோதிகள்மீதும், தீவிரவாதிகள்மீதும் கடுமையான நடவடிக்கைகளை எடுத்து தமிழகத்தை அமைதிப் பூங்காவாக திகழச் செய்துள்ளார் எனவும், எனவே, இந்த அரசு தேவையான

[திரு. எல். வெங்கடேசன்] [2011 ஜூன் 8

நடவடிக்கைகளைக் கடுமையாக மேற்கொண்டு, சட்டம், ஒழுங்கை நிலைநாட்டி மக்கள் அச்சமின்றி வாழ்க்கையை நடத்த வழிவகுக்கும் எனவும், கடந்த ஆட்சியில் சட்டவிரோதமான முறையில் வலுக்கட்டாயமாக பயமுறுத்தி பறிக்கப்பட்ட சொத்துகளை மீட்டு, உரியவர்களுக்கே வழங்க ஏதுவாக புதிய சட்டம் இயற்றப்படும் என்பதை தேசிய முற்போக்கு திராவிடக் கழகம் வரவேற்கின்றது.

மேலும், பக்கம் 13, வரிசை எண் 13-இல், வேளாண் உற்பத்தித் திறனைப் பெருக்கக்கூடிய வகையில் நெல், பயறு, கரும்பு, பருத்தி போன்ற பயிர்களுக்கான உற்பத்தி வழிமுறைகள் தனித்தனியே திட்டமிடப்பட்டு, வேளாண் துறைக்குப் புத்துயிர் அளிக்கப்படும் எனவும், துல்லிய பண்ணை முறை, நுண்ணீர் பாசனத் திட்டங்கள் முதலியவை பெரிய அளவில் செயல்முறைக்குக் கொண்டுவரப்படும் எனவும், தேவையான அளவு உணவு உற்பத்தியை உறுதி செய்யும் அதே வேளையில் குறைந்த மதிப்புள்ள பயிர்களுக்குப் பதிலாக அதிக அளவில் வருவாய் தரும் பயிர்களைப் பயிரிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும், வேளாண் கட்டமைப்புகளை மேம்படுத்தும் வகையில் விவசாயிகள் பங்களிப்புடன் விவசாயப் பொருட்களைப் பதப்படுத்தும் தொழிற்சாலைகள், சந்தை வசதி, சேமிப்புக் கிட்டங்கிகள் மற்றும் குளிர்சாதன வசதிகளை உருவாக்குதல் போன்ற பணிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை தேசிய முற்போக்கு திராவிடக் கழகம் வரவேற்பதுடன், எவ்வளவு விரைவாக இந்தப் பணிகளை அரசு செய்ய முடியுமோ அவ்வளவு விரைவாக செய்து விவசாயிகள் வாழ்க்கையிலே ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்திட வேண்டும் என தேசிய முற்போக்கு திராவிடக் கழகம் கோருகின்றது.

பக்க எண் 19, வரிசை எண் 22-இல் மின்சாரம், சாலை வசதி, நகர்ப்புற கட்டமைப்புகள், வீட்டு வசதி ஆகிய உட்கட்டமைப்புகளில் உள்ள குறைவைப் போக்க தொடர்ந்து திட்டங்கள் தீட்டி செயல்படுத்தி, தமிழ்நாடு நீட்டித்த பொருளாதார வளர்ச்சியைப் பெற வழிவகை செய்யப்படும் எனவும், இத்தகைய பணிகளை மேற்கொள்ள கணிசமான நிதி தேவைப்படும் நிலையில் மாநில அரசிடம் உள்ள வரையறுக்கப்பட்ட நிதி ஆதாரத்தைக் கொண்டு மட்டும் செயல்படுத்த இயலாது எனவும், நிதி ஆதாரத்தைத் திரட்டுவதுடன்,



2011 ஜூன் 8] [திரு. எல். வெங்கடேசன்]

முழுமையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த முறையான அணுகுமுறை பின்பற்றப்படும் எனவும், அரசு மற்றும் தனியார் தொழில் நிறுவனங்களின் கூட்டு முயற்சியில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணியை இந்த அரசு செயல்படுத்தும் எனவும் கூறியுள்ளதை தேசிய முற்போக்கு திராவிடக் கழகம் வரவேற்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இனி எனது தொகுதி சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை இந்த அவையில் வைக்க விரும்புகிறேன். திருக்கோவிலூர் 1952 ஆம் ஆண்டு பேரூராட்சியாக உருவாக்கப்பட்டது. ஒருங்கிணைந்த தென்னாற்காடு மாவட்டமாக இருந்தபொழுது மாவட்டத் தலைநகராக இருந்த கடலூருக்கு அடுத்தப்படியாக, விழுப்புரத்தில்கூட இல்லாத வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் இங்கேதான் இருந்தது. இந்த வருவாய் கோட்டத்திலே உள்ளடங்கியதாகத்தான் விழுப்புரம் தாலுகாவும் இருந்தது என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, நீதிமன்றங்கள், வட்டாட்சியர் அலுவலகம், கிளைச் சிறை, சார்நிலைக் கருவூலம், கோட்ட கலால் அலுவலகம், இரண்டு அரசு மேல்நிலைப் பள்ளிகள் என அப்போதே திருக்கோவிலூரிலே இருந்தன. அப்போதும் அது பேரூராட்சிதான், இப்போதும் அது பேரூராட்சியாகவே உள்ளது. ஒரு பேரூராட்சியை நகராட்சியாகத் தரம் உயர்த்துவதற்கு முப்பதாயிரத்திற்கும் மேலான மக்கட்தொகையும், பேரூராட்சியின் ஆண்டு வருமானம் ஒரு கோடி ரூபாயையும் தாண்ட வேண்டும் என்பதும் விதி. திருக்கோவிலூரில், முப்பதாயிரத்திற்கும் மேலான மக்கட்தொகையும், ஆண்டு வருமானம், சொத்து வரிமூலம் ரூபாய் நாற்பத்தைந்து இலட்சமும், தண்ணீர் வரிமூலம் ரூபாய் இருபத்து நான்கு இலட்சமும், தொழில் வரிமூலம் ரூபாய் பன்னிரண்டு இலட்சமும், இதர வரிகள்மூலம் ரூபாய் நாற்பது இலட்சமும், ஆக மொத்தம் ஒரு கோடியே இருபத்தோரு இலட்சம் ரூபாய் அளவிற்கு வருமானம் உள்ளது. எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், திருக்கோவிலூர் பேரூராட்சியை நகராட்சியாகத் தரம் உயர்த்திட ஆவன செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திருக்கோவிலூர் தாலுகாவில் 140 ஊராட்சிகளும், 4 பேரூராட்சிகளும் உள்ளன. கிராமப் பகுதிகளிலிருந்து சுமார்

25,000-க்கும் மேற்பட்டோர் திருக்கோவிலூருக்கு தினமும் வந்து செல்கின்றார்கள். 300-க்கும் மேற்பட்ட பேருந்துகள் தினசரி வந்து செல்கின்றன. எனவே, தக்க பேருந்து நிலையம் இங்கே இல்லை. அதனால், போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்குச் செல்லும் மாணவ, மாணவிகள் குறித்த நேரத்திற்குச் செல்ல முடியாத சூழல் உள்ளதை இந்த அவையில் சுட்டிக்காட்டுவதோடு, புதிய பேருந்து நிலையம் அமைக்க இந்த அரசு வழிவகை செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

நண்பகல் 12-00

மேலும், துரிஞ்சல் ஆற்றின் குறுக்கே, வசந்த கிருஷ்ணாபுரம்-ஒடுக்கப்பட்டுக்கு இடையே ஒரு பாலமும், சித்தலிங்கமடத்திலிருந்து ஆறாம்மேடு செல்லும் வழியில் ஒரு பாலமும் நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் திட்டத்தின்கீழ் மேற்கொள்ள அரசு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருக்கோவிலூர் தொகுதியில், 68.591 கிலோ மீட்டர் மாநில நெடுஞ்சாலையும், மாவட்டத்தின் முக்கிய சாலைகள் 16.600 கிலோ மீட்டரும், இதர மாவட்டச் சாலைகள் 142.73 கிலோ மீட்டர் நீளமும் உள்ளன. இதில் 80 சதவீதம் சாலைகள் போக்குவரத்திற்குப் பயன்படுத்த முடியாத அளவிற்குப் பழுதடைந்துள்ளன. உதாரணமாக, கண்டாச்சிபுரம்-வீரபாண்டி சாலை, தடுத்தார்கொண்டூர் சாலை, சித்தலிங்கபுரம்-திருக்கோவிலூர் சாலை, காட்டுப்பயிர்-வடமலையனூர் சாலை போன்றவற்றைக் கூறலாம்.

அதேபோன்று, தண்ணீர் பிரச்சினையும் தீர்க்கப்படாமல் உள்ளது. உதாரணத்திற்கு எனது தொகுதிக்குட்பட்ட அரகண்டநல்லூர் பேரூராட்சியில் கோதண்டபாணிபுரம்-கொட்டாமேடு பகுதிகளில் மிகப்பெரிய அளவில் குடிநீர் தட்டுப்பாடு உள்ளது. இதில் கோதண்டபாணிபுரம் பகுதியில், கடந்த ஆட்சியில் துணை முதலமைச்சராக இருந்த மு.க. ஸ்டாலின் அவர்கள் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைத் திறந்து வைத்தார்கள். ஆனால், அதில் தண்ணீர் ஏற்ற முடியவில்லை. இப்போது அதைத் திறந்தால் காற்றுதான் வருகிறது. பல கிராமங்களிலும் தண்ணீர் பிரச்சினை உள்ளது.

எனது தொகுதியிலே அடிக்கடி மின் மாற்றிகள் பழுதடைந்துவிடுகின்றன. இதனால் கிராமப் பகுதிகளில் என்னால் தலைகாட்ட முடியவில்லை. மின் தடை ஏற்படுவதால் கிராம





மக்கள் கோபத்துடன் சட்டமன்ற உறுப்பினரான என்னைப் பார்க்கின்றார்கள். உதாரணத்திற்கு, முகையூர் ஒன்றியம், குடமுருட்டி, நெற்குணம் போன்ற கிராமங்களிலும், திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியம், மண்டகமேடு கிராமத்திலும் மின் மாற்றிகள் பழுதடைந்து 15 நாட்களுக்கு மேல் ஆகிறது. மின் வாரியத்திடம் முறையிட்டும் இதுவரையில் சரிசெய்து தரப்படவில்லை. எனவே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், பழுதடைகின்ற மின் மாற்றிகளை உடனுக்குடன் மாற்றித் தருவதற்கு வழிவகைகள் செய்ய வேண்டுமென்ற கனிவான கோரிக்கையை முன்வைக்கின்றேன்.

அரகண்டநல்லூரிலே இரயில் பாதையைக் கடக்க ஒரு மேம்பாலம் அமைத்துத் தரவேண்டும் என்பது தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கை. அதை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

விழுப்புரம் புறவழிச் சாலையிலிருந்து திருக்கோவிலூர் செல்ல இணைப்புப் பாதை இல்லை. விழுப்புரம் தொகுதி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் தொகுதியாக இருந்தாலும், இந்தப் புறவழிச் சாலையிலிருந்து திருக்கோவிலூர் செல்ல இணைப்புப் பாதை இல்லை என்பதை இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன். புதியதாக வருபவர்கள் சென்னை மார்க்கத்திலிருந்து திருக்கோவிலூர் செல்ல நினைத்தால் நேராக புறவழிச் சாலை வழியாக அரசூர் வரை சென்றுதான் திருக்கோவிலூருக்குத் திரும்புவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. எல். வெங்கடேசன்:** அதேபோன்று, திருச்சி மார்க்கத்திலிருந்து வருபவர்களும் வழிதெரியாமல் சென்றுவிடுவார்கள். எனவே, அங்கே ஒரு இணைப்புச் சாலை வேண்டுமென இந்த அவையின் மூலமாக வலியுறுத்துகிறேன்.

மலையமான் நாட்டின் தலைநகரமாகவும், நட்பிற்கு இலக்கணமான கபிலன், ஔவையார், மெய்ப்பொருள் நாயனார் போன்றவர்களால் புகழ்பெற்று, தெய்வீக மன்னனால் ஆட்சி செய்யப்பெற்று, வைணவமும், சைவமும் தழைத்த புண்ணிய பூமிதான் திருக்கோவிலூராகும். இங்கேதான் பாரியின் மகள்கள் அங்கவை, சங்கவை இருவரையும் மணம் முடித்துவைத்த,

[திரு. எல். வெங்கடேசன்] [2011 ஜூன் 8

தென்பெண்ணை நதியில் உள்ள குன்றில் வடக்கிலிருந்து கபிலன் உயிர்நீத்த இடம், இன்றளவும் அவர் நினைவை பறைசாற்றிக்கொண்டிருக்கிறது.

நடுநாட்டு திருப்பதி என்று போற்றப்படும் உலகளந்தப் பெருமாள் கோயிலும், அட்ட வீரட்டாணங்களில் ஒன்றான வீரட்டாணேஸ்வரர் ஆலயமும் இருக்கப்பெற்ற இந்தத் திருக்கோவிலூரரை ஆன்மீக சுற்றுலாத்தலமாக்க வேண்டும் என்பது இந்தப் பகுதி மக்களின் நீண்டகால ஆசை, கனவு. எனவே, அதைச் செய்து தரும்படி இந்த அவையின் வாயிலாக வலியுறுத்தி அமைகின்றேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன்.

**திரு. பி.ஜி. நாராயணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடைபெற்ற பொதுத் தேர்தலில், பவானி தொகுதியில் போட்டியிட எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், என்னை வெற்றிபெறச் செய்து சட்டப் பேரவைக்கு அனுப்பி வைத்த பவானி தொகுதி மக்களுக்கும் என்னுடைய இதயபூர்வமான நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய நினைவில் வாழும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் வழித்தோன்றலாய், தமிழக மக்களின் உண்மைப் பாதுகாவலராய் விளங்கும் அம்மா அவர்களை, ஒட்டுமொத்த தமிழகமே வரவேற்று பெரும்பான்மை வழங்கியதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. ஏனென்றால், அம்மா அவர்கள் தமிழக மக்கள் மனதில் நிரந்தர இடத்தைப் பிடித்தவர்கள். சாதாரணமாக மக்கள் மனதில் யாரும் இடம் பிடித்துவிட முடியாது. ஆனால் மக்களைப் பற்றி, மக்களுக்காக எப்போதும் சிந்திப்பவராக அம்மா அவர்கள் இருப்பதால் மக்களின் மனதில் நீடித்த இடத்தைப் பிடித்து சாதனைகள் பல படைத்து சரித்திரத் தலைவியாக இன்று விளங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

*பிற்பகல் 12-05*

ஆளுநர் உரையில் சட்டம் ஒழுங்கிற்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டதை அனைவரும் பாராட்டுகிறார்கள். எந்த நாட்டில் சட்டம் ஒழுங்கு சீராகப் பராமரிக்கப்படுகிறதோ அந்த



2011 ஜூன் 8] [திரு. பி.ஜி. நாராயணன்]

நாட்டில் தான் வளர்ச்சித் திட்டங்களை முழுமையாக நிறைவேற்றி, திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியை எட்ட முடியும், மக்களும் அமைதியாக வாழ முடியும்.

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் இருக்கும்போதெல்லாம் சமூகவிரோதிகள் மற்றும் தீவிரவாதிகளை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்கி அமைதியை நிலை நாட்டிய வரலாறு உண்டு. அம்மா அவர்கள் ஆட்சியில் இருந்தபோது சட்டம் ஒழுங்கு சிறப்பாகப் பராமரிக்கப்பட்டதால் வெளிநாட்டைச் சார்ந்தவர்களும் தமிழகத்தில் முதலீடு செய்து தொழில் துவங்க முன்வந்தார்கள். ஆனால், 2006-ம் வருடத்திலிருந்து வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தமிழகத்தில் முதலீடு செய்வது படிப்படியாகக் குறைந்துவிட்டது. காரணம், கடந்த ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சரியாகப் பராமரிக்கப்படவில்லை என்ற உண்மையை யாரும் மறுக்க முடியாது.

கடந்த ஆட்சியின்போது உயர் நீதிமன்ற வளாகத்தில் ஒரு விழா நடந்தது. அதில் அன்றைய முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் மற்றும் அமைச்சர்கள், உயர் நீதிமன்ற நீதிபதிகள், உச்ச நீதிமன்ற நீதிபதிகள், மாவட்ட நீதிபதிகள், காவல் துறை உயர் அதிகாரிகள் எல்லாம் விழா மேடையில் இருக்கும்போதே, ரவுடிகள் கும்பல் வழக்கறிஞர்களை அடித்துத் துன்புறுத்தியது. ஆனால், போலீஸ் அதைத் தடுத்து நிறுத்தாமல் வேடிக்கைப் பார்த்துக்கொண்டு இருந்த சம்பவம் அனைவருக்கும் தெரியும். இப்படி கடந்த ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சீரழிவிற்குப் பல உதாரணங்களைக் கூறமுடியும்.

கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நடைமுறையில் சாத்தியம் இல்லாத பல திட்டங்களை அறிவித்தார்கள். கடந்த ஆட்சியில் செயல்படுத்திய கான்கிரீட் வீடுகள் கட்டும் திட்டத்தில் பல குறைபாடுகள் இருந்தது அனைவருக்கும் தெரியும். ஒரு வீடு கட்ட 75 ஆயிரம் ரூபாய் என்று அறிவித்தார்கள். இது மக்களை ஏமாற்றும் மோசடித் திட்டம் ஆகும். 75 ஆயிரம் ரூபாயில் அஸ்திவாரம்கூட போடமுடியாது. இந்தப் பணத்தை வைத்துக்கொண்டு முழு கான்கிரீட் வீடு கட்ட கொஞ்சம்கூட சாத்தியம் இல்லை. இதை அறிந்துதான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கிராமப்புற ஏழைகள் பயன்பெறும் வகையில் சூரிய மின்சக்தியுடன்கூடிய பசுமை வீடுகள் கட்டும் திட்டம் தொடங்கப்படும் என்று அறிவித்தார்கள். இந்தத் திட்டத்தின்மூலம்

[திரு. பி.ஜி. நாராயணன்] [2011 ஜூன் 8

ஒரு இலட்சத்து எண்பதாயிரம் ரூபாய் செலவில் 300 சதுரஅடியில் அரசே வீடு கட்டிக்கொடுக்கும். இப்படி நடைமுறையில் சாத்தியமான திட்டங்களைத்தான் அம்மா அவர்கள் அறிவிப்பார்கள்.

தரமான பள்ளிக் கல்வியை இலவசமாக அனைவருக்கும் வழங்குவது அரசின் கொள்கையும், நோக்கமும் ஆகும். முன்பு ஆட்சியில் இருந்தபோது அம்மா அவர்கள் மாணவர்களுக்கு இலவசமாக சைக்கிள்களை வழங்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாணவர்களுக்கு இலவச மடிக் கணினி-லேப்-டாப்-வழங்கும் திட்டத்தை 2011 செப்டம்பர் 15-ம் நாள் முதல் இந்த அரசு தொடங்கும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள். முதல் கட்டமாக 9 இலட்சத்து 12 ஆயிரம் மாணவ, மாணவிகள் பயன் பெறுவார்கள். படிப்படியாக இந்தத் திட்டம் அனைத்து மாணவர்களுக்கும் விரிவுபடுத்தப்பட உள்ளது என்ற அறிவிப்பு படிக்கும் மாணவர்களின் மத்தியில் மிகுந்த மகிழ்ச்சியையும் வரவேற்பையும் பெற்றுள்ளது.

முந்தைய அரசால் தொடங்கப்பட்ட கேபிள் டி.வி. நிறுவனம் செயலிழந்துள்ளது. இதை உயிர்ப்பித்து செயல்பாட்டுக்குக் கொண்டு வந்து குறைந்த கட்டணத்தில் மக்களுக்கு கேபிள் சேவையை வழங்க அரசு முன்வந்திருப்பது வரவேற்கத்தக்க முடிவாகும். ஆளுநர் உரையில் வேளாண்மைத் துறைக்குப் புத்துயிர் அளிக்கும் வகையிலே பாசன ஆதாரத்தை. . .

(அவையில் செல்லிடத் தொலைபேசி ஒலி ஒலித்தது.)

## 8. அறிவிப்பு

### செல்லிடத் தொலைபேசியை அவையில் பயன்படுத்துவதைத் தவிர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே நம்முடைய மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெளிவாக அறிவுரை வழங்கப்பட்டுவிட்டது. செல்லிடத் தொலைபேசியை switch off செய்துவிட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது இரண்டு முறை செல்லிடத் தொலைபேசி ஒலி ஒலித்திருக்கின்றது. தயவுசெய்து ஏற்கெனவே சொன்ன அந்த அறிவுரையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



2011 ஜூன் 8] [பேரவைத் தலைவர்]

பிற்பகல் 12-10

## 7. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

**திரு. பி.ஜி. நாராயணன்:** ஆளுநர் உரையில் வேளாண் துறைக்குப் புத்துயிர் அளிக்கும் வகையிலே பாசன ஆதாரத்தைப் பெருக்கும் முயற்சியாக மாநில நதிகளை இணைக்கும் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தும் என்ற அறிவிப்பு விவசாயிகள் மத்தியிலே மிகுந்த வரவேற்பையும், பாராட்டையும் பெற்றிருக்கிறது.

பவானி தொகுதியில் பவானிக்கு அருகில் அரசு விவசாய விதைப் பண்ணை பரந்த பரப்பிலே உள்ளது. இதில் விவசாயக் கல்லூரி ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அங்கு Bio Fertilizer Unit என்ற ஒன்று நிறுவப்பட்டு கடந்த 2 வருடங்களாகச் செயல்படாமல் இருந்து வருகிறது. மாண்புமிகு விவசாய அமைச்சர்கூட போன வாரம் இந்த நிறுவனத்தைப் பார்வையிட்டுள்ளார். இந்த நிறுவனம் செயல்பாட்டிற்கு வந்தால் வருடத்திற்கு 200 மெட்ரிக் டன் நுண்ணுயிர் உரம் Bio Fertilizer என்ற இயற்கை உரம் தயாரிக்க முடியும். விவசாயிகளின் நலன் கருதி இந்த நிறுவனத்தை உடனடியாகச் செயல்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

ஜமக்காள உற்பத்திக்கு பவானி பெயர்பெற்றது. நூல் விலை உயர்வால் கைத்தறித் துறை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. அதேபோல, ஜமக்காள உற்பத்தியும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. புதிய நவீன தொழில்நுட்பத்தைப் புகுத்தினால் ஜமக்காள உற்பத்தித் தொழில் புத்துயிர் பெறமுடியும். ஆகவே, Carpet Technology அதாவது ஜமக்காள தொழில்நுட்பக் கல்லூரியை பவானியில் ஏற்படுத்த வேண்டும் என்று அம்மா அவர்களைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பி.ஜி. நாராயணன்] [2011 ஜூன் 8

பவானி தொகுதியிலே 100-க்கும் மேற்பட்ட சாயப் பட்டறைகள் உள்ளன. உயர் நீதிமன்றத் தீர்ப்பின்படி கிட்டத்தட்ட 100 சாயப் பட்டறைகள் இப்பொழுது மூடப்பட்டுவிட்டன. இதனால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்து, வாழ வழியின்றி சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பொது சுத்திகரிப்பு நிலையம் அதாவது Common Treatment Plant அமைத்தால் சாயப் பட்டறைப் பிரச்சினை உறுதியான தீர்வுக்கு வரும். பொது சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்குத் தேவையான நிலம் தயாராக இருக்கிறது. பொது சுத்திகரிப்பு நிலையம் அமைத்துக் கொடுத்து இதில் ஈடுபட்டுள்ள ஆயிரக்கணக்கான தொழிலாளர்களைக் காப்பாற்ற வேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்களை பவானி தொகுதி மக்கள் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.

பவானி வளர்ந்து வருகின்ற நகரம். மேட்டூர் ரோட்டிலிருந்து பவானி நகர் வழியாகச் செல்லும் சாலை மிகவும் குறுகலாக இருக்கிறது. அதனால் போக்குவரத்து நெரிசல் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. இதைத் தவிர்க்க மேட்டூர் ரோட்டிலிருந்து பவானி நகருக்கு வராமல் புறவழிச் சாலை அமைத்துக் கொடுக்க வேண்டும். புறவழிச் சாலை அமைக்கும் திட்டம் ஏற்கெனவே பரிசீலனையில் இருப்பதால் அதிகாரிகள் நில அளவை செய்து வைத்திருக்கிறார்கள். புறவழிச் சாலை அமைக்கும் பணி துவங்க நிதியொதுக்கீடு செய்து ஆவன செய்து உதவ வேண்டும் என்று பவானி மக்கள் சார்பிலே அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அனைத்துத் தொழில் வளர்ச்சிக்கும் அடிப்படைத் தேவை மின்சாரம். கடந்த 5 ஆண்டுகளாக நிலவி வரும் வரலாறு காணாத மின் வெட்டு மற்றும் கடுமையான மின் பற்றாக்குறையால் பல தொழில்கள் நசிந்துவிட்டன. இதை உணர்ந்துதான் ஆளுநர் உரைமூலம் அம்மா அவர்கள், அரசு மின்சாரப் பற்றாக்குறையைப் போக்க உறுதிபூண்டுள்ளது என்று அறிவித்தது அனைத்துத் தொழில் முனைவோர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தி இருக்கிறது.

விலைவாசி உயர்வுக்கு முக்கியக் காரணம் அத்தியாவசியப் பொருட்களைப் பதுக்கி வைத்து கள்ளச் சந்தையில் விற்பது, அத்தியாவசியப் பொருட்களைக் கடத்துவது போன்ற செயல்கள்தான் என்பதை இந்த அரசு உணர்ந்து இப்படிப்பட்ட சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவோர்மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு உறுதி எடுத்துள்ளது. அத்தியாவசியப்



2011 ஜூன் 8] [திரு. பி.ஜி. நாராயணன்]

பொருட்களின் உற்பத்தியையும், உற்பத்தித் திறனையும் அதிகரிக்க நடவடிக்கை எடுப்பது மற்றும் விலைக் கட்டுப்பாடு நிதி ஏற்படுத்தப்பட்டு பொருட்களின் விலை அளவுக்கு அதிகமாக உயரும்போது அத்தகைய பொருட்களை உற்பத்தி மையங்கள் நேரடியாக வாங்கி, அடக்க விலையிலே நுகர்வோருக்கு விற்பனை செய்ய வழி வகை செய்தல் போன்ற இந்த அரசினுடைய முயற்சிகள்மூலம் நிச்சயமாக விலைவாசியைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும் என்பதை (மணியடிக்கப்பெற்றது) பொருளாதார நிபுணர்கள் உட்பட அனைவரும் பாராட்டி வரவேற்கிறார்கள்.

ஆளுநர் உரையில் கூறப்பட்டுள்ள அனைத்துத் திட்டங்களும் சிறப்பான திட்டங்கள். மேலும், அனைத்துத் தேர்தல் வாக்குறுதிகளும் ஒன்றரை ஆண்டு காலத்திலே நிறைவேற்றப்படும் என்ற உறுதிப்பாடு இந்த அரசு வேகமாக நாட்டை வளர்ச்சிப் பாதையிலே இட்டுச் செல்லத் தயாராக உள்ளது என்பதை எடுத்துக் காட்டுகிறது.

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தின்மீதான விவாதத்திலே கலந்து கொண்டு பேச எனக்கு வாய்ப்பளித்தமைக்கு மீண்டும் அம்மா அவர்களுக்கு நன்றியைக் கூறி முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 10 நிமிடங்கள்.

பிற்பகல் 12-15

***திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆன்றோர்களும், சான்றோர்களும் அமர்ந்திருந்து மக்கள் பணி ஆற்றிய, இன்னும் பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய இந்த மாமன்றத்தில் இரண்டாவது முறையாக நான் காலடி எடுத்து வைப்பதற்குக் காரணமான காங்கிரஸ் பேரியக்கத்தின் ஒப்பற்ற தலைவி அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், பாரதத்தின் விடிவெள்ளி, நாளைய பிரதமர், இளம் தலைவர் ராகுல் காந்தி அவர்களுக்கும், காங்கிரஸ் பேரியக்கத்தின் எங்கள் ஒப்பற்ற தலைவர் மாண்புமிகு மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் அய்யா திரு. ஜி.கே. வாசன் அவர்களுக்கும், காங்கிரஸ் கூட்டணிக் கட்சித் தொண்டர்களுக்கும், தலைவர்களுக்கும்,

[திரு. எஸ். ஜாண் ஜேக்கப்] [2011 ஜூன் 8

கிள்ளியூர் தொகுதி வாக்காளப் பெருமக்கள் அத்தனை பேருக்கும் நன்றியைத் தெரிவித்து, பதினான்காவது சட்டப் பேரவையின் முதல் கூட்டத் தொடரிலேயே என் உள்ளபூர்வமான கருத்துகளைப் பதியச் செய்வதிலும், அவற்றை நிறைவேற்றக் கேட்டுக்கொள்வதிலும் பெருமகிழ்ச்சியும், பேருவகையும் அடைகிறேன்.

வரலாறு படைத்த சட்டமன்றத்தில், வரலாற்றுப்பூர்வமான வெற்றியைப் பெற்று மூன்றாவது தடவையாக மக்கள் பணி ஆற்ற வந்திருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் உட்பட மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் என் இதயபூர்வமான வாழ்த்துக்களையும், வணக்கங்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தேர்தலின்போது அறிவித்த தேர்தல் வாக்குறுதிகளையெல்லாம் ஆளுநர் உரையிலேயே இடம்பெறச் செய்திருக்கிறார்கள். அது உள்ளபடியே மகிழ்ச்சிக்குரியது. தமிழக மக்கள் தங்கள்மீது பெரும் எதிர்பார்ப்போடும், ஏக்கத்தோடும் காத்திருக்கிறார்கள். எனவே, நிதிநிலை சரியில்லை என்ற காரணத்தைச் சொல்லி எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றாமல் விட்டுவிடக் கூடாது என்ற கோரிக்கையையும் தங்களிடம் சமர்ப்பிக்கிறேன். காரணம் நீங்கள் நினைத்தால் அது இயலாதது அல்ல.

இலவசங்கள் என்கிற சலுகைகளெல்லாம் தகுதியான ஏழைகளுக்கு மட்டுமே போய்ச் சேரவேண்டும். என்னைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் உட்பட கோடீஸ்வரர்களெல்லாம் அரசின் சலுகைகளை அனுபவிக்கக் கூடாது. அவ்வாறு அனைவருக்கும் இலவசங்களை வழங்குவது என்றால் அது அணையைத் திறந்து விளை நிலங்களுக்கு மட்டுமின்றி ஊருக்கெல்லாம் தண்ணீர் பாய்ச்சுவதற்கு சமம் என்ற என்னுடைய கருத்தையும் தெரிவிக்கிறேன். இதை ஆளுநர் உரையிலும் 16-வது கருத்தாகத் தெரிவித்திருக்கிறீர்கள்.

'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு' என்று நம்புகிற முதலமைச்சர் அவர்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பினும், எங்களின் எண்ணங்கள்



2011 ஜூன் 8] [திரு. எஸ். ஜாண் ஜேக்கப்]

அதிகம் என்பதைக் கருத்தில் கொண்டு, காங்கிரஸ் உறுப்பினர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, முந்தைய ஆட்சியின் நல்ல திட்டங்களை நிறுத்திவிடக் கூடாது. அவற்றைத் தொடர்ந்து செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆட்சியில் தமிழகத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட ரூபாய் 75,000-ல் கட்டப்பட்டு வந்த வீடு கட்டும் திட்டத்தை மாற்றிவிட்டு, ரூ.1,80,000/- செலவில் சூரிய மின்சக்தியில் 'பசுமை வீடு திட்டம்' கொண்டுவரப்படுவதாகவும் அறிவித்திருக்கிறீர்கள். சென்னை நகரில் ஆற்றோரங்களில் வாழும் மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதாகவும் அறிவித்திருக்கிறீர்கள். ஆனால், நகரம், கிராமம் என்ற பாகுபாடு இல்லாமல், மாநிலம் முழுமைக்கும் விரிவாக்கம் செய்து தமிழகத்தை குடிசை இல்லா மாநிலமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மாதம் 2-ம் தேதி நடந்த மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் "ராஜீவ் அவாஸ் யோஜனா-1" என்ற 3 கோடி வீடுகள் வழங்கும் திட்டத்தை மத்திய அரசு அறிவித்துள்ளது. குடிசை இல்லா இந்தியாவை உருவாக்க முனைப்போடு செயல்படும் மத்திய அரசுடன் இணைந்து, தனித் தனியாக இத்திட்டத்தைத் தமிழகம் முழுவதும் செயல்படுத்த வேண்டும். இதுபோல, சூரிய ஒளி மின்சக்தித் திட்டத்திற்கு தேசிய சூரிய ஒளித் திட்டத்தின்கீழ் நிதி உதவி வழங்க மத்திய அரசு தயாராக இருப்பதாக அறிவித்துள்ளது. 'வித்யுத் வியாபார் நிகாம்' அமைப்புமூலம் சிரமமில்லாமல் இந்த நிதி உதவி வழங்கப்பட ஏற்பாடு செய்யப்படவுள்ளது. இதற்கு மாநில அரசு, மத்திய அரசுக்கு முழு ஒத்துழைப்பையும், பாராட்டையும் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கும் வகையில் தமிழகத்தில் போலீஸ் நிலையங்களில் காவலர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். தமிழகத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில்தான் நகைக் கொள்ளைகள் அதிகம் எனக் கருதுகிறேன். செயின் அறுப்பு வழக்குகள் இல்லாத போலீஸ் நிலையமே இல்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு குற்றங்கள் உள்ளன. எனவே, அரசு இதில் தீவிர கவனம் செலுத்தி, இதில் பிடிபடும் குற்றவாளிகளைக் குண்டர் சட்டத்தில் கைது செய்து

[திரு. எஸ். ஜாண் ஜேக்கப்] [2011 ஜூன் 8

நடவடிக்கை எடுக்க வேண்டும். போலீசாருக்கும் வாரத்தில் ஒருநாள் வார விடுப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் அரிசியை பாக்கெட்டுகளில் அடைத்து வழங்கினால் சரியான எடையில் அரிசி ஏழைகளுக்குக் கிடைக்கும். இதனால் ஏற்படும் செலவினங்களைத் தடுக்க பணக்காரர்களுக்கு இலவசமாக வழங்குவதை நிறுத்தலாம்.

மீனவர்களுக்கு மீன்பிடிக்கத் தடை செய்யப்பட்ட காலங்களில் வழங்கப்பட்டு வந்த 1,000/- ரூபாய் உதவித் தொகையை 2,000/- ரூபாயாக உயர்த்தியதையும், முதியோர் மற்றும் பாதுகாப்புத் திட்டங்களில் வழங்கப்பட்டு வந்த மாதாந்திரத் தொகையான 500 ரூபாயை 1,000/- ரூபாயாக உயர்த்தியதையும் மனதார வரவேற்கிறேன்.

இதுபோல, விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு விவசாயம் இல்லாத காலங்களில் மாதந்தோறும் 2,000/- ரூபாய் உதவித் தொகை வழங்கிடவும் அரசை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-20

உற்பத்தியாகும் விவசாய விளைபொருட்களான பழங்கள், காய்கறிகளில் 30 சதவீதம் அழுகி வீணாவதாகச் சொல்லப்படுகிறது. எனவே, உழவர் சந்தைகள்தோறும் குளிர்சாதனக் கிட்டங்கிகள் உருவாக்கப்பட வேண்டும். அவ்வாறு செய்தால், பொருட்கள் நியாயமான விலையில் மக்களுக்குக் கிடைக்கும். விவசாயிகளுக்கும், விளைபொருட்களுக்கு நியாயமான, கட்டுப்படியான விலை கிடைக்கும். அவை வீணாவது தடுக்கப்படும், விவசாயிகளின் வாழ்க்கைத் தரமும் உயரும்.

மாநில நதிகளை இணைத்து, பாசன ஆதாரத்தைப் பெருக்கி, வெள்ளப் பாதிப்புகளைக் கட்டுப்படுத்துவதற்கும், இத்தகைய கால்வாய்களை நீர்வழிப் போக்குவரத்திற்குப் பயன்படுத்தப்போவதாக அரசு கூறியிருப்பதை வரவேற்கிறேன். குமரி மாவட்டத்தில் கடற்கரை வழியாகச் செல்லும் ஏ.வி.எம். சானலை ஆழப்படுத்தி, அகலப்படுத்தி, ஆக்கிரமிப்புகளை அகற்றி, கேரளாவிலிருந்து மண்டைக்காடுடன் முடிவடையும் சானலை



2011 ஜூன் 8] [திரு. எஸ். ஜாண் ஜேக்கப்]

கூடங்குளம்வரை கொண்டு செல்லலாம். கடலில் கலக்கும் ஆற்றுத் தண்ணீரை இந்தக் கால்வாயில் இணைக்கலாம். உள்நாட்டுப் பகுதியில் குளங்கள் வெட்டி, இந்தச் சானலிலிருந்து சிறு கால்வாய்கள்மூலம் தண்ணீர் கொண்டு வரலாம். இதனால் விவசாயம் செழிக்கும். நிலத்தடி நீர் உப்பாவது தடுக்கப்படும். நிலத்தடி நீர்மட்டமும் உயரும். அதில் நீர்வழிப் போக்குவரத்து தொடங்கினால், சாலைகளில் வாகன நெருக்கடி தீரும். சுற்றுலா வருமானம் பெருகும். தண்ணீர் பற்றாக்குறை தீரும். இன்னும் ஏராளமான நன்மைகள் உண்டு. இத்திட்டத்தை முதல் திட்டமாக அரசு செயல்படுத்த வேண்டுமென்று குமரி மாவட்ட மக்கள் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

மாநிலங்களுக்கிடையேயான நதிநீர்ப் பிரச்சினைகளைப் பேச்சுவார்த்தைகள்மூலம் தீர்வுகாண அரசு முன்வந்திருப்பதை வரவேற்கிறேன். குறிப்பாக, முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினையில் தமிழக மக்களின் நன்மைக்காக அரசு எடுக்கும் முயற்சிகளுக்கு காங்கிரஸ் பேரியக்கம் முழு ஒத்துழைப்பை நல்கும் என்பதையும் அதற்காக எந்தத் தியாகத்திற்கும் நாங்கள் தயாராக உள்ளோம் என்பதையும் தெரிவிக்கிறேன்.

குமரி மாவட்டத்தின் முக்கியப் பிரச்சினையான நெய்யாறு இடதுகரை சானல் பிரச்சினையை அரசு மறந்துவிட்டதை எண்ணி மிகுந்த மன வேதனைப்படுகிறோம். நீர்ப்பிடிப்புப் பகுதியான மலைப்பகுதி நமக்குச் சொந்தம். நெய்யாறு அணை கேரளாவிற்குச் சொந்தம். திருவனந்தபுரம், நெய்யாற்றின் கரை தாலுகா விவசாயத்திற்கும், குமரி மாவட்டம், விளவங்கோடு தாலுகாவில் 4,000 எக்டேர் நிலப் பகுதி விவசாயத்திற்கும் பயன்படுத்த உருவாக்கப்பட்ட திட்டம்தான் இது. 1952 ஆம் ஆண்டு தமிழக முதலமைச்சர் பெருந்தலைவர் காமராஜர் அவர்களும், கேரள முதலமைச்சர் சங்கர் அவர்களும் சேர்ந்து இரு மாநில மக்களுக்காக ஏற்படுத்திய ஒப்பந்தம் இது. 2003 ஆம் ஆண்டுவரை நமக்கும் தண்ணீர் தந்தார்கள். நம் மனங்களில் வாழும் முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தீவிரக் கவனம் செலுத்தி, நமது தமிழகப் பகுதியிலுள்ள பல்லிக்கூட்டம் பகுதியில் புதிய அணை கட்டி, நமது மக்கள் பயன்பெறுவதற்காகத் திட்டமிடப்பட்ட உன்னதத் திட்டம். எம்.ஜி.ஆர். புகழ்பாடும் தங்கள் அரசு, அவரது கனவுகளையும், குமரி மக்களின் ஏக்கங்களையும் தீர்க்க, மீண்டும் நமக்குத் தண்ணீர்

கிடைக்க, கேரளாவிடம் பேசி, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரம் பற்றிய விஷயத்தில், மின் திருட்டைத் தடுத்து, மின் இழப்பைக் குறைத்து, புதிய மின் திட்டங்களைத் தொடங்கி தன்னிறைவு பெறச் செய்வதாகக் கூறியிருப்பதை வரவேற்கிறேன். தமிழகத்தில் பகலில் எரியும் தெருவிளக்குகளை அணைத்தாலே பெருமளவு மின்சாரத்தை மிச்சப்படுத்த முடியும். குண்டு பல்புகளைத் தடுத்து, சி.எஃப்.எல். பல்புகளை மானிய விலையில் மக்களுக்கு வழங்க வேண்டும்.

மரபுசாரா எரிசக்தி மூலமும் மின் உற்பத்தியைப்பெற திட்டமிட்டுள்ள அரசு, நிலவளம், நீர்வளத் தன்மைக்கேற்ப மலை வேம்பு, முள்ளில்லா மூங்கில் போன்ற மரங்களை வளர்த்து, மர மின்சாரம் தயாரிக்கலாம். தமிழகத்திலுள்ள 31 மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 100 முதல் 120 மெகா வாட் வரை இம்முறையில் மின்சாரம் தயாரிக்கலாம். மர மின்சார உற்பத்திக்கு யூனிட் ஒன்றுக்கு 2 ரூபாய் 50 காசுகள் மட்டுமே செலவிடப்பட வேண்டுமென்று அறிவியலாளர்கள் கூறுகிறார்கள். சூரிய ஒளி மின்சாரத்தைவிட இது இலாபகரமாக உள்ளது. விவசாயிகளுக்கு வளமான வாழ்வை நாம் கொடுக்க முடியும். எனவே, இதிலும் அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குமரி மாவட்டம், குளச்சலில் வர்த்தகத் துறைமுகம் கொண்டுவர மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்த வேண்டும். மத்திய அரசும், குறிப்பாக, மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. ஜி.கே. வாசன் அவர்களும், இத்திட்டத்திற்கு முழுமையான ஒத்துழைப்பும், ஆதரவும் வழங்கத் தயாராக உள்ளார்கள்.

பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 ஆம் நாள், மகளிருக்கு மின் விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்குவதாக அறிவித்திருக்கிறீர்கள். இதை தமிழகத்தின் பின்தங்கிய தொகுதியாகவும், எண்ணிக்கையில் கடைசி தொகுதியான 234-வது தொகுதியாகவும் உள்ள கிள்ளியூரிலேயே தொடங்கி வைக்க வேண்டுமென்று அரசை வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.





**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** சமச்சீர் கல்வியின் தரம் குறைந்துள்ளதாக அரசு கூறுகிறது. தமிழகத்தில் உள்ள அனைத்து மாணவர்களுக்கும் தரமான, ஒரேவிதமான கல்வியையே கொடுக்க வேண்டும்.

ஏழை, பணக்காரன் என்றோ, உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்றோ, படித்தவன், பாமரன் என்றோ பாகுபாடின்றி ஒரே கல்வித் திட்டத்தையே அறிமுகப்படுத்த வேண்டும். 1 ஆம் வகுப்பு முதல் 9 ஆம் வகுப்பு வரை படித்தாலும், படிக்காவிட்டாலும் வெற்றி என்ற நடைமுறையை மாற்ற வேண்டும். ஒவ்வொரு வகுப்பிற்கும் தகுதி இருந்தால் மட்டுமே அடுத்த வகுப்புக்கு வெற்றி பெறச் செய்ய வழிவகை செய்ய வேண்டும். கேரள மாநிலத்தில் உள்ளவர்கள் உலகம் முழுவதும் ஜொலிக்கிறார்கள் என்றால் அதற்கு அவர்களது கட்டுப்பாடான, தரமான கல்வியே காரணம். இதை நாம் கவனத்தில் எடுத்துக்கொள்ளலாம்.

பிற்பகல் 12-25

மத்திய அரசின் நவோதயா கல்விக்கு தமிழகத்தில் வாய்ப்பளிக்க வேண்டும். இதனால் நம் தாய் மொழியாம் கன்னித் தமிழுக்கு எந்த இழப்பும் ஏற்படாது. மாறாக, ஏழையெளிய மக்கள் பயன் பெறுவார்கள். நவோதயா கல்விக்கு குமரி மாவட்ட மக்கள் சிவப்புக் கம்பள வரவேற்புடன் உள்ளனர். மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் படிக்கும் நமது மாணவர்கள் இந்தி மொழியைக் கற்கிறார்கள். ஆனால், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் இந்தி மொழி கற்கக் கூடாதென்கிறார்கள். இது என்ன நீதி என எனக்குத் தெரியவில்லை. வசதி படைத்தவர்கள் படிக்கலாம், ஏழைகள் படிக்கக் கூடாது என்பதுதான் எனக்குத் தெரிகிறது. தரமான கல்விக்கு எதிராக இருக்கிறவர்கள் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் நடத்தும் கல்வி வியாபாரிகள்தான். இவர்களுக்கு எந்த சமூக அக்கறையும் இல்லை. மாறாக தொழில் அக்கறைதான். இவர்கள் மாணவர்களிடம் கட்டணத்தைக் கறந்து வாங்குகிறார்கள். ஆசிரியர்களுக்கு மிகக் குறைந்த ஊதியத்தை வழங்கிவிட்டு பொய்யான தகவல்களை அரசுக்குத் தருகிறார்கள். கேட்டால் இது எங்கள் கல்விச் சேவை என்கிறார்கள். சேவை என்றால் எந்த மெட்ரிக் பள்ளிகளில் இலவசமாக படிக்க வைக்கிறார்கள்? இவர்களது சேவை புரியாத புதிராக உள்ளது. மாறாக இவர்கள் அரசுக் கல்வியை அழிக்கிறார்கள். ஒவ்வொரு பள்ளியும் எவ்வளவு

[திரு. எஸ். ஜாண் ஜேக்கப்] [2011 ஜூன் 8

கட்டணம் வசூலிக்க வேண்டுமென்ற நீதிபதி ரவிராஜ பாண்டியனின் அறிக்கை இன்னும் வெளியாகவில்லை. ஆனால், எல்லா பள்ளிகளிலும் அட்மிஷன் முடிந்துவிட்டது. வாங்குகிற பணத்திற்கு முறையாக ரசீது வழங்குவதில்லை. ஆசிரியர்கள் இன்மையால் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள் நலிந்து மூடப்பட்டு வருவதால் வேறுவழியின்றி மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் ஏழை மாணவர்களும் சேர வேண்டிய நிலைமை உள்ளது. முந்தைய மது வியாபாரிகள் பலரும் இப்போது கல்வி வியாபாரத்திற்கு வந்துவிட்டதில் இருந்தே இதைப் புரிந்துகொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜாண் ஜேக்கப், உங்கள் பேச்சை முடியுங்கள். ஒரு நிமிடம் அதிகமாக ஆகிவிட்டது.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** கல்வியின் தரத்தைப் பாதுகாக்க அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கு புதிய ஆசிரியர்களை நியமிக்க அரசு ஆணையிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) ஒரே ஒரு பாயிண்ட்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் உங்கள் பேச்சை முடியுங்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** இலங்கைத் தமிழ் அகதிகளின் குழந்தைகளுக்குக் கல்வி பயில அனைத்து அரசு மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களிலும் 1 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்க வழிவகை காண வேண்டும். இம்மாணவர்கள் இல்லையேல் மட்டுமே, இந்த இடத்தை இதர மாணவர்களுக்கு வழங்க வேண்டும். இலங்கைக்கு இந்தியத் தூதராக தமிழ்நாட்டைச் சேர்ந்த தமிழர் ஒருவரையே தூதராக நியமிக்க மத்திய அரசை, மாநில அரசு வற்புறுத்த வேண்டும். அத்துடன். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜாண் ஜேக்கப் நீங்கள் அத்தனையையும் அம்மாவிடம் எழுதிக் கொடுத்துவிடுங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இலங்கைக்குச் செல்லும் தூதர் ஒரு தமிழராக இருக்க வேண்டும்' என்ற கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினர் இங்கே வைத்தார். இதை உங்கள் காங்கிரஸ் தலைமையிலான



2011 ஜூன் 8] [செல்வி ஜெ ஜெயலலிதா]

மத்திய அரசிடம் டெல்லியில் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பா. வளர்மதி அவர்கள். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 15 நிமிடங்கள்.

*__திருமதி பா. வளர்மதி:__ பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டாண்டாய் சுருட்டி வந்த ஆணவத்தார் கூட்டத்தைப் பூண்டோடு வேரறுத்த புதிய புறனானூரே எங்கள் அம்மா. மூட்டைப் பொய் தூக்கி, முரசொலித்தோரைச் சாய்த்து கோட்டையில் அமர்ந்த கோபுரமே, அப்பன்-மகன் என்று ஆளாளாய் பங்குபோட்ட, வெப்பம் தணிக்க வந்த விசை மழையே எங்கள் அம்மா. முட்டும் பகைப் புலத்தை, மூலையிலே சாய்த்திட்ட பட்டுப்போகாத பழந்தமிழர் போர் மறமே எங்கள் அம்மா. உங்கள் திருவடிகட்கு என் வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) சுட்டெரிக்கும் சூரியனை கட்டி இழுத்து வந்து அம்மாவின் காலடியில் போட்டு, வெற்றிக் கொடி நாட்டிய ஆயிரம் விளக்கு வாக்காளப் பெருமக்களுக்கு என் தலை தாழ்ந்த வணக்கம்.

பிற்பகல் 12-30

பாலையில் கண்ட பசும் சோலையாய், கடும் கோடையில் பெய்த பனி மழையாய் இந்த ஆளுநர் உரை அமைந்திருக்கிறது. இந்த ஆளுநர் உரையில் சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைக்கு முதலிடம் தரப்பட்டுள்ளதே, அதைபற்றிப் பேசாமல் குற்றம் மற்றும் குற்றவாளிகள் கண்காணிப்புத் திட்டம் என்ற புதுமையான Net work system அறிவிக்கப்பட்டுள்ளதே, அதைபற்றிப் பேசாமல், தமிழை இந்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக ஆக்கவும், நீதிமன்றங்களில் தமிழை பயன்படுத்தவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளதே அதைப் பற்றிப் பேசாமல், முதியோர் ஓய்வூதியத் தொகை உயர்த்தப்படுவதோடு, அவர்கள் பெயரில் தனி வங்கிக் கணக்கு தொடங்கப்பட்டு, ஓய்வூதியத் தொகையை நேரடியாக வங்கிக் கணக்கில் சேர வழிவகை செய்யப்பட்டுள்ளதே அதைப் பற்றிப் பேசாமல், சென்னை நகரத்தில் உள்ள ஆற்றோரங்களில் வசிப்பவர்களுக்கு புதிய வீடுகள் கட்டித் தரப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளதே அதைப் பற்றிப் பேசாமல், பெண் அரசு அலுவலர்களின் நலன் கருதி மகப்பேறு விடுப்புக் காலம் 3 மாதத்திலிருந்து 6 மாத

[திருமதி பா. வளர்மதி] [2011 ஜூன் 8

காலமாக உயர்த்தப்பட்டுள்ளதே அதைப் பற்றிப் பேசாமல், 500-க்கும் மேற்பட்ட மக்கள்தொகை கொண்ட அனைத்துக் கிராமங்களுக்கும் தார்ச்சாலை அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளதே அதைப் பற்றிப் பேசாமல், செப்டம்பர் 15 அன்று மின் விசிறி, மிக்சி, கிரைண்டர் என்று 25 இலட்சம் குடும்பங்கள் பெற வகை செய்யப்பட்டு, அரிசி பெறத் தகுதியுடைய 1.83 கோடி குடும்பங்கள் பயனடைவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளதே அதைப் பற்றிப் பேசாமல், விஞ்ஞான ரீதியில் ஊழல் செய்வதற்காகப் போடப்பட்ட மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் மாற்றியமைக்கப்பட்டு, தரமான மருத்துவச் சேவை வழங்கும் நோக்கத்தை வைத்து புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளதே அதைப் பற்றிப் பேசாமல், வேளாண் உற்பத்தியைக் கருத்தில் கொண்டு வரலாற்றுச் சாதனையாக மேட்டூர் அணையிலிருந்து ஜூன் 6 ஆம் தேதியே தண்ணீர் திறந்துவிடப்பட்டிருக்கிறதே அதைப் பற்றிப் பேசாமல், கோசலை பெற்ற குழந்தையைப் பார்த்து அம்மிக் குழவியை எடுத்து அடி வயிற்றில் குத்திக் கொண்ட கைகேயியைப் போல ஆளுநர் உரையில் அம்மாவின் அரசு அறிவித்திருக்கிற கொள்கைத் திட்டங்களைப் பற்றிப் பேசாமல், நூலின் 2 ஆம் பக்கம், 3 ஆம் பத்தியில் பேரறிஞர் அண்ணா என்பதில் ஒரு 'ர'-வுக்கு பதிலாக 2 'ர'-க்கள் பிழை பார்க்காமல் அச்சடிக்கப்பட்டுள்ளது என்று ஒரு மிகப் பெரிய கண்டுபிடிப்பை தமிழ்நாட்டினுடைய முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி கண்டுபிடித்திருக்கிறார்.

தான் அரசியலுக்கு வந்த ஆரம்ப காலத்தில் 50 ரூபாய் சம்பளத்தில் ஈரோட்டில் தான் பார்த்த பழைய உத்தியோகத்தை இப்போது ஓய்வு அதிகம் இருப்பதால் திரும்பவும் பார்க்க ஆரம்பித்திருக்கிறார் திருவாரூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கருணாநிதி.

பிள்ளைக்கு ஒரு டி.வி., பேரனுக்கு ஒரு டி.வி., மகளுக்கு ஒரு டி.வி. என்று ஆளுக்கு ஒரு டி.வி.-யை ஆரம்பித்துக் கொடுத்து, இப்பொழுது திகாருக்கும் வழிகாட்டி அனுப்பி வைத்து, அத்தனைக் கொடுமைகளுக்கும், தனியார் ஏகபோகத்திற்கும் காரணம் இந்த கேபிள் டி.வி. தான். சென்ற அம்மா ஆட்சியின்போதே கேபிள் டி.வி.-யை அரசுடைமையாக்க அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்தார்கள். இரவோடு இரவாக பேரனை துணைக்கு



2011 ஜூன் 8] [திருமதி பா. வளர்மதி]

அழைத்துக்கொண்டு, ஆளுநரை சந்தித்து அதற்குத் தடைபோடச் செய்தவர் எதிர்கட்சித் தலைவராக அன்றைக்கு இருந்த கருணாநிதி. கேபிள் டி.வி. அரசுடைமையாக்கப்படும் என்று அன்றைக்கும் முதலமைச்சர், இன்றைக்கும் முதலமைச்சர் எங்கள் அம்மா அறிவித்திருக்கிறார். அதே ஆளுநர்தான், அதே பேரன்தான், இன்றைக்கு ஆளுநர் மாளிகைக்குப் போக வேண்டியதுதானே, யார் தடுக்கிறார்கள்? திகாருக்கு டிக்கெட் எடுத்து, எந்த நேரம் அழைப்பு வரும் என்று தயாராக பேரன் காத்திருக்கிறார் என்று கருதுகிறேன். இதுதான் விசித்திர சரித்திரம் என்பது. எந்தச் சர்வாதிகாரியும் தான் வெட்டிய குழியில் தானே விழுந்துவிடுவான் என்பதுதான் கடவுள் வகுத்த விதி.

அப்பா சொன்னார் என்று பள்ளிக்குச் சென்றேன் என்று கவிதை எழுதிய மகள். அப்பா சொன்னார் என டி.வி. ஆரம்பித்தேன். அம்மா சொன்னார் என M.P. ஆனேன். யார் சொன்னார் என்று திகாருக்குப் போனார்? புதுக் கவிதை எழுதும் நிலை. 'கூடா நட்பு கேடாய் முடியும்' டில்லிக்குச் சொன்னதா? திகாருக்குச் சொன்னதா? தெரியவில்லை. அமெரிக்காவின் Time பத்திரிகை "Ignominious" வெளியிட்ட உலகத்தின் மோசமான 10 பேரில் இரண்டாவது இடம் பிடித்து வரலாற்றுச் சாதனை புரிந்தவரை வாழ்த்துப் பாடி வழியனுப்பியபோது வருத்தப்படாத மனது, இப்போது ஏன் புலம்புகிறது என்று தெரியவில்லை.

பிற்பகல் 12-35

எங்கள் அம்மாவும்தான் சிறைக்குப் போனார். ஒரு நாள் அல்ல; இரண்டு நாள் அல்ல; இருபத்தெட்டு நாட்கள், எங்கள் அம்மாவும் சிறைக்குப் போனார். சிறைக்குப் போகிறோமே என்று எங்கள் அம்மாவின் முகத்திலே கலக்கம் உண்டா? கண்ணீர் உண்டா? சோர்வு உண்டா? சிங்கம் போல சிறைக்குப் போனார். சிங்கம் போல திரும்பி வந்தார். பத்திரிகைகாரர்கள் கேட்டார்கள், அம்மா அவர்கள் வெளியே வருகிறபோது, "சிறைக்குள்ளே அழுதீர்களாமே?" என்று. உடனே, அம்மா அவர்கள் சிரித்துக்கொண்டே சொன்னார்: "நானா? அழுவதா? என்னுடைய வாழ்க்கையில் இரண்டே முறைதான் அழுதிருக்கிறேன்; ஒன்று, என்னுடைய தாய் சந்தியா மறைந்தபோது; இரண்டு, என்னுடைய அரசியல் ஆசான் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மறைந்தபோது; இரண்டு முறைதான் நான் அழுதிருக்கிறேனே தவிர, நான் அழுவதா?" எனப் பத்திரிகைகளுக்கு அம்மா பதிலளித்தார்.

அந்தக் கண்களில், அந்த முகத்தில் பயத்தை, யாராவது எப்போதாவது பார்த்திருக்கிறீர்களா? அரசியலுக்கு வந்த எல்லோருமே வழக்குகளைச் சந்தித்தவர்கள்தான்; சிறைக்குப் போனவர்கள்தான். காந்தியடிகள் தொடங்கி, தந்தை பெரியார், மூதறிஞர் ராஜாஜி, கர்ம வீரர் காமராஜர், பேரறிஞர் அண்ணா எல்லோரும் சிறைக்குப் போனவர்கள்தான். ஆனால், யாருமே அழுது புலம்பவில்லை; இவர்களைத் தவிர. அவர் தவறு செய்யவில்லை; நான்தான் தவறு செய்தேன்; தவறு செய்யச் சொன்னேன்; ஆனால், யானோ அரசன்? யானே கள்வன்!" என்று பாண்டியன் நெடுஞ்செழியனைப்போல, சொல்ல வேண்டியவர்களிடத்திலெல்லாம் சொல்லிவிட்டு, செல்ல வேண்டிய இடத்திற்குச் செல்ல வேண்டியதுதானே? குடும்பத்தில் அழுகை, கூட்டத்தில் அழுகை, திருவாரூர் தெருக்களிலே ஒப்பாரி, போர்ப் பாட்டுப் பாடிய பொது மேடைகளிலேயே, அழுமூஞ்சு அரசியல் எதற்காக நடத்துகிறார்கள்? "மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை, எமை மாட்ட நினைத்திடும் சிறைச்சாலை". இதெல்லாம் மேடைக்கு மட்டும்தானா? மகன், முதுகிலே புண்பட்டான் எனக் கேட்டு,

"முதியோள் சிறுவன்
படையழிந்து மாறினன் என்றுபலர் கூற,
கொண்ட வாளொடு படுபிணம் பெயரா
செங்களம் துளவுவோள் சிதைந்து வேறாகிய
படுமகன் கிடக்கை காண்
ஈன்ற ஞான்றினும் பெரிது உவந்தனளே!"

என்று காக்கைப்பாடினியார் பாடினார். இதற்கு ஒக்கூர் மாசாத்தியார் பாடலும் பொருந்தும். எங்களுக்கு மட்டும் சொன்ன பாடம் உங்களுக்கு இல்லையா? Law some times sleeps, but never die—சட்டம் சில நேரங்களில் உறங்கலாம், சட்டம் சில நேரங்களில் உறங்கலாம். ஆனால் ஒரு நாளும் அது இறப்பதில்லை. சட்டம் இப்போது விழித்துக் கொண்டுவிட்டது. சட்டம் மட்டுமா? சமுதாயமும்தான். இப்போது தரப்பட்டிருப்பது தண்டனை; அதற்கு ஓய்வு என்று புது விளக்கம் சொல்லக்கூடாது. அப்படியானால், ஆயுள் தண்டனைக் கைதிகூட தனக்கு ஓய்வு தரப்பட்டிருக்கிறது என்று சொல்ல முடியும். ஓய்விலேகூட மூன்று வகை உண்டு, retirement, voluntary retirement, compulsory retirement; இப்போது



தரப்பட்டிருப்பது தண்டனையைப் போன்ற கட்டாய ஓய்வு. இந்தத் தண்டனை மக்களின் சாபம் கொடுத்த தண்டனை. எந்த மக்களைப்பற்றி இப்போது எங்கள் அம்மா தீர்மானம் கொண்டு வந்தாரோ, தீர்மானம் இந்த அவையிலே நிறைவேற்றப்பட்டிருக்கிறதோ, அந்த மக்களோடு, தமிழக மக்களும் சேர்ந்து விட்ட சாபம். "கண்ணீர் துடைப்பான், காப்பாற்றுவான், படை தருவான், பாதுகாப்புத் தருவான்" என்று வந்த கட்டபொம்மனை எட்டப்பன் என்ன செய்தான் என்பது வரலாறு அறியும். கடல் அலைகள் காறித் துப்பிக் கொண்டிருக்கின்றன. வரலாற்றுப் பழியைச் சுமந்து வாழ்நாள் எல்லாம் திரிய வேண்டியதுதான். முள்வேலி முகாம் இப்போது மனக்கட்டில் தோன்றி மனச்சாட்சியோடு பேசுகிறதா? இல்லை. எல்லாவற்றுக்கும் எங்கள் அம்மா அவர்கள் இப்போது ஆட்சிக்கு வந்து சரியான பதிலை இன்றைக்கு அவர்களுக்குத் தந்து கொண்டிருக்கிறார்கள். அம்மா அவர்கள் அறிவித்த சலுகைகள் எல்லாம் ஒன்றரை ஆண்டுக் காலத்தில் நிறைவேற்றித் தரப்படும் என்று அறிவித்திருக்கிறாரே, அதுதான் அவர்களுக்கு பெருத்த வருத்தம். இன்றைக்குத் தமிழக மக்களின் மனதிலே நீங்காத இடத்திலே சிம்மாசனம் போட்டு அமர்ந்திருப்பவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

*பிற்பகல் 12-40*

மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு. உங்களால் எனக்கு அறிமுகப்படுத்தப்பட்ட ஆயிரம்விளக்கு தொகுதியிலே இருக்கிற சில பிரச்சினைகள். தொகுதியில் பெரும்பாலும் மக்கள் அதிகமாக நடமாடக்கூடிய பகுதி சென்னையின் மத்திய பகுதி, ஆயிரம்விளக்கு பகுதி. அந்தப் பகுதியிலே மிகப்பெரிய நெடுஞ்சாலைகளிலே மட்டும்தான் போக்குவரத்து வசதி இருக்கிறது. ஆனால், உள்வட்டச் சாலைப் பகுதிகளிலேயெல்லாம் போக்குவரத்து வசதிகள் இல்லை. வேலைக்குச் செல்லுகிறவர்கள், படிக்கக்கூடிய மாணவர்கள், மருத்துவமனைகளுக்குச் செல்லக்கூடியவர்களுக்கெல்லாம் போக்குவரத்து வசதி இல்லாத காரணத்தால் share auto அல்லது தனியான முறையிலே ஆட்டோவில் செல்வதற்கு அவதிப்படுகிறார்கள். குறிப்பாக, தாய்மார்கள் அவதிப்படுகிறார்கள். அவர்களுக்காக நெல்சன் மாணிக்கம் சாலையிலேயிருந்து கிண்டி வரை போக்குவரத்து வசதி செய்து தரவேண்டுமென்று நான் தாழ்பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

[திருமதி பா. வளர்மதி] [2011 ஜூன் 8

குடிசை மாற்று வாரியக் கட்டடங்கள் அதிகமாக இருக்கிற பகுதி ஆயிரம்விளக்கு பகுதி. கடந்த ஆட்சியின்போது தி.மு.க.-வைச் சார்ந்தவர்கள் ஒதுக்கீடு என்கிற போர்வையிலே ஒதுக்கீட்டைப் பெற்றுக்கொண்டு, ஒரு வீட்டைப் பெற்றுக்கொண்டு சுற்றியிருக்கிற பகுதிகளையெல்லாம் வளைத்துப்போட்டு, கடைகளைக் கட்டி பக்கத்திலே இருக்கிற பெரிய பெரிய பகுதிகளையெல்லாம் வாடகைக்கு விட்டு, ஏதோ சொந்த இடத்தைப்போல, பரம்பரை இடத்தைப்போல வாடகைக்கு விட்டு சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கும் ஒரு முற்றுப்புள்ளி வைத்து, ஆக்கிரமிப்பு செய்திருக்கிற பகுதிகளையெல்லாம் அகற்ற வேண்டும். ஒரு ambulance செல்லுவதற்குக்கூட வசதி இல்லாத குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் பல இருக்கின்றன. அவற்றை அரசாங்கம் மீட்க வேண்டும் என்று நான் தாழ்பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நமச்சிவாயபுரத்தையும் சூளைமேடு பகுதியையும் இணைப்பதற்கு ஒரு சுரங்கப் பாதை அமைத்துத் தரவேண்டுமென்று தாழ்பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் சொல்லாமலேயே செய்பவர். சொன்னதைச் செய்பவர்கள், மேடையிலே பேசியவர்கள், ஏமாற்றிவிட்டுப் போனவர்கள். ஆனால், அம்மா அவர்கள் சொல்லாமலேயே செய்யக்கூடியவர்கள் நிச்சயமாக. ஆயிரம்விளக்கு தொகுதி மக்களின் பிரச்சினைகளைக் கனிவோடு ஏற்று நிறைவேற்றித் தரவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இங்கிலாந்து நாட்டின் ரோசெஸ்டர் ஒரு முறை சொன்னார், பிரிட்டிஷ் இளவரசர் இரண்டாம் சார்லஸ் முட்டாள்தனமாக ஒரு வார்த்தைகூட பேசியது இல்லையாம். ஆனால், மூளையோடு எந்தக் காரியமும் செய்ததில்லையாம். தமிழ்நாட்டிலும் அப்படி ஒரு கோமாளி இருக்கிறார். எண்ணெய்ப் பீப்பாவுக்கு சட்டை வேட்டி மாட்டியதைப்போல, உருண்டு வரும் அவர், British ஆட்சிக் காலத்தில் இங்கிலாந்தின் ஆட்சிக்கு அஞ்சியவர்கள் French ஆட்சிக்கு உட்பட்ட பாண்டிச்சேரியிலே பதுங்கிக் கொண்டார்களாம். டெல்லியை தன்னுடைய பதுங்குப் பிரதேசமாக மாற்றிக்கொண்டு அவர் சொன்னார், "அடுத்தத் தேர்தலோடு அண்ணா தி.மு.க. கட்சியே இருக்காது" என்று நாப்பறை கொட்டியவர்தான் ஆப்பசைத்த குரங்காக இப்போது அலறிக் கொண்டிருக்கிறார். இதோ அண்ணா தி.மு.க. இருக்கிறது; எங்கள் அம்மா அரியாசனத்தில் இருக்கிறார். எங்கள் கட்சியே இருக்காது என்று சொன்னவர் இப்போது எங்கே? இத்தோடு முடிந்துவிட்டது என்றவர்களின் இடுப்பொடித்துக் காட்டியவர் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)



2011 ஜூன் 8] [திருமதி பா. வளர்மதி]

பெண்ணுக்கு வேலி, தாலி. அந்தத் தாலிக்குத் தங்கம் தந்த தாயே, தீ சுடும் என்பார்கள்; நீங்கள் தீயைச் சுட்ட தெய்வீகம். ஆணவத் திமிரை அடியோடு சாய்த்த அதிசயப் புயல் நீங்கள். மூச்சுக் காற்றால் முழுச் சூரியனை ஊதி அணைத்த ஊழிப் புயல் நீங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தாகம் எனத் தவித்த மக்களுக்கு வேகமாய் பாயும் விசை கங்கை நீங்கள். சென்னைத் தாயின் தாகம் போக்கிய தமிழ்க் காவிரி நீங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா உங்கள் பொன்னடி வணங்கி, இந்த வாய்ப்பை எனக்குத் தந்தமைக்கு நன்றி தெரிவித்து, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து வணங்கி உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 10 நிமிடங்கள்.

***திரு. கே. தங்கவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். மூன்றாவது முறையாக தமிழகத்தினுடைய முதல்வராகப் பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, அவையில் இடம் பெற்றுள்ள மாண்புமிகு கட்சித் தலைவர்களே, பேரவை உறுப்பினர்களே, உங்கள் அனைவருக்கும் வணக்கம்.

மக்களின் பெரும் ஆதரவோடு மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள தமிழக முதல்வர் அவர்களுக்கு எங்கள் கட்சியின் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். கவர்னர் அவர்களுடைய உரையிலே, விலைவாசியைக் கட்டுப்படுத்துவது சம்பந்தமான பல்வேறு விவரங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

பிற்பகல் 12-45

இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழக அரசினுடைய தோல்விக்கான முக்கியமான காரணங்களில் விலைவாசி உயர்வு ஒரு மிக முக்கியமான காரணம் ஆகும். அதிலும் குறிப்பாக,

உணவுப் பொருள்களுடைய விலையேற்றம் என்பது இன்றைக்கு சாதாரண மக்கள் வாங்கிப் பயன்படுத்த முடியாத அளவிற்கு விலை உயர்ந்து இருக்கிறது. தங்களுடைய தேர்தல் அறிக்கையில் விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கு ஊக வாணிபம் தடுக்கப்படும் என்றும், பதுக்கல் ஒழிக்கப்படும் என்றும் குறிப்பிட்டிருக்கிறீர்கள். பொதுவாக மத்திய அரசாங்கத்தினுடைய பொருளாதாரக் கொள்கையின் விளைவாக இந்த ஊக வாணிபம், தாராளமயம், தனியார்மயத்தின் காரணமாக மிகப் பெரிய அளவுக்கு விலைவாசிகள் உயர்ந்து கொண்டிருக்கின்றன. விலைவாசி உயர்வுக்கு 70 சதவீத காரணங்கள் ஊக வாணிபம், On-line trading என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அதுமட்டுமல்ல, பெட்ரோல், டீசல் விலை உயர்வின் காரணமாகவும், இன்றைக்கு விலைவாசி கடுமையாக உயர்ந்து கொண்டிருக்கிறது. இதைக் கட்டுப்படுத்துவது என்பது மிக முக்கியமானது. இதைக் கட்டுப்படுத்துவதற்கு மத்திய அரசாங்கத்தை நிர்ப்பந்திக்க வேண்டும். குறைந்தபட்சம் உணவுப் பொருள்களாவது இந்த ஊக வாணிபத்திலிருந்து விடுவிக்கப்பட்டு கட்டுப்படுத்தப்பட வேண்டும். அதுமட்டுமல்ல, இன்றைக்கு ஏற்றுமதிக் கொள்கையின் காரணமாக, பதுக்கல் காரணமாக, பஞ்சு, பருத்தி, நூல் விலையேற்றம் காரணமாக கோவை (மேற்கு) மாவட்டப் பகுதி முழுவதும் இருக்கக்கூடிய பஞ்சாலை, பவர்லூம், கைத்தறி, பனியன், கார்மென்ட்ஸ் ஆகிய தொழில்கள் மிகப் பெரிய பாதிப்புக்கு உள்ளாகியிருக்கின்றன. நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் மிக அதிகமான வாக்கு வித்தியாசத்தில் அந்தப் பகுதியினுடைய வேட்பாளர்கள் வெற்றி பெற்றதற்கு இது ஒரு மிக முக்கியமான காரணமாகும்.

அதேமாதிரி, இன்றைக்கு விவசாயத்திற்கு அடுத்தபடியாக அதிக வேலைவாய்ப்பைத் தருகிற பஞ்சு, பருத்தி சம்பந்தப்பட்ட தொழில்களில் கொள்கை மாற்றங்களை உருவாக்க வேண்டும். விலைவாசி என்று சொல்கிறபோது, இன்றைக்கு உணவுப் பொருள்கள் மட்டுமல்ல, மணல்கூட ஒரு லோடு 13,000 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்வதாகச் சொல்லப்படுகிறது. எனவே, இவற்றையெல்லாம் கட்டுப்படுத்துவது என்பது மிக முக்கியமானது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, இன்றைக்கு தி.மு.க. அரசினுடைய தோல்விக்கு மிக முக்கியமான காரணங்களில் மின்சார வெட்டு என்பது மிக





முக்கியமானதாகும். மின் பற்றாக்குறையால் இந்த மாநிலத்தினுடைய தொழில் வளர்ச்சி மிகப் பெரிய அளவிற்கு பாதிப்பை ஏற்படுத்தியது. கோவை இன்ஜினியரிங் தொழில், பவர்லூம், பனியன், கைத்தறி, திண்டுக்கல் பஞ்சாலைகள், தோல் பதனிடும் தொழிற்சாலை, விவசாயம் உட்பட மிகப் பெரிய பாதிப்புகளுக்குக் காரணமாக இவை இருந்திருக்கின்றன. அந்த மின்சார வெட்டின் காரணமாக ஏதோ தொழில் உற்பத்தி மட்டுமல்ல, சிறு, குறு தொழில்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டு கோவையில் தேர்தலுக்கு முன்னால் மிகப் பெரிய அளவுக்கு சிறு தொழில் நடத்தக்கூடியவர்கள் ஒரு வேலை நிறுத்தத்தை மேற்கொண்டார்கள் என்பது மிக முக்கியமானது. அதோடு மட்டுமல்ல, வேலைவாய்ப்பு, சம்பளம், உற்பத்தி பாதிப்பு இவையெல்லாம் மின்சார வெட்டின் காரணமாக மிகப் பெரிய அளவிற்கு கடந்த ஆட்சிக் காலத்திலே பாதிப்பை ஏற்படுத்தின. அம்மா அவர்களுடைய ஆட்சியில் மத்தியத் தொகுப்பிலிருந்து 1000 மெகாவாட் கேட்டிருப்பது மகிழ்ச்சியளிக்கக்கூடியது. ஆனால், அதே சமயத்தில் மின் உற்பத்தித் திறனை முழுமையாகப் பயன்படுத்துவதற்கும், புனல், நிலக்கரி, எரிவாயு, காற்றாலை இவற்றை முழுமையாகப் பயன்படுத்தி மின்சாரத்தினுடைய திருட்டைக் கட்டுப்படுத்தி, மின்சாரப் பயன்பாட்டை மக்களுக்கு உணர்த்துகிற அடிப்படையிலே செய்கிறபோது மின்சார வெட்டை நாம் எதிர்கொள்ள முடியும். இன்றைக்கு இது மிக முக்கியமான பிரச்சினையாக நம்முன் இருக்கிறது என்பதையும், விவசாயம் உட்பட தமிழகத்தினுடைய எல்லா பகுதிகளையும் பாதிக்கக்கூடியதாக இது இருக்கிறது என்பதையும் குறிப்பிட விரும்புகிறோம்.

பிற்பகல் 12-50

அடுத்து, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பதவியேற்றவுடன் முதல் பிரச்சினையாக சாயக்கழிவுப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு துறை சார்ந்த அமைச்சர்களையும், அதிகாரிகளையும் அழைத்துப் பேசி, அவர்களுடைய ஆலோசனைப்படி விவசாயிகள், தொழில்முனைவோர் ஆகியோரை தனித் தனியாக அழைத்துப் பேசினார்கள்.

குறிப்பாக விவசாயம் என்பது சாயத் தொழில் பிரச்சினை காரணமாக மிகப் பெரிய பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது.

[திரு. கே. தங்கவேல்] [2011 ஜூன் 8

விவசாய நிலம் பாதிப்பு, சுற்றுச்சூழல் பாதிப்பு, குடிநீர் பாதிப்பு இவற்றையெல்லாம் ஏற்படுத்தக்கூடியதாக இருக்கிறது. அதேசமயத்தில் தேர்தல் காலங்களில் கிட்டத்தட்ட ஜனவரி மாதம் 28 ஆம் தேதிமுதல் 739 தொழிற்சாலைகள் பூட்டிக் கிடக்கின்றன. அந்தத் தொழிற்சாலைகள் அரசாங்கத்தினுடைய, உயர் நீதிமன்றத்தினுடைய உத்தரவின்பேரில் நிறுத்தப்பட்டதினுடைய விளைவாக இன்றைக்கு ஏற்றுமதி அளவு 25 சதவிகிதம் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, லோக்கல் தயாரிப்பு என்பதும் பாதிப்பிற்குள்ளாகியிருக்கிறது. எனவே, மிகுந்த நம்பிக்கையோடு வாக்களித்து வெற்றிபெற செய்திருக்கக்கூடிய இந்த அரசின்மீது மிகப் பெரிய நம்பிக்கையை, கோவை, திருப்பூர், ஈரோடு, கரூர், நாமக்கல் போன்ற பகுதிகளிலுள்ள பவர்லூம், கைத்தறி, பனியன், கார்மெண்ட்ஸ், பஞ்சாலைத் தொழில்கள் நடத்துபவர்கள் வைத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் அதற்கான தீர்வு காணவேண்டிய மிக முக்கியமானப் பிரச்சினையாக இன்றைக்கு நம் முன்னால் இருக்கிறது. கிட்டத்தட்ட 5 இலட்சம் பேர் நேரிடையாகவும், மறைமுகமாகவும் வேலை செய்கிறார்கள். திருப்பூர் மாவட்டம் மட்டுமல்லாமல், அதைச் சுற்றியிருக்கக்கூடிய தமிழகத்தினுடைய தென் மாவட்டங்கள் உள்பட இந்த வேலைகளிலே பங்கு பெறுகிறார்கள். அதோடு மட்டுமல்ல, வேறு மாநிலங்களைச் சார்ந்த ஏராளமான தொழிலாளர்கள் இந்தத் தொழிலிலே ஈடுபடுகிறார்கள். எனவே, இந்தத் தொழில் திருப்பூரில் மட்டும் சுமார் 12 ஆயிரம் கோடி ரூபாய்க்கு அன்னியச் செலாவணியை ஈட்டிக் கொடுக்கிற தொழிலாகவும், 5 ஆயிரம் கோடி ரூபாய்க்கு உள்நாட்டு வாணிபத்தை நடத்தக்கூடிய தொழிலாகவும் இருக்கிறது. எனவே, இதை மிக முக்கியமானப் பிரச்சினையாகக் கருதி, தீர்வு காண வேண்டும்.

அதேசமயத்தில், இந்தப் பிரச்சினை நீதிமன்றத்தினுடைய உத்தரவின்பேரிலே இருக்கிறது. இரு தரப்பையும் அழைத்துப் பேசி அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக, பொதுச் சுத்திகரிப்பு ஆலைகள் போட்டால் பிரச்சினைகள் தீரும் என்ற முறையிலே பவானியினுடைய சட்டமன்ற உறுப்பினர் பேசுகிறபோது குறிப்பிட்டார்கள். திருப்பூரிலே பல்லடம் தொகுதியில் 12 சுத்திகரிப்பு ஆலைகளும், திருப்பூர் வடக்கு தொகுதியிலே 5 சுத்திகரிப்பு ஆலைகளும், திருப்பூர் தெற்கு தொகுதியிலே 2 சுத்திகரிப்பு ஆலைகளும், பெருந்துறை சட்டமன்றத்



2011 ஜூன் 8] [திரு. கே. தங்கவேல்]

தொகுதிக்கு உட்பட்ட ஒரு சுத்திகரிப்பு ஆலை என்கிற முறையிலே 20 சுத்திகரிப்பு ஆலைகளும் இதற்கு உள்ளடங்கிய 700-க்கும் மேற்பட்ட சாயப்பட்டறைகள் அதிலே இணைக்கப்பட்டிருக்கின்றன. இதனுடைய விளைவாக தேர்தல் அறிக்கையிலே குறிப்பிடுகிறபோது விவசாயிகளுடைய ஒத்துழைப்போடு ஆடை அலங்காரச் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை ஏற்படுத்தி, 70 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு தருவதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதேமாதிரி 10 ஆடை அலங்காரப் பூங்கா ஏற்படுத்தி கைத்தறி ஏற்றுமதிக்கு ஏற்பாடு செய்வதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, இந்த அடிப்படையான பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டால்தான் வேலைவாய்ப்பு ஏற்படும். விவசாயிகளோடு இணைந்து ஆடை அலங்கார சிறப்புப் பொருளாதார மண்டலங்களாகட்டும், 10 ஆடை அலங்கார பூங்காக்கள், கைத்தறி ஏற்றுமதியாகட்டும் இவை சிறக்க வேண்டுமென்று சொன்னால், இந்தப் பிரச்சினைகளிலே அரசு தலையிட்டுத் தீர்வு காணவேண்டும். ஒன்று, உடனடியானத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இரண்டாவது நீண்டகாலத் தீர்வும் தேவைப்படுகிறது என்ற முறையிலே அரசு உடனடியாக அவசரமாகத் தலையிட்டு இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும். சாயக்கழிவு நீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்பது ஏதோ திருப்பூர் மட்டுமல்ல பவானி, பள்ளிப்பாளையம், நாமக்கல், கரூர், ஈரோடு பகுதிகளினுடைய தொழில்கள் முழுவதும் சாயம் சம்பந்தப்பட்ட, நூல் சம்பந்தப்பட்ட, printing சம்பந்தப்பட்ட பிரச்சினையாக இருக்கின்றன. இதிலே, அரசு தலையிட்டு ஓர் உயர்மட்ட நிபுணர் குழுவை அமைத்து மாற்றுத் திட்டத்தை உருவாக்குவதற்கும், விரைவாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். விவசாயத் தொழில் முனைவோர், அரசுத் தரப்பு இவர்களெல்லாம் அமர்ந்து பேசி இதற்கான உடன்பாடுகள் காண்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 12-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 10 நிமிடங்கள்.*

[2011 ஜுன் 8

*__திரு. கே. உலகநாதன்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக சட்டமன்றத்தில் ஆளுநர் அவர்களால் அளிக்கப்பட்ட உரையின்மீது இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கும், திருத்துறைப்பூண்டி தொகுதியிலிருந்து என்னை 2-வது முறையாக வேட்பாளராக நிறுத்தி வெற்றி பெறச் செய்த இந்திய கம்யூனிஸ்டு கட்சிக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது வெற்றிக்காக கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாது இலட்சக்கணக்கான மக்களைச் சந்தித்து வாக்குகள் கேட்டு உரையாற்றிய மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றிதனைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தினுடைய தலைவர் மாண்புமிகு Captain அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் செயலாளர் தோழர் திரு. ராமகிருஷ்ணன் அவர்களுக்கும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் தேசிய செயலாளர் தோழர் திரு. ராஜா அவர்களுக்கும், மாநிலச் செயலாளர் தோழர் திரு. தா. பாண்டியன் அவர்களுக்கும், முதுபெரும் சுதந்திரப் போராட்ட வீரர் திரு. ஆர். நல்லக்கண்ணு அவர்களுக்கும் என்னுடைய நன்றிதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதிய தமிழகம் கட்சியினர், மனித நேய மக்கள் கட்சியினர் மற்றும் இயக்குநர் திரு. சீமான் அவர்களுக்கும், என்னை வெற்றி பெறச் செய்த திருத்துறைப்பூண்டி தொகுதி வாக்காளப் பெருமக்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றிதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்கிறேன். தேர்தல்கால வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பொறுப்பேற்ற 15 தினங்களுக்குள் மிக வேகமாக செயல்படுவதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் பாராட்டுகிறேன்.

கடந்த காலங்களில் காலம் கடந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டதன் காரணமாக கடைமடை பகுதிகளுக்குக் காலத்தில் தண்ணீர் வந்து சேராததால் குறுவை சாகுபடியும் இல்லாமல், சம்பா சாகுபடியும் மழை, வெள்ளச் சீற்றத்தால்



2011 ஜுன் 8] [திரு. கே. உலகநாதன்]

பாதிக்கப்பட்டு காவிரி டெல்டாப் பகுதி விவசாயிகள் மிகப் பெரிய சோதனையும், வேதனையும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். இவ்வாண்டு புதிதாகப் பொறுப்பேற்ற தமிழக அரசு, தமிழ்நாடு விடுதலையான பிறகு, முதன் முதலில் ஜுன் 6 ஆம் தேதி மேட்டூர் அணையிலிருந்து குறுவைப் பாசனத்திற்குத் தண்ணீர் திறந்து, காவிரி டெல்டாப் பகுதி விவசாயிகளை, பொது மக்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்திய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு காவிரி டெல்டாப் பகுதி மக்கள் சார்பிலும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலும் நன்றிதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இருப்பினும் காவிரி டெல்டாப் பகுதி விவசாயிகள் நலன், உரிமை பறிபோய்விடாமல் காவிரிப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண உச்ச நீதிமன்ற இறுதித் தீர்ப்பை அமல்படுத்த உடனடியாக உரிய நடவடிக்கை மேற்கொண்டு 13 மாவட்ட விவசாயிகளைப் பாதுகாத்திட வேண்டுமென மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை மெத்த பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். இத்துடன் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டவாறு விவசாயிகள் உற்பத்தி செய்யும் செலவைக் கணக்கிட்டு ஆண்டுதோறும் விலை நிர்ணயம் செய்யப்படும் எனக் கூறியதால் விவசாயிகள் மிகுந்த எதிர்பார்ப்போடு உள்ளார்கள். எனவே, இவ்வாண்டு நெல், கரும்பு சாகுபடிக்கான விலையை உயர்த்தி வழங்கிட வேண்டுமாய் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

அனைத்து விவசாயிகளுக்கு உரம், விதை தட்டுப்பாடின்றியும், கூட்டுறவுக் கடன்கள் நிபந்தனையின்றியும் வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்ற ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் பயிர் காப்பீடு செய்துள்ளனர். அவர்களுக்கு இதுவரையிலும் இழப்பீடு வழங்கப்படவில்லை. விவசாயப் பணி துவங்குவதற்கு முன் வழங்கிட வழிவகை காண வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

2010-2011 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களின் பட்டியலை தயார் செய்து பாதிக்கப்பட்ட அனைவருக்கும் அரசு நலத் திட்டங்களின் பலன் கிடைத்திட நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கே. உலகநாதன்] [2011 ஜூன் 8

*பிற்பகல் 1-00*

திருப்பூர், கோவை போன்ற நகரங்களுக்கு வேலை தேடி குடிபெயர்ந்து போகும் இளைஞர்கள், இளம் பெண்கள், வேலைக்கு உத்தரவாதம், வேலைக்கேற்ற ஊதியம் மற்றும் உயிருக்கு உத்தரவாதம் இன்றி பல்வேறு பிரச்சினைகளை சந்திக்கிறார்கள். ஆகையால் குடிபெயர்ந்து போன தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்புத் திட்டம் ஒன்றை உருவாக்கிட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

மக்கள் நலத் திட்டங்கள். மாநில வளர்ச்சியை உத்தரவாதப்படுத்த மாநில நிருவாகத்தைச் சீரமைப்பதோடு சட்டம்-ஒழுங்கை நிலைநிறுத்துவதும் தலையாய கடமையாகும். மக்கள் நலத் திட்டங்கள் பயனாளிகளுக்குச் சென்றடையும் விதத்தில் மக்களின் வேலையை உடனுக்குடன் தீர்த்து வைக்கும் முறையில், அரசு நிருவாகத்தில் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும். அரசு நிருவாகத்தில் ஊழல் மற்றும் விருப்பு-வெறுப்பின் அடிப்படையில் நடைபெறும் செயல்களைத் தடுத்து நிறுத்திட கண்காணிப்பு முறைகளைப் பலப்படுத்திட வேண்டும்.

அதேபோல, தமிழகத்திலுள்ள மக்கள் அச்சமின்றி வாழ்ந்திட, குற்றவாளிகளை இனம் கண்டு சட்டத்தின்முன் நிறுத்தி, கடுமையான தண்டனைகளைப் பெற்றுத் தரும் வகையில் காவல் துறையின் செயல்பாடுகளைப் பலப்படுத்திட வேண்டும்.

முதியோர் ஓய்வூதியம் ரூ.1,000 ஆக உயர்த்தியுள்ளதை வரவேற்கிறேன். வங்கிமூலம் ஓய்வூதியம் கிடைத்திட எடுத்த நடவடிக்கையை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்கிறேன். அதேசமயம், 60 வயது நிறைந்த முதியோர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத் திட்டத்திலுள்ள நிபந்தனைகளில் சில மாற்றங்களைக் கொண்டு வரவேண்டும். தமிழக அரசால் வழங்கப்படும் ஓய்வூதியத்தில், ஆண் வாரிசுகள் இருந்தால் உதவித் தொகை கிடைக்காது என்ற நிபந்தனையைத் தளர்த்த வேண்டும்.

அதேபோல், வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ளோர் பட்டியலில் பெயர் இருக்க வேண்டும் என்பதற்குப் பதில் வறுமையில் உள்ளவர்களுக்கு உதவித் தொகை வழங்கிட வேண்டும். 10 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ளோர் பட்டியல் தயாரிக்கப்படுகிறது. இடைப்பட்ட காலத்தில் வாழ்க்கையில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிடும் வகையில் இல்லை.



2011 ஜூன் 8] [திரு. கே. உலகநாதன்]

அதேபோல, விதவைகள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கும் உதவித் தொகையை உயர்த்துவதோடு வங்கிகளில் உதவித் தொகை வழங்கும் நடைமுறையையும் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

ஆதரவற்ற விதவைகளுக்கு மட்டும்தான் வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை என்பதை மாற்றி விதவைகள் அனைவருக்கும் முன்னுரிமை வழங்கிட இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

+1, +2 அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி மாணவ, மாணவியர் மற்றும் அரசுக் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கும் மடிக் கணினி வழங்கும் திட்டத்தை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்கிறேன். அதேசமயத்தில், தனியார் பள்ளிகளிலும் ஏழை மற்றும் நடுத்தர மாணவ, மாணவியர்கள் கல்வி பயிலுகின்றார்கள். அவர்களின் நலன் கருதி குறைந்தபட்சம் +1, +2 மாணவ, மாணவியர்களுக்காவது மடிக் கணினி வழங்கிட கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தின் தொழில் மற்றும் வேளாண்மை வளர்ச்சிக்கும் மக்களின் அன்றாட பயன்பாட்டிற்கும் மிக அத்தியாவசியமானது மின்சாரம். அத்தகைய மின்சாரத்தை உற்பத்தி செய்வதில் கடந்தகால ஆட்சி போதிய கவனம் செலுத்தவில்லை. அத்துறையில் போதிய பணி நியமனம் செய்யப்படவில்லை. மின் வாரியத்தில் பயன்படுத்தப்படும் மின் கம்பங்கள், கம்பிகள் மின்மாற்றிகள் தரம் குறைவாக இருப்பதால் மக்கள் பெரும் இன்னலுக்கு ஆளாக வேண்டியுள்ளது. எங்கு பார்த்தாலும் மின் கம்பிகள் தரை தாழ்ந்து தொங்குவதும், எப்பொழுது விழும் என்று அச்சுறுத்தும் மின் கம்பங்களும், அடிக்கடி வெடித்துச் சிதறும் மின் மாற்றிகளையும் பார்க்க முடிகிறது. எனவே, மின்சாரத் துறையில் மின் உற்பத்தியை அதிகப்படுத்துவதுடன் மின் அழுத்தம் குறைவாக இல்லாத தமிழகமாக மாற்ற தமிழக அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வெயில் அதிகம் உள்ள தமிழகத்தில் சூரிய ஒளி மின் உற்பத்திக்கு மானியத்துடன்கூடிய திட்டத்தை உருவாக்கி செயல்படுத்திட வேண்டும்.

[திரு. கே. உலகநாதன்] [2011 ஜூன் 8

அதேபோல், அடிப்படை கட்டமைப்பு வசதிகளில் மிக முக்கியமானது சாலைகள். ஆளுநர் உரையில் 500-க்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்குச் சாலை வசதிகள் என்பதை மாற்றி 200 மக்கள் தொகை என்று குறைத்து, திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்.

அதேபோல, ஆயிரக்கணக்கான கிராமங்களில் முக்கிய சாலைகளிலிருந்து 2 கிலோ மீட்டருக்குக் குறைவான தூரத்தில் இணைப்புச் சாலைகள் இல்லாமல் இருக்கிற நிலையை மாற்றி அனைத்துக் கிராமங்களுக்கும் தரமான இணைப்புச் சாலைகளை அமைத்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்தகால ஆட்சியில் ஆண்டுக்கு மூன்று இலட்சம் வீடுகள் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டு அதற்கான நிதியும் ஒதுக்கினார்கள். ஆனால், 2016 ஆம் ஆண்டு வரை அந்தத் திட்டத்தை நடத்துவதாக அறிவித்தார்கள். சட்டமன்றத் தேர்தல் நடைபெறுவதற்கு ஓர் ஆண்டு இருக்கிறபோதே, 2016 ஆம் ஆண்டு மீண்டும் அவர்கள்தான் ஆட்சி அதிகாரத்திற்கு வருவவதைப்போல எண்ணிக் கொண்டு, அந்தத் திட்டத்தை அறிவித்தார்கள். ஆனால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கக்கூடிய சூரிய மின் சக்தியுடன்கூடிய பசுமை வீடு திட்டம் வரவேற்புக்குரியது.

பிற்பகல் 1-05

அதேபோல, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதியின் அடிப்படையில், வீட்டுமனைகளே இல்லாதவர்களுக்கு, மீண்டும் வீட்டுமனை வழங்கும் திட்டத்தை அறிவிக்க வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளதை வரவேற்கிறேன். கடந்த தி.மு.க. ஆட்சியில், கலைஞர் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. அதில், Star Health Insurance என்ற ஒரே நிறுவனத்திற்குத் தமிழகம் முழுவதும் premium செலுத்தப்பட்டு, அத்திட்டத்தால் ஒரு குடும்பத்தில் ஒரு இலட்சம் ரூபாய் வரை காப்பீடு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டாலும், பல தனியார் மருத்துவமனைகளில் குறைந்த தொகை மருத்துவச் செலவிற்குக் கொடுக்கப்பட்டதால், தரமான சிகிச்சை கிடைக்காத



2011 ஜூன் 8] [திரு. கே. உலகநாதன்]

நிலை ஏற்பட்டது. மேலும், கடந்த ஆட்சியில் மொத்தம் எவ்வளவு தொகை premium-ஆக கட்டப்பட்டது; அந்தத் திட்டத்தால் எவ்வளவு பயனாளிகள் பயனடைந்தார்கள் என்ற விவரத்தை வெள்ளை அறிக்கையாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வெளியிட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்து விடுங்கள் sir.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் உள்ள ஒருசில பிரச்சினைகள் குறித்து சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Sir, அதையெல்லாம் சம்பந்தப்பட்ட அமைச்சர்களிடம் எழுதிக் கொடுத்துவிடுங்கள்.

**திரு. கே. உலகநாதன்:** திருத்துறைப்பூண்டி, விவசாயத் தொழிலாளர்கள் நிறைந்த பகுதி. அந்தப் பகுதியில் அரசு கலைக் கல்லூரி கிடையாது. ஆகவே, அரசு கலைக் கல்லூரியை இந்த ஆண்டே தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முத்துப்பேட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு தனித் தாலுகா உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கோட்டூர் ஒன்றியம் என்பது திருவாரூர் மாவட்டத்தில் இருக்கக்கூடிய மிகப் பெரிய ஒன்றியம்; 49 ஊராட்சிகளைக் கொண்ட ஒன்றியம். ஆகவே, அதை இரண்டாகப் பிரித்து, பெருகவாழ்ந்தானைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய ஊராட்சி ஒன்றியத்தை உருவாக்கிட வேண்டும். களப்பாளை மையமாக வைத்து தனி வருவாய்க் கிராமத்தை உருவாக்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மன்னார்குடி-திருத்துறைப்பூண்டி சாலையில் கோரையாற்றில் பாலம் கட்டும் பணி தொடங்காததால், எந்த நேரமும் சாலை துண்டிக்கப்படும் நிலையுள்ளது; உடன் பணியைத் தொடங்கிட வேண்டும். மன்னார்குடி-திருத்துறைப்பூண்டி வேதை சாலை என்பது மிகவும் போக்குவரத்து நெரிசல் மிக்க சாலையாகும். இந்தச் சாலையைத் தரமான (மணியடிக்கப்பெற்றது) நான்கு வழிச் சாலையாக மாற்றித் தர வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 6 பேர் பேச வேண்டும். நீங்கள் 13 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

[2011 ஜூன் 8

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள் மணல் அதிகமான விலைக்கு விற்கப்படுகிறது என்று ஒரு குற்றச்சாட்டை இங்கே சொன்னார்கள். அஞ்சல் வழியிலே அரசியல் செய்தவர்கள், கதை, வசனம் எழுதி நாடகம் போட்டவர்களுடைய ஆட்சி தமிழக மக்களால் தூக்கியெறியப்பட்டு விட்டது. இப்போது மக்களாட்சி புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அமைக்கப்பட்டிருக்கிறது. புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நடவடிக்கையின் காரணமாக, மணல் விலை குறைந்து கொண்டிருக்கிறது. இன்னும் ஓரிரு நாட்களிலே விலை சரியத் தொடங்கிவிடும்; மணல் விலை குறைந்து விடும் என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பு. வெற்றிவேல் அவர்கள். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 10 நிமிடங்கள்.

***திரு. பு. வெற்றிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். "வாழ்க என் தாயே இந்த வையத்து நாட்டிலெல்லாம்! தாழ்வுற்று, வறுமை மிஞ்சி, சட்டம்-ஒழுங்கு சீர்கெட்டு, பாழ்பட்டிருந்த இந்தத் தமிழ்நாட்டை வாழ்விக்க வந்த என் தாயே! நீங்கள் வாழ்க பல்லாண்டு! "நம்பினார் கெடுவதில்லை" இது நான்குமறை தீர்ப்பு. இதற்கு நானே ஒரு உதாரணம். சாதாரணத் தொண்டனாகிய என்னை மாவட்டக் கழக நிர்வாகியாக்கி, இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக்கி, சட்டமன்றத் தேர்தலிலே நிற்க வைத்து, 31 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் ஜெயிக்க வைத்த எங்கள் குடும்பக் குலவிளக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் பாதம் பணிந்து (மேசையைத் தட்டும் ஒலி) என் கோடானு கோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"வெள்ளையனே வெளியேறு!" என்று முழக்கமிட்ட இந்தியாவில், "கொள்ளையனே வெளியேறு; குடும்ப ஆட்சியே வெளியேறு!" என்ற கோஷத்தை முன்வைத்து, மூன்றாம் முறையாக மாண்புமிகு அம்மா அவர்களும், ஆறாம் முறையாக கழக ஆட்சியும் அமைந்ததிலும் கோடானு கோடி மக்கள் மகிழ்ச்சியடைந்திருக்கிறார்கள்.



2011 ஜூன் 8] [திரு. பு. வெற்றிவேல்]

பிற்பகல் 1-10

தமிழ்நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண் முதலமைச்சரும் நீங்களே. 3-வது முறையாக அரியணை ஏற்றிருக்கும் பெண் முதலமைச்சரும் நீங்கள்தான் அம்மா. மக்கள் தீர்ப்பளித்து அமைக்கப்பட்டுள்ள இந்த 14-வது சட்டப் பேரவையில் மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையில் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றுகிற வாய்ப்பை தந்தமைக்காக நான் மாண்புமிகு அம்மா அவர்களின் வேண்டுகோளை ஏற்று, எனக்கு வாக்களித்த ஆர்.கே. நகர் தொகுதி மக்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2011 இல் தேர்தலுக்குப் பிறகு அண்ணா தி.மு.க.-வே இருக்காது என்று திமிர்த்தனமாக ஆரூடம் பேசியவர்களை "மண்ணை கவ்வ வைத்தது" மட்டுமல்லாமல், அவர்களின் மாவட்டத்தில் தி.மு.க.-வே இல்லாமல் செய்த வாக்காளர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். "அரசன் அன்று கொல்வான்; தெய்வம் நின்று கொல்லும்", "முற்பகல் செய்யின், பிற்பகல் விளையும்" என்ற பழமொழிக்கேற்ப சர்வதேச பயங்கரவாதிகள் இருக்கும் டில்லி திகார் சிறையில் இன்று வாரிசுகளின் வாழ்க்கை. மாண்புமிகு ஆளுநர் உரையின்மீது நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக்காலத்தில் அரசு கேபிள் டி.வி. கார்ப்பரேஷன் துவக்கப்பட்டவுடன், கேபிள் டி.வி.—யில் கோடிக்கணக்கான ரூபாய் சம்பாதித்துக் கொண்டிருந்தவர்கள் ஓடோடி சென்று ஆளுநரை சந்தித்து இத்திட்டத்திற்கு முட்டுக்கட்டைப் போட்டார்கள். அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன், அவர் குடும்பத்துக்குள்ளேயே பிரச்சினை ஏற்பட்டவுடன், அரசு கேபிள் டி.வி. கார்ப்பரேஷன் உயிர் பெற்றது. 60 கோடி ரூபாய் மக்கள் வரிப் பணத்தை விழுங்கியது. அதற்கு ஒரு அதிகாரியும் பணியமர்த்தப்பட்டு பணிகள் துரிதமாக நடந்தன. பிறகு குடும்பத்திற்குள் சமாதானம் ஏற்பட்டவுடன், அன்றைய முதலமைச்சர் "கண்கள் பனித்தன; இதயம் இனித்தது" என்று கூறிய உடனே அரசு கேபிள் டி.வி. கார்பரேஷன் மீண்டும் மூடுவிழா கண்டது. இப்படி அரசு கேபிள் டி.வி. கார்ப்பரேஷன் பலமுறை மாண்டும், மீண்டும் வந்தது. ஆனால், தற்போது

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி ஏற்பட்டவுடன் மக்களுக்கு சலுகைக் கட்டணத்தில் கேபிள் டி.வி. இணைப்பும், அதேசமயம், கேபிள் டி.வி. இயக்குபவர்களையும் பாதிக்காத வகையில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று அறிவித்திருப்பது மக்களிடம் வரவேற்பு பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆட்சியில் வீட்டு வசதித் திட்டம் என்ற திட்டத்தின்மூலம் வீடு கட்டுபவர்களுக்கு ரூபாய் 75 ஆயிரம் நிதியுதவி வழங்கியதாகவும், அத்தொகையைப் பெற்று வீடு கட்டியவர்களெல்லாம் பணப் பற்றாக்குறையால் கடன் வாங்கி, கடன் வாங்கி ஓய்ந்து போய்விட்டார்கள். இது எப்படி இருக்கிறது என்றால், “வட்டிக்குக் கடன் வாங்கி அதில் அட்டிகை வாங்கி அந்த அட்டிகையை விற்று வட்டியைக் கட்டியதுபோல,” என்கிற கிராமத்துப் பழமொழியைத்தான் நினைவுபடுத்துகிறது. ஆனால், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் ஏழை மக்களின் வலி அறிந்து சூரிய மின்சக்தியுடன்கூடிய பசுமை வீடு கட்டும் திட்டத்தின் மூலமாக, வீடு ஒன்றுக்கு ரூபாய் 1.80 இலட்சம் செலவில் வீடுகள் கட்டித்தரப்படும் என்று ஆளுநர் உரையில் கூறியிருப்பது மக்களுக்கு மகிழ்ச்சி அளித்திருக்கிறது. “கரைமேல் பிறக்க வைத்தான்; எங்களைத் தண்ணீரில் பிழைக்க வைத்தான்” என்று மீனவர்களின் வாழ்க்கைத் துயரத்தை டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பாடியுள்ளார். அத்தகைய மீனவர்களின் நலனைப் பாதுகாக்கும் வகையில், மீன் பிடிக்கத் தடை செய்யப்பட்ட காலங்களில் வழங்கப்படும் உதவித்தொகை ஆயிரம் ரூபாயிலிருந்து இரண்டாயிரமாக உயர்த்தி வழங்கப்பட்டிருப்பதைப் பார்த்து மீனவ சமுதாயமே மாண்புமிகு அம்மா அவர்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறது.

ஆதரவற்ற மகளிர், முதியோர், விதவைகள் ஆகியோருக்கான மாதாந்திர உதவித்தொகை ரூபாய் ஆயிரமாக உயர்த்தப்பட்டிருப்பது, அத்தொகையைப் பெறும் பயனாளிகள் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களை மனம் குளிர வாழ்த்துகிறார்கள். அனைத்து ரேஷன் கார்டுகளுக்கும் 20 கிலோ அரிசி இலவசம் என்ற திட்டம் தமிழகத்தில் உள்ள தாய்மார்களின் முகத்தில் மகிழ்ச்சியைக் கொண்டுவந்த திட்டமாகும். ஏழை மக்கள் தங்கம் என்று காகிதத்திலேதான் பார்க்க முடியும் என்கின்ற நிலையை மாற்றி, 10 ஆம் வகுப்பு படித்த பெண்களுக்கு 4 கிராம்



தங்கமும், 25 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பணமும், பட்டயப் படிப்பு, பட்டப் படிப்பு படித்த பெண்களுக்கு 4 கிராம் தங்கமும், 50 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பணமும் அளித்து மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருப்பது, திருமணம் ஆகாத ஏழைப் பெண்களின் கண்ணீரைத் துடைக்கும் உன்னதமான திட்டமாகும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை மாணவ மாணவிகளுக்கு எட்டாக் கனியாக இருந்த கணினி மடியில் தவழ்கின்றவகையில் 9.12 இலட்சம் மாணவ மாணவிகளுக்கு மடிக் கணினி வழங்கப்போவதை, ஆளுநர் உரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் எதிர்காலத்தில் கணினிக் கல்வியில் தமிழகத்தில் பெரும் புரட்சியை ஏற்படுத்தும்.

பிற்பகல் 1-15

சென்ற ஆட்சியில் சட்டம்-ஒழுங்கு சந்தி சிரித்தது. பசும்பொன் கிராமத்தில் சுதந்திரப் போராட்டத் தியாகி தேவர் திருமகனார் ஜெயந்திக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் சென்றபோது, கயவர்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் உயிருக்குக் குறி வைத்தார்கள். அதற்குக் காரணமானவர்களைக் கண்டுபிடித்து சட்டத்திற்கு முன்னால் நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், முன்னாள் அமைச்சர் தா. கிருட்டிணன் கொலை வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பின்மீது மேல்முறையீடு செய்து உண்மையான குற்றவாளிகள் யார் என்பதைக் கண்டுபிடித்து அவர்களை சட்டத்தின்முன் நிறுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பனையூர் இரட்டைக் கொலை வழக்கில், சந்தேகத்திற்கு உரியவர் என்று கூறி கைது செய்யப்பட்ட நபர் காவல் நிலையத்தில் வைத்து அடித்துக் கொல்லப்பட்டார். இதிலும் உண்மைக் குற்றவாளியைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் பாலகிருஷ்ணன் என்னும் ஒரு நீச்சல் வீரர், Commonwealth போட்டியில் பங்குபெற பயிற்சிக்கு வந்தபோது, சென்னையைச் சேர்ந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், அவரது நண்பரும் சேர்ந்து அந்த பாலகிருஷ்ணனை அடியாள் வைத்துத் தாக்கியதாகத் தெரியவந்தது. அதையும் புலன் விசாரணை செய்து கண்டுபிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆட்சியில் சட்டம் ஒழுங்கு தீப் பிடித்து திகு திகுவென எரிந்தது. காவலும் சட்டமும் நீதி தேவதையின் கண் எதிரில் மோதிக்கொண்டு ரத்தம்

[திரு. பு. வெற்றிவேல்] [2011 ஜூன் 8

வடிய நின்றது. ஆட்சி நடக்கிறதா என்ற சந்தேகம் தமிழகத்தில் மட்டுமல்ல அகில உலகத்திலும் சந்தி சிரிக்கச் செய்தது. சமூகத்தின் குரல்வளை நெறிக்கப்பட்டது. கூக்குரல் இட்டு ஜனநாயகம் அலறியது. ஆனால் எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள் வளம் காணும் தமிழகத்தை உருவாக்க, தன்னலம் காணாது உழைக்கும் தாயுள்ளம், இடர் செய்யும் சதிகளை சதிராடி, பொன்சுடர் முகம் காட்டும் இதய தெய்வம், வழங்குவதில் மழை மேகமாய், கொள்கை முழங்குவதில் இடிமின்னலாய், ஏற்றமிகு ஒளியூட்டி, எங்களுக்கு வழிகாட்டி தமிழக மக்களின் உயிர், உடைமை, உணவு என எல்லாமுமாய் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆட்சித் திகழப் போகிறது. ஒட்டுமொத்தமாக மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியைப் பற்றிக் கூறவேண்டுமானால், "Government-of the people, by the people, for the people" என்று அமெரிக்க அதிபர் ஆப்ரகாம் லிங்கன் அவர்கள் கோடிட்ட வார்த்தைகளை நினைவுகூர விரும்புகிறேன்.

என்னுடைய ஆர்.கே. நகர் தொகுதியில் 140 ஏக்கர் நிலம் இருக்கிறது. அதை சமூகவிரோதிகள் பிளாட் போட்டு விற்பதற்குமுன், குடிசை மாற்று வாரியம் அதைக் கையகப்படுத்தி அங்கே குடிசை மாற்று வாரியத்தின்மூலம் வீடுகளைக் கட்டிக்கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, ஆர்.கே. நகர் தொகுதி மக்கள் பெரும்பாலோர் குடிநீருக்குப் பதிலாகக் கழிவு நீரைத்தான் அருந்துகிறார்கள். பெரும்பாலான பகுதிகளில் குடிநீருடன் கழிவுநீர் கலக்கிறது. குடிநீர் வாரியம் ஆமை வேகத்தில் செயல்படுகிறது. மாநகராட்சியும் ஆமை வேகத்தில் செயல்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வெற்றிவேல் நீங்கள் speed ஆகப் பேசுங்கள். (சிரிப்பு)

**திரு. பு. வெற்றிவேல்:** ஆகையால் மாண்புமிகு அம்மா அவர்கள் இதைச் சரிசெய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** O.K. speed ஆகப் பேசியதற்கு நன்றி. மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள். பத்து நிமிடங்கள். இன்னும் நான்கு உறுப்பினர்கள் பேச வேண்டும். அன்புகூர்ந்து நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் குறித்த அந்த பத்து நிமிடத்திற்குள் பேசி முடித்துக் கொடுத்தால் மிக்க நன்றி தெரிவிப்பேன்.



2011 ஜூன் 8]

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். வரலாற்றுச் சிறப்புக்குரிய தமிழ்நாடு சட்டப் பேரவையில் புதியதாக அமைந்துள்ள 14-வது அவையில் பேசுவதற்கும், பணியாற்றுவதற்கும் வாய்ப்பினை வழங்கிய, நாட்டின் எதிர்காலம் இளைஞர்களின் கையில் உள்ளது என்ற பொதுவான கருத்தை நிரூபிக்கும் வகையில், 27 வயதே ஆன எனக்கு செஞ்சி தொகுதியில் வாய்ப்பளித்த சமூக நீதிக் காவலர், தமிழினப் போராளி மருத்துவர் அய்யா அவர்களுக்கும், இளைஞர்களின் எழுச்சி நாயகர், புகையிலை ஒழிப்புச் சட்டத்தை காந்தி பிறந்த நாளான அக்டோபர் 2-ல் இந்தியா முழுவதும் நடைமுறைப்படுத்திய நடுவண் அரசின் முன்னாள் சுகாதாரத் துறை அமைச்சர் பசுமை நாயகர் மருத்துவர் அன்புமணி இராமதாஸ் அவர்களுக்கும், தமிழகத்தில் மூன்றாவது முறையாக முதல்வராகப் பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், முன்னாள் முதலமைச்சர் மரியாதைக்குரிய முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் மரியாதைக்குரிய திருமாவளவன் அவர்களுக்கும், அனைத்து கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், என்னை ஈன்றெடுத்து வளர்த்து ஆளாக்கிய என் தாய், தந்தைக்கும், எனக்கு நம்பிக்கையுடன் வாக்களித்து சட்டமன்றத்திற்கு அனுப்பி வைத்த செஞ்சி தொகுதி பொது மக்களுக்கும் என் அன்பு கலந்த வணக்கத்தை நன்றியுணர்வோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-20

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அமைந்துள்ள 14-வது பேரவையில் மேதகு ஆளுநர் அவர்கள் வாசித்து அளித்த உரையின்மீது பா.ம.க. சார்பில் முதலாவதாகப் பேசுவதற்கு, எனது கன்னிப் பேச்சுக்கு வாய்ப்பளித்த தங்களுக்கு மீண்டும் என் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேதகு ஆளுநர் உரையில் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும், பொதுமக்களின் மேம்பாட்டிற்காகவும் அறிவிக்கப்பட்டுள்ள திட்டங்களான குடும்ப அடையாள அட்டைதாரர்களுக்குப் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் 20 கிலோ அரிசி இலவசமாக வழங்க அறிவித்து, ஜூன் முதல் தேதி

முதல் நடைமுறைப்படுத்தியதையும், ஏழைக் குடும்பத்துப் பெண்களுக்கு மிக்சி, கிரைண்டர் மற்றும் மின் விசிறி ஆகியவற்றை செப்டம்பர் 15 ஆம் தேதி முதல் வழங்குவதாக அறிவித்ததையும், முதியோர் பெற்று வந்த மாதாந்திர ஓய்வூதியத் தொகை ரூபாய் 500 என்பதை இரட்டிப்பாக்கி ஆயிரம் ரூபாயாக வழங்க நடைமுறைப்படுத்தியதையும், இதைப்போல இன்னும் பல மக்கள் நலத் திட்டங்கள் செயல்படுத்துவதை பா.ம.க. சார்பாக வரவேற்கின்றேன்.

நமது நாட்டின் முதல் தொழிலான, ஆதாரத் தொழிலான விவசாயம், கால்நடைத் துறை, மீன் வளம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு சிறப்புக் கவனம் செலுத்துவதற்காக தமிழ்நாட்டிலுள்ள 75 இலட்சம் சிறு, குறு விவசாயிகளின் வருவாயைப் பெருக்க பண்ணைசார் சிறப்புத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும் என்ற அறிவிப்பு வரவேற்கத்தக்கது. அத்திட்டத்தை விவசாயிகள் முழுவதும் பயனடையும் வகையில் முன்னோடித் திட்டமாக செம்மைப்படுத்தி, விரைந்து நிறைவேற்ற வேண்டுமென பா.ம.க. சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டூர் அணையிலிருந்து முன்கூட்டியே தண்ணீர் திறந்துவிடப்பட்டிருப்பதால், வட கிழக்குப் பருவ மழை தொடங்குவதற்கு முன்பாகவே குறுவை சாகுபடி முடிவடையும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் பயிர்கள் மழை மற்றும் வெள்ளத்தில் சிக்கி அழிவது தடுக்கப்படும். ஆறுகளை இணைக்க நடவடிக்கை எடுக்கப்படும்; அனைத்து நதிநீர் சிக்கல்களும் தீர்க்கப்படும்; பிளாஸ்டிக் பைகளுக்குத் தடை விதிக்கப்படும் போன்ற அறிவிப்புகளும் வரவேற்கத்தக்கவை.

தனி மனிதனுடைய வளர்ச்சிக்கும், ஒரு குடும்பத்தின் உயர்வுக்கும், நாட்டின் மேம்பாட்டிற்கும் அடித்தளமாக இருப்பது கல்வியாகும். இக்கல்வி ஏழை, பணக்காரர்கள் என்ற வேறுபாடு இல்லாமல் அனைவருக்கும் ஒரே தரமான, ஒரே சீரான கல்வி கிடைக்க வேண்டுமென எங்கள் மருத்துவர் அய்யா அவர்களாலும், பாட்டாளி மக்கள் கட்சியும் தொடர்ந்து குரல் கொடுத்து வலியுறுத்தி வருகின்ற சமச்சீர் கல்வித் திட்டம் மிக மிக அவசியமானதாகும். இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த 1 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை சுமார் 200 கோடி ரூபாய் செலவில் அச்சடிக்கப்பட்டு தயாராக உள்ள சமச்சீர் கல்வி பாடத் திட்டத்தில் உள்ள குறைகளைக் களைந்து நடப்பு ஆண்டிலேயே நடைமுறைப்படுத்த வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.





தற்போது தனியார் பள்ளிகளும், கல்லூரிகளும் கல்விக் கட்டணம் என்ற பெயரில் மிக மிக அதிகமாக நன்கொடையும், கட்டணமும் வசூலித்து வருவது அனைவரும் நன்கு அறிந்ததே. இதனால் பெற்றோர்களும், மாணவ, மாணவியர்களும் மிகுந்த வேதனைக்கு உள்ளாகி, அதிர்ச்சியடைந்து நாள்தோறும் ஆங்காங்கே போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. தற்போது சில மாவட்டங்களில் சிறப்பான கல்வி அளிப்பதாகக் கூறி தனியார் மெட்ரிக் பள்ளிகள் 11 ஆம் வகுப்பில் சேர்வதற்கு இலட்சக்கணக்கில் பணம் வசூலிக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது. இவ்வாறான பள்ளிகள் எவை என்பதைக் கண்டறிந்து 11 ஆம் வகுப்பில் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள மாணவர்களின் பட்டியலை எடுத்து, அவர்களின் பெற்றோர்களைக் கேட்டறிந்தால் உண்மை நிலை தெரிய வரும். எனவே, பெற்றோர்களின் புகாரை எதிர்பாராமல் இக்கட்டணக் கொள்ளையைத் தடுக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பா.ம.க. சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

ஈழத் தமிழர்கள் தங்கியுள்ள முகாம்கள் சீரமைக்கப்பட்டு அவர்கள் தமிழகத்திலேயே சுய மரியாதையுடன் வாழத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பது வரவேற்கத்தக்கது. இம்முகாம்களில் குடிநீர் மற்றும் மருத்துவ வசதிகள், தமிழ் அகதிகளின் குழந்தைகளுக்குக் கல்வி அளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். ஈழப் போரில் இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் உயிரிழந்த நிலையில் பன்னாட்டுப் போர் விதிமுறைகள் எதையும் பின்பற்றாமல் கல்வி நிலையங்கள்மீதும், பள்ளிகள்மீதும், தேவாலயங்கள்மீதும் இரசாயன குண்டு மழை பொழிந்து தமிழினத்தை அழித்த இலங்கை அதிபர் ராஜபக்சேவை சர்வதேசப் போர்க் குற்றவாளி என அறிவிக்க கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை உளமார வரவேற்று மற்றும் மீதம் எஞ்சியுள்ள ஈழத் தமிழர்கள் தம் சொந்த நாட்டிலேயே சுய மரியாதையுடன், சுதந்திரமாக வாழ்வதற்கு உறுதி செய்யும் வகையில் தமிழ் ஈழம் அமைவதே ஒரே தீர்வாகும் என்று பா.ம.க. சார்பாக அறிவித்துக்கொள்கிறேன்.

[திரு. அ. கணேஷ்குமார்] [2011 ஜுன் 8

பிற்பகல் 1-25

தமிழ்நாட்டில் கலைநயம் மிக்க கட்டடங்களையும், புராதனச் சின்னங்களையும் பாதுகாத்து சுற்றுலா வளர்ச்சியை மேம்படுத்துவதாக அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது. எனினும், எனது சட்டமன்றத் தொகுதியான செஞ்சியில் வரலாற்றுச் சிறப்புவாய்ந்த தேசிங்கு ராஜன் ஆண்ட செஞ்சிக்கோட்டை உள்ளது. இக்கோட்டை முறையான பராமரிப்பும், பாதுகாப்பு வசதியும் இன்றி பாழ்பட்டுக் கிடக்கிறது. சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்குப் பதிலாக அவர்களை அச்சுறுத்தும் வகையில் சமூக விரோதிகளின் செயல்பாடுகள் அங்கே நிறைந்துள்ளன. எனவே, தொல்பொருள் ஆய்வுத் துறை வசமுள்ள அந்த செஞ்சிக்கோட்டையை வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில், அனைத்து சுற்றுலாப் பயணிகளும் அச்சமின்றி ஆர்வத்துடன் செஞ்சிகோட்டையைக் கண்டு களிக்கின்ற வகையில், அரசுப் பூங்காக்கள், மின் அலங்காரங்கள், குளங்கள் சீரமைத்தல் போன்ற பணிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். தற்போது திருவண்ணாமலைக்கு மாதந்தோறும் வந்து செல்லும் பக்தர்களும் மேல்மலையனூர் அங்காளபரமேஸ்வரி அம்மன் கோவிலுக்குச் செல்கின்ற இலட்சக்கணக்கான மக்களையும் செஞ்சிக்கோட்டைக்கு வந்து செல்லும் வகையில் இக்கோட்டையை ஒரு அழகிய சுற்றுலாத் தலமாக மாற்ற வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னைக் கோட்டையில் தலைமைச் செயலகத்தையும், சட்டப் பேரவைச் செயலகத்தையும் நடத்துவதற்கு இடம் போதுமானதாக இல்லையென்று இதற்கு முன்பாக இருந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில்தான் முதன் முறையாக தெரிவிக்கப்பட்டது. பின்னர் சென்னையில் இராணிமேரிக் கல்லூரி, அண்ணா பல்கலைக்கழகம், கேளம்பாக்கம் ஆகிய இடங்களில் புதிய தலைமைச் செயலகம் கட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, பல்வேறு காரணங்களால் அந்த முயற்சிகள் கைவிடப்பட்டன. அதன் பின் வந்த அரசு ரூ.1,200 கோடி செலவில் புதிய தலைமைச் செயலகக் கட்டடத்தைக் கட்டி, அது முடிவுறும் தருவாயில் உள்ளது. அங்கேயே தலைமைச் செயலகத்தையும், சட்டப் பேரவைச் செயலகத்தையும் நடத்தியிருக்கலாம் என்று பாட்டாளி மக்கள் கட்சி கருதுகிறது.



2011 ஜுன் 8] [திரு. அ. கணேஷ்குமார்]

சென்னை மாநகரின் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்காக மெட்ரோ இரயில் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தை விரிவுபடுத்துவதுதான் அனைவருக்கும் பயனுள்ளதாக இருக்கும். ஆனால், இந்தத் திட்டத்திற்கு மூலதனச் செலவு அதிகமாகும் என்று கூறி, மோனோ இரயில் திட்டம் செயல்படுத்தப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. ஆனால், மோனோ இரயில் திட்டம் ஏற்கெனவே பல நாடுகளில் அறிமுகப்படுத்தப்பட்டு தோல்வியடைந்துவிட்டது. மோனோ இரயிலுக்கு புகழ்பெற்ற ஜப்பான் நாட்டிலேயே மொத்தம் 108 கிலோ மீட்டர் தொலைவிற்குத்தான் மோனா இரயில் ஓடுகிறது. வளர்ச்சி அடைந்த நாடான ஆஸ்திரேலியாவில் 7 கிலோ மீட்டர் தொலைவிற்குத்தான் மோனோ இரயில் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. சீனா உள்ளிட்ட அனைத்து ஆசிய நாடுகளிலும் சேர்த்து ஒட்டுமொத்தமாக 164 கிலோ மீட்டர் தொலைவிற்குத்தான் மோனா இரயில் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. உலகின் எந்த நகரிலும் 30 கிலோ மீட்டர் தொலைவிற்குக் கூடுதலாக மோனோ இரயில் திட்டம் செயல்படுத்தப்படவில்லை. இந்நிலையில் சென்னை மாநகரில் மட்டும் தொடக்கத்தில் 111 கிலோ மீட்டர் தொலைவிற்கும், பின்னர் 300 கிலோ மீட்டர் தொலைவிற்கும் மோனோ இரயில் திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது சரியானது தானா என்று தமிழக அரசு பரிசீலித்து, வெளிநாடுகளில் தோல்வி அடைந்த இத்திட்டத்தை சென்னைக்குக் கொண்டு வருவதை அரசு கை விட்டு, மெட்ரோ இரயில் திட்டத்தை விரிவுப்படுத்த வேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் பேசட்டும். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மெட்ரோ இரயில் திட்டத்தை இந்த அரசு கைவிட்டுவிட்டது போலவும், மோனோ இரயில் திட்டத்தைத்தான் அறிமுகப்படுத்தியிருப்பதைப் போலவும் இங்கே குறிப்பிடுகிறார். நம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மெட்ரோ இரயில் திட்டத்தைக் கைவிடவில்லை. அந்தத் திட்டம் அப்படியே இருக்கின்றது. சென்னை நகரில் நாளுக்கு நாள் பெருகிவரும் போக்குவரத்து

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2011 ஜூன் 8

நெரிசலைக் குறைப்பதற்காக, கூடுதல் வசதியாக குறைந்த காலத்திலேயே செயல்படுத்தக்கூடிய ஒரு புதிய போக்குவரத்து அமைப்பான மோனோ இரயில் திட்டத்தையும் கூடுதலாக இங்கே செயல்படுத்தவிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த மோனோ இரயில் திட்டம் பல நாடுகளில் தோல்வியடைந்துள்ளதாக தவறான கருத்தைச் சொல்கிறார்கள். இப்பொழுதும் ஐரோப்பிய நாடுகளிலும், ஆசிய நாடுகள் உட்பட பல நாடுகளில் அது வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதையும் உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்து, மெட்ரோ இரயில் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு பத்து, பதினைந்து வருடங்கள் ஆகலாம். ஆனால் கூடுதல் போக்குவரத்து நெரிசலைப் போக்குவதற்காக மோனோ இரயில் திட்டத்தை, குறுகிய காலத்திலேயே இரண்டு ஆண்டுகளுக்குள்ளே செயல்படுத்தக்கூடிய வாய்ப்பிருக்கிறது என்ற காரணத்திற்காக மோனோ இரயில் திட்டத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இங்கே அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெளிவுப்படுத்த விரும்புகிறேன்.

**திரு. அ. கணேஷ்குமார்:** *நன்றி.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், சீக்கிரம் உரையை முடித்து விடுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் பேசும்பொழுது புதிய தலைமைச் செயலகம் பற்றியும் அந்தக் கட்டடத்திற்கு மாற்ற வேண்டுமென்பது பற்றியும் கூறினார்கள். இதைப் பற்றி டாக்டர் புரட்சித் தலைவி முதலமைச்சர் அம்மா அவர்கள் எதற்காக அங்கே மாற்றவில்லை என்பதை மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கின்றார்கள். அதுபோக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2001-2006 ஆம் ஆண்டு, முதலமைச்சராக இருந்த காலக்கட்டத்திலே புதிய தலைமைச் செயலகம் கட்ட வேண்டும், ஆக்கபூர்வமான இடத்திலே கட்ட வேண்டும் என்று முயற்சி செய்ததைத் தடுத்தவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்த நேரத்திலே நான் நினைவுகூர விரும்புகின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*



2011 ஜூன் 8]

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். இன்னும் 4 பேர் பேச வேண்டும்.*

**திரு. அ. கணேஷ்குமார்:** முன்னாள் நடுவண் சுகாதாரத் துறை அமைச்சர் மருத்துவர் அன்புமணி இராமதாஸ் அவர்களால் கொண்டு வரப்பட்ட 108 ஆம்புலன்ஸ் திட்டம் தமிழ்நாடு உள்ளிட்ட 18 மாநிலங்களில் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்தி, வாகனங்களைப் பெருக்கி அனைத்து குக்கிராம மக்களும் உடனடி பயனடையும் வகையில் செயல்படுத்த வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கு என்னுடைய தொகுதிக்குத் தேவையான சில கோரிக்கைகளைக் கொண்டு வருகிறேன். அவற்றைப் பரிசீலித்து நிறைவேற்றித் தருமாறு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

மேல்மலையனூர் அங்காள பரமேஸ்வரி அம்மன் கோயிலுக்கு இலட்சக்கணக்கான மக்கள் வந்து செல்கின்றனர். இவர்களின் பயன்பாட்டிற்காக மேல்மலையனூரில் நவீன வசதி கொண்ட தனி பேருந்து நிலையம் அமைத்துத் தரப்பட வேண்டும்.

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, சிறுபான்மை மக்கள் மற்றும் கிறித்துவர்கள் வாழும் மிகவும் பின்தங்கிய பகுதியான செஞ்சி தொகுதியில் இதுவரையில் அரசின் சார்பாக எந்தவொரு கலைக் கல்லூரியோ, பொறியியல் கல்லூரியோ, பாலிடெக்னிக்கோ, ஐ.டி.ஐ.-யோ, எந்தவொரு கல்வி சம்பந்தப்பட்ட நிறுவனங்களோ இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடப்பு நிதியாண்டிலேயே செஞ்சி தொகுதிக்கு ஒரு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை அமைத்து அந்தப் பகுதியில் வாழும் மாணவச் செல்வங்களின் கல்வி வளர்ச்சிக்கு உடனடியாக உதவுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

செஞ்சி-திருக்கோவிலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் தொடங்கப்பட்டு பணிகள் நடந்து வருகின்றன; அந்தப் பணிகள் மெத்தனமாக உள்ளன. அவற்றை அரசு விரைவுபடுத்த ஆவன செய்யுமாறு தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. அ. கணேஷ்குமார்] [2011 ஜூன் 8

இறுதியாக, நிர்வாகம் சீராக நடைபெற, அரசு வளர்ச்சித் திட்டங்கள் மக்களுக்கு விரைந்து சென்றடைய பரப்பளவில் மிகப் பெரிய மாவட்டமான, 11 சட்டமன்றத் தொகுதிகளைக் கொண்ட விழுப்புரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, புதியதாக கள்ளக்குறிச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு மாவட்டத்தை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சி தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.சி.டி. பிரபாகர் அவர்கள். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 10 நிமிடங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கன்னிப் பேச்சு என்பதால்தான் நான் தலையிடவில்லை. அவர் பேசி முடித்த பிறகு சொல்லலாம் என்றிருந்தேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, ஏதோ இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, பள்ளிக் கட்டணத்தில் கொள்ளை அடிக்கப்படுவதைப் போன்ற ஒரு தோற்றத்தை உருவாக்குவதைப்போல பேசினார். மாண்புமிகு கிள்ளியூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பேசும்போதும் இதுபோன்று சொன்னார். ஏற்கெனவே கடந்த ஆட்சி இருக்கிறபோதே பள்ளிக் கட்டண கட்டாய நிர்ணயச் சட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. கோவிந்தராஜன் கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டு, அதன்மூலம் கல்விக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதை எதிர்த்து உயர் நீதிமன்றத்திற்குச் சென்றவர்களுக்கு 2009-2010-ல் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைத்தான் வசூலிக்க வேண்டும்; அதை மீறி அதிகமாக வசூலிக்கப்பட்ட கட்டணங்களையெல்லாம் வைப்புத் தொகையிலே வைக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர் ராஜினாமா செய்து சென்ற பிறகு, ரவிராஜ பாண்டியன் கமிட்டி இப்போது அதை விசாரணை செய்து கொண்டிருக்கிறது. அவர் அறிக்கை கொடுத்த பிறகுதான் முடிவு எடுக்க முடியும். இதில் அரசுகூட எந்த முடிவும் எடுக்க முடியாது. ஏனென்றால் நீங்கள் 5 ஆண்டுக்காலம் அந்த அரசுக்கு ஆதரவு கொடுத்திருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் சட்டத்தை நிறைவேற்றுகிறபோது அதிலே அரசாங்கத்திற்கு எந்தவிதமான—அந்தக் கல்விக் கட்டண நிர்ணயச் சட்டத்திலே



2011 ஜூன் 8] [திரு. சி.வி. சண்முகம்]

தமிழக அரசு முடிவு செய்வதற்கு எந்தவிதமான—அதிகாரமும் இல்லை. அதைத்தான் அம்மா அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். ரவிராஜ பாண்டியன் கமிட்டி அறிக்கை கொடுக்கட்டும், பாதிக்கப்பட்ட மாணவர்களாகட்டும், அந்தப் பள்ளிகளாகட்டும் அரசாங்கத்திடம் முறையிட்டால் அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்களே தவிர, அரசாங்கம் எதிலும் தலையிட முடியாது என்று சொல்லவில்லை. ஆகவே, தெளிவாகச் சொல்கின்றோம், பள்ளிக் கட்டணங்களை அதிகமாக, முறைகேடாக வசூலித்தால் கண்டிப்பாக நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு, அம்மாவினுடைய அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.சி.டி. பிரபாகர் அவர்கள். (குறுக்கீடு) தம்பி, பிறகு கல்வி மானியத்திலே பார்த்துக்கொள்ளலாம். உட்காருங்கள் தம்பி. (குறுக்கீடு) நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) நிறைய வாய்ப்பு இருக்கிறது, கல்வி மானியத்திலே பார்த்துக்கொள்ளலாம்.

*பிற்பகல் 1-35*

***திரு. ஜே.சி.டி. பிரபாகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து இயற்றப்பட்டிருக்கிற தீர்மானத்தில் நானும் பேசுகிற ஒரு நல்ல வாய்ப்பினை எனக்கு அளித்திருக்கிற வணக்கத்திற்குரிய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், தங்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் முதற்கண் புலப்படுத்திக்கொள்கிறேன். பரிசுத்த வேதாகமத்திலே ஒரு வசனம் இருக்கிறது. குதிரை யுத்த நாளுக்கு ஆயத்தமாயிருக்கும். ஜெயமோ கர்த்தரால் வரும் என்று. மகா உன்னதமான ஒரு வெற்றியை புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு அளித்திருக்கிறார்கள். அவர்களுடைய அமோகமான செல்வாக்கிலே என்னை வில்லிவாக்கம் தொகுதியில் எனக்கு எதிராகப் போட்டியிட்ட திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் முன்னாள் நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களை 10,000 வாக்குகள் வித்தியாசத்திலே வெற்றி பெறச் செய்த (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குத்தான் அந்தப் பெருமையும் புகழும் சேரும் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்கிறேன். நான் மட்டுமல்ல, இந்த

[திரு. ஜே.சி.டி. பிரபாகர்] [2011 ஜூன் 8

அவையிலே அம்மாவின் அணியிலே போட்டியிட்டு சென்னை முதல் குமரி வரை வெற்றியைப் பெற்றிருக்கிற அத்தனை பேரும் ஏதோ எங்களுக்கும் கொஞ்சம் செல்வாக்கு இருக்கிறது. அந்தச் செல்வாக்கிலே நாங்கள் வெற்றியைப் பெற்றோம் என்று கருதுவோமேயானால், அவையெல்லாம் மக்களாலே எள்ளி நகையாடப்படக்கூடிய நகைப்பிற்குரியவையாக இருக்கும். ஏனென்றால் எல்லாப் புகழுக்கும் பெருமைக்கும் புரட்சித் தலைவி அம்மாவின் அமோகமான செல்வாக்குதான் காரணம், (மேசையைத் தட்டும் ஒலி) எல்லாமே அம்மாதான், நாமெல்லாம் சும்மாதான் என்பதை மக்கள் நமக்குத் தெளிவாக உணர்த்தியிருக்கிறார்கள் இந்தத் தேர்தலிலே.

1980-ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். 27 வயதிலே என்னை சட்டமன்ற உறுப்பினராக்கினார். இதே சட்டமன்ற வளாகத்திற்கு வருகிறபோது என்னுடைய தந்தையார் ஜான் சாமுவேல் அவர்களும், தாயார் கமலம் அவர்களும், மறைந்த என் மூத்த அண்ணன் ஆரோக்கிய ராஜனும், கிருபாகரன் அண்ணனும் இங்கே வந்து, இந்த வளாகத்திற்குள்ளே இருக்கக்கூடிய இந்தப் பேரவை வளாகத்திற்குப் பக்கத்திலே இருக்கக்கூடிய திருச்சபையில் ஜெபம் செய்து எப்படி நடக்க வேண்டுமென்று சொல்லி, புரட்சித் தலைவர் எனக்கு அறிவுரை கூறி என்னை இங்கே உள்ளே அனுப்பி வைத்தார்கள். பின்னாளிலே நான் கழகத்தினுடைய செங்கற்பட்டு மாவட்டச் செயலாளர் ஆவதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பரிந்துரை செய்தார்கள். நான் கழகத்தினுடைய எம்.ஜி.ஆர். இளைஞரணி செயலாளர் ஆவதற்கு அம்மா அவர்கள் உறுதுணையாக இருந்தார்கள். பின்னாலே எங்கோ ஓரத்திலே இருந்த என்னை அழைத்து, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கருணை பார்வை பட்டு, அவர்களாலே ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவருடைய கருணைப் பார்வையாலே இன்றைக்கு வில்லிவாக்கம் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக மட்டுமல்ல, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சிறுபான்மை நலப் பிரிவினுடைய துணைச் செயலாளராக ஆக்கப்பட்டு அவர்களாலே இன்றைக்கு உருவாக்கப்படுவதில் நான் பூரிப்பும் பெருமையும் அடைகின்றேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் இந்த மகத்தான வெற்றியைப் பெற்றிருக்கிற அம்மா அவர்களுக்கு



2011 ஜூன் 8] [திரு. ஜே.சி.டி. பிரபாகர்]

அந்த வெற்றியினுடைய முழுப் பரிமாணமும் எப்படிப்பட்டது என்பதை இந்த மாமன்றத்தில் இருக்கிற அத்தனை பேரும் அறிவார்கள். She has the universal support, unconditional support and absolute support from all sections of the public. எல்லா ஜாதி, மத, இன மொழி பேசும் மக்கள் அத்தனை பேரும் சென்னை தொடங்கி குமரிமுனை வரைக்கும் எங்கும் ஒரே குரலாகக் கேட்டது அம்மா, அம்மா, அம்மா. நாம் எல்லாம் சொன்னோம். எங்களுடைய இயக்கத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர் அம்மா அவர்களுக்கு வாக்களியுங்கள் என்று கேட்டோம். ஆனால் மக்கள் சொன்னார்கள், உங்கள் இயக்கத்தினுடைய பொதுச் செயலாளர் மட்டுமல்ல, இனி அம்மாதான் தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சர் என்று சொல்லக்கூடிய அளவிற்கு (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு மகத்தான வெற்றியை இன்றைக்கு அளித்திருக்கிறார்கள். ஆட்சிக் கட்டிலிலே அம்மா அமர்ந்திருக்கிறார்கள். அம்மாவைப் பாருங்கள். எவ்வளவு நிதானம், எவ்வளவு பொறுமை, எவ்வளவு அறிவாற்றல், எவ்வளவு கருணை. ஒன்றைக் குறித்து வைத்துக்கொள்ளுங்கள். இன்று இந்தியா போற்றுகிற மாமனிதராக நாம் பார்க்கிற நம் அம்மா உலகம் போற்றுகிற மகானாக நல்லாட்சி தரக்கூடிய அந்தச் சூழ்நிலைகள் இன்றைக்கு தமிழ்நாட்டிலே (மேசையைத் தட்டும் ஒலி) உருவாகிக் கொண்டிருக்கின்றன.

பிற்பகல் 1-40

இந்த மாமன்ற உறுப்பினர் திருவாரூரிலே திருவாய் மலர்ந்திருக்கிறார். சட்டமன்ற ஆளுநர் உரையை வைத்துக் கொண்டு அவர் பேசியிருக்கிற அந்தப் பேச்சை இங்கே நான் குறிப்பிட்டுச் சொல்வது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன். அவர் சொல்கிறார், “அந்தப் புத்தகத்தில் 2 ஆம் பக்கத்தில் 3-வது பத்தியில், அவர்களை அறியாமலேயே ஒரு உண்மையைக் குறிப்பிட்டுள்ளார்கள். அதில், இந்தப் புதிய அரசும் ஏழைகளின் நலனையே முன்னிறுத்தி செயல்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது, அப்படியென்றால் பழைய அரசும் அப்படித்தான் செயல்பட்டது, புதிய அரசும் அதைத்தான் முன்னிறுத்தி செயல்படும் என்று தங்களை அறியாமலேயே தெரிவித்துள்ளனர். அந்தப் பிழையை, பிழை என்று பாராமல் நான், நமக்குக் கிடைத்த பாராட்டு என்றுதான் எடுத்துக்கொள்வேன்” என்று அவர் சொல்லியிருக்கிறார்கள்.

என் அருமை மாமன்ற உறுப்பினர்களே, பேரவைத் தலைவர் அவர்களே, அந்த 2 ஆம் பக்கத்திலே 3-வது பத்தியில் ஏழை, எளிய மற்றும் ஆதரவற்ற மக்களின் நலனையே முதன்மையாகக்

[திரு. ஜே.சி.டி. பிரபாகர்] [2011 ஜூன் 8

கொண்டு செயல்பட்ட பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோருடைய கொள்கையை இந்த அரசு பின்பற்றி வருகிறது. மாண்புமிகு முதல்வர் தலைமையில் அமைந்துள்ள இந்தப் புதிய அரசும் ஏழைகளின் நலனையே முன்னிலைப்படுத்தி செயல்படும் என்று சொல்வது, பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோருடைய கொள்கையை இந்த அரசு பின்பற்றி வருகிறது. அந்த அரசும், அந்த அரசைப்போல இந்தப் புதிய அரசும் என்று பேரறிஞர் அண்ணாவையும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய அரசைத்தான் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கின்றார்களே தவிர, முந்தைய அரசு என்று திருவாரூரிலே பேசியிருக்கிற அவர்கள் அரசைப் பற்றிக் குறிப்பிடவில்லை என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். ஏனென்றால் ஏழைகளைப் பற்றி கவலைப்படக்கூடிய ஓர் அரசாக பேரறிஞர் அண்ணா அரசும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அரசும் இருந்திருக்கின்றது. ஏழைகளைப் பற்றி 24 மணிநேரமும் கவலைப்படுகிற ஒரே அரசாக புரட்சித் தலைவி அம்மா ஆட்சிதான் இருக்கிறது என்பதையும் நாட்டில் இருக்கிற எல்லோரும் அறிவார்கள். இப்படிப்பட்ட பேச்சுகளையெல்லாம் மாமன்றத்திலே உறுப்பினர்களாக இருக்கின்றவர்கள், வெளியிலே பேசுகிறபோது, ஏதோ வரிக்கு வரி வார்த்தையைச் சொல்லி, வாய் ஜாலத்தைச் சொல்லி, ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னாலே பேசிய அதே வார்த்தை விளையாட்டையெல்லாம் இன்றைக்கும் பேசிக்கொண்டு இருப்பார்களேயானால், நான் ஒன்றைச் சொல்லுவேன், பேரவைத் தலைவர் அவர்களே, he must stop this non-sense. Such words make no sense என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்கிறேன். திருக்குறளிலே 'அரசியல்' அதிகாரத்தில்

கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்
உடையான்ஆம் வேந்தர்க்கு ஒளி.

என்று ஒரு குறள். கொடை பண்பும், கருணையும், நீதி முறையும், தளர்ந்த குடிகளைக் காத்தலும் ஆகிய நான்கு செயல்களையும் உடையவன் ஏனைய அரசர்களுக்கெல்லாம் விளக்காவான் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இன்றைக்குப் பொறுப்பேற்றிருக்கிற நம்முடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏனைய முதலமைச்சர்களுக்கெல்லாம் முதல்வராக, இந்தியத் துணைக்



2011 ஜூன் 8] [திரு. ஜே.சி.டி. பிரபாகர்]

கண்டத்திலே இருக்கிற அனைத்து மாநிலங்களுக்கும் முன்மாதிரியாக தமிழ்நாட்டை அழைத்துச் செல்கிறார் என்பதைக் கட்டியம் கூறுகின்ற விதத்திலேதான் இந்த ஆளுநர் உரை அமைந்திருக்கிறது.

'யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே' என்று சொல்வார்களே, வரவு-செலவுத் திட்ட அறிக்கைக்கு முன்னாலேயே வந்திருக்கிற இந்த ஆளுநர் உரை ஒரு அட்சய பாத்திரமாக, கற்பகத் தருவாக, அனைத்துத் தரப்பு மக்களையும் உள்ளடக்கியிருக்கின்ற மகத்தான திட்டங்களையெல்லாம் நமக்குத் தந்திருக்கிறது. Democracy-யிலே "A Government should be by the people, for the people and of the people" என்று சொல்வார்கள். சென்ற ஆட்சி உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். ஒரு குடும்பத்தார், குடும்பத்துக்காக மட்டும், ஒரு குடும்பத்தால் நடத்தப்பட்ட ஆட்சி தூக்கி வீசப்பட்டிருக்கிறது. அந்த ஆட்சியை அகற்றிவிட்டு, இன்றைக்கு People have given a definite mandate to Amma. அம்மா அவர்களே, உங்களுக்கு இந்த Chief Ministership has been given on a platter. தங்கத் தட்டிலே வைத்து, தாயே! எடுத்துக்கொள்ளுங்கள் என்று தமிழ்நாட்டு மக்கள் வாரி வழங்கியிருக்கிறார்கள். She has struck the last nail on the coffin of the D.M.K. Party என்று நான் சொல்லுவேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சவப்பெட்டியிலே வைத்து அதன் இறுதி ஆணியை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அடித்து இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) You are the savior of the State என்று இன்றைக்கு ஆர்ப்பரித்த தமிழ்நாட்டு மக்கள் தங்களின் பின்னால் அணிவகுத்து இருக்கிற காட்சிகளை நாம் பார்க்க முடிகிறது. புரட்சித் தலைவர் தொடங்கிய தர்ம யுத்தத்தின் கடைசி அத்தியாயத்தையும், வெற்றிச் சரித்திரத்தையும் இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

மதுரையிலே இரண்டு பேரும் சேர்ந்து பிடித்த அந்தச் செங்கோலை நினைவுப்படுத்திப் பார்க்கிறேன். ஓங்கி உயர்த்திப் பிடித்திருக்கிற அந்தச் செங்கோல், தாழாமல், வீழாமல், வளையாமல் பார்த்துக்கொள்கிற மாபெரும் பொறுப்பை, தியாகத் தழும்புகளைச் சுமந்து புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு ஏற்று இருக்கிறார்கள்.

பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருக்கிற ஏழைகளுக்கான திட்டமாக இருந்தாலும் சரி,

சூரிய ஒளியிலே மின்சாரம் தயாரிக்க வேண்டும் என்று விஞ்ஞான கண்ணோட்டத்தோடு, தொலைநோக்குப் பார்வையோடு தந்திருக்கிற திட்டமாக இருந்தாலும் சரி,--இன்றைக்கு புதிய சட்டசபை வளாகத்திலே ஏன் நடத்தவில்லை என்று மாமன்ற உறுப்பினர் கேட்டார். நாங்கள் எல்லாம் நிம்மதியாக இருக்கிறோம். இங்கே உட்கார்ந்துகொண்டு வானத்தைப் பார்த்துகொண்டு, பயந்துகொண்டு, எப்போது இடிந்து விழுமோ என்று பயப்படக்கூடிய நிலைமையிலே சட்டமன்றம் இன்றைக்கு இல்லை. அங்கே வைத்திருந்தால் தரமற்ற ஒரு கட்டடத்திலே அமர்ந்து கொண்டு, எங்கே, எப்படி, என்ன ஆகுமோ என்று கவலைப்படக்கூடிய நிலைமையெல்லாம் இல்லாமல், முற்றிலுமாக ஒரு நல்ல பணியை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்து தந்திருக்கிறார்கள்.

*பிற்பகல் 1-45*

பிறந்தால் தமிழ்நாட்டிலே பிறக்க வேண்டும் என்று மற்ற மாநிலக்காரர்கள் எல்லாம் பொறாமைப்படக்கூடிய அளவிற்கு இப்போது மிகப் பெரிய எதிர்பார்ப்பை நம்முடைய ஆளுநர் உரை நமக்கு அளித்துக்கொண்டிருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது)

நம்மைப் பொறுத்தவரைக்கும் பிறந்ததிலிருந்து மறைகின்ற வரைக்கும் எல்லாத் தரப்பு மக்களுக்கும் எல்லா திட்டங்களையும் இந்த ஆளுநர் உரையிலே நம்மாலே பார்க்க முடிகிறது. ஒரேயொரு மனக்குறைதான், கிறிஸ்தவ பெருமக்கள் தமிழ்நாடு முழுவதும் புதைக்கப்பட்டால் மீண்டும் உயிர்த்தெழுவோம் என்ற நம்பிக்கையோடு கல்லறை தோட்டத்திற்கு இடமில்லை என்ற அந்தக் கோரிக்கையெல்லாம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். பின்னாலே விவாதங்கள் எல்லாம் வருகின்றபோது, மானியக் கோரிக்கைகள் எல்லாம் வருகின்றபோது, அவையெல்லாம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் நிறைவேற்றப்படும் என்று நான் நம்புகின்றேன்.

அமளிக்காடாக இருந்த தமிழகத்தை அமைதிப் பூங்காவாக மாற்றுகின்ற சட்டம் ஒழுங்கு பிரச்சினையை, நிம்மதியாக மக்களை வைத்துக்கொள்கின்ற அந்தத் திட்டங்களையெல்லாம் அறிவித்திருப்பதை வரவேற்கின்றேன்.



அதேபோன்று, தமிழ் மொழியை இந்திய ஆட்சிமொழிகளில் ஒன்றாக ஆக்கிடவும், நீதிமன்றங்களில் தமிழை அமல்படுத்துவதற்காக மத்திய அரசை வலியுறுத்தவும், டெல்லிக்கு அம்மா அவர்கள் செல்ல இருக்கிறார்கள். என் அருமை பேரவைத் தலைவர் அவர்களே, முன்பெல்லாம் 20, 30 ஆண்டுகளுக்கு முன்பு டெல்லி சென்றால், வேஷ்டி கட்டிய தமிழன் என்றால் வணங்கி வரவேற்ற காட்சிகளெல்லாம் இருந்தன. இப்போது 2ஜி ஸ்பெக்ட்ரம் வந்த பிறகு தமிழ்நாட்டு மக்கள் போனால் 'ச்சோர்' என்று சொல்கின்ற அளவிற்கு, தமிழ்நாட்டிலிருந்து, பொதுப் பணத்திலிருந்து கொள்ளையடித்த மக்கள் என்று பார்க்கின்ற அவலமான நிலைமைக்கு இப்போது ஆளாக்கியிருக்கிறார்கள்.

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் டெல்லிக்குப் போகப் போகிறார்கள். இழந்த அந்தப் பெருமையை புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் மீட்டு எடுக்க வேண்டும். டெல்லிக்குப் போகின்றபோது தமிழன் தலைநிமிர்ந்து நிற்கக்கூடிய அளவிற்கு மிகப் பெரிய மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். இந்த இழந்த பெருமையை மீட்டுத் தருகின்ற அந்த மாபெரும் பொறுப்பு அம்மா அவர்களுக்கு இருக்கிறது.

இதைச் சொன்னால் அவர்கள் உடனே சொல்வார்கள். திராவிட இயக்கத்திற்குக் கேடு வருகிறது. என்னையும், என் பிள்ளைகளையும், என் குடும்பத்தையும் தாக்க வருகின்றது, திராவிட இயக்கத்திற்கு ஆபத்து வருகிறது என்று சொல்வார்கள். 2ஜி ஸ்பெக்ட்ரத்திற்கும் திராவிட இயக்கத்திற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது?

பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட இயக்கம் இன்றைக்கு காப்பாற்றப்பட்டிருக்கிறது என்றால் பேரறிஞர் அண்ணாவிற்குப் பிறகு, தந்தை பெரியாருக்குப் பிறகு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.-க்குப் பிறகு திராவிட இன உணர்வுகள் இப்போது போற்றிப் பாதுகாக்கப்படுகின்றன என்று சொன்னால் அது புரட்சித் தலைவி அம்மா வகுத்திருக்கின்ற சீரிய கொள்கைகளாலே, திட்டங்களினாலே தவிர (மேசையைத் தட்டும் ஒலி) வெறும் வார்த்தை ஜாலத்தாலே, நாடகத்தாலே, மலிவு விளம்பரத்தாலே இல்லை. நம்முடைய அருமை அண்ணன் மாண்புமிகு திரு. கருப்பசாமி அவர்கள் நன்றாகப் பாடுவார். ஒன்றை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன். அவர்போல பாட முடியாவிட்டாலும், புரட்சித் தலைவர் 1972 ஆம் ஆண்டு கட்சி

தொடங்கப்பட்ட பிறகு, நேற்று இன்று நாளையிலே சொன்னார். 'தம்பி நான் படித்தேன் காஞ்சியிலே நேற்று' என்ற ஒரு பாடல் உங்களுக்கெல்லாம் நினைவு இருக்கும், அதிலே சொல்லுவார்,

"மக்கள் நலம் மக்கள் நலம் என்றே சொல்லுவார்
தம் மக்கள் நலம் ஒன்றேதான் மனதில் கொள்ளுவார்
தம் மக்கள் நலம் ஒன்றேதான் மனதில் கொள்ளுவார்"

என்று 1973 ஆம் ஆண்டு பாடினார். தம் மக்கள் நலனை மட்டும்தான் மனதிலே வைத்துக்கொள்வார் இவர் என்று அப்போது புரட்சித் தலைவரால் அடையாளம் காட்டப்பட்ட முன்னாள் மைனாரிட்டி அரசின் முதலமைச்சர், ஐந்தாண்டு காலத்தில் எவ்வளவு அமளிக் காடாக அவர் தமிழ்நாட்டை ஆக்கினார் என்பதை நாடே பார்த்துக்கொண்டிருந்தது. இந்தத் தமிழ்நாட்டில் மிகப் பெரிய அளவில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு நிமிடங்கள் கூடுதலாக ஆகிவிட்டது. உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஜே.சி.டி. பிரபாகர்:** மிகப் பெரிய மாற்றங்களை இந்த ஆளுநர் உரையிலே கோடிட்டுக் காட்டியிருக்கின்றீர்கள். வரவு செலவுத் திட்டத்தின் மூலமாக ஒன்றரை ஆண்டு காலத்திற்குள்ளாக கொடுத்த வாக்குறுதிகள் அத்தனையையும் முடித்துவைக்கின்ற முனைப்போடு அம்மா அவர்கள் 24 மணி நேரமும் உழைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த ஊக்கம் எங்களையெல்லாம் பிரமிக்க வைக்கின்றது.

சமச்சீர் கல்வித் திட்டத்தை மிகப் பெரிய அளவிலே சட்டத் திருத்தம் கொண்டுவந்து அதில் இருக்கின்ற—U.S.S.R. 1989-லே என்னுடைய தோழர்களுக்குத் தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பார்த்தசாரதி அவர்கள். 10 நிமிடங்கள். (குறுக்கீடு) Last point.

**திரு. ஜே.சி.டி. பிரபாகர்:** புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய காலடியில் வில்லிவாக்கம் தொகுதி குறித்த சில கோரிக்கைகளை வைக்க விரும்புகிறேன். இதை ஒரு மாடல் தொகுதியாக மாற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அயனாவரம், மேற்கு அண்ணாநகர், வில்லிவாக்கம் பகுதிகளில் சமுதாயக் கூடங்கள்





இல்லை. அரசு சார்ந்த ஒரு பொறியியல் கல்லூரி, ஒரு அரசு கலைக் கல்லூரி வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. அயனாவரத்தில், வில்லிவாக்கத்தில் கழிவுநீர், குடிநீரோடு கலந்துகொண்டிருக்கிறது. எம்.டி.எச். சாலையிலே புறநகர் மருத்துவ வசதி இல்லை. அகத்தியர் நகரிலே பார்க் இல்லை. அதேபோன்று ராஜமங்களம், அயனாவரம் குடிசை மாற்று வாரியப் பகுதிகளில், காந்தி நகர், கக்கன்ஜி நகர் குடிசை மாற்று வாரியப் பகுதிகளிலே வசதிக் குறைவு ஏற்பட்டிருக்கிறது. அதேபோன்று, ராஜமங்களத்திலிருந்து பாரிமுனைக்குப் பேருந்து வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். வில்லிவாக்கத்திலிருந்து கோயம்பேட்டிற்கு பேருந்து வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கோரிக்கைகளை அமைச்சரிடம் எழுதிக் கொடுத்துவிடுங்கள். நடவடிக்கை எடுப்பார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பார்த்தசாரதி அவர்கள். ஒதுக்கப்பட்ட நேரம் 10 நிமிடங்கள்.

பிற்பகல் 1-50

*__திரு. ப. பார்த்தசாரதி:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். சென்னை, எழும்பூரில் சாதாரண குடும்பத்தில் பிறந்த என்னை மன்ற காலத்திலிருந்து மத்திய சென்னை மாவட்டச் செயலாளராகவும், மாநில அமைப்புச் செயலாளராகவும், கழகத்திலே, தலைமை நிலையச் செயலாளராகவும் பதவி அளித்து, நடந்து முடிந்த சட்டமன்றப் பொதுத் தேர்தலிலே விருகம்பாக்கம் தொகுதியில் போட்டியிட வாய்ப்பளித்து, வெற்றிபெறச் செய்த தே.மு.தி.க. தலைவர், நான் வணங்கும் மனிதக் கடவுள் திரு. கேப்டன் அவர்களை வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) எனது வெற்றிக்கு உறுதுணையாக இருந்த தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களுக்கும், எங்கள் தொகுதியிலே சூறாவளிப் பிரச்சாரம் செய்த திருமதி அண்ணியார் அவர்களுக்கும், என்னை விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குத் தேர்ந்தெடுத்த வாக்காளர் பெருமக்களுக்கும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சிக்கும், இந்திய கம்யூனிஸ்டு கட்சிக்கும், மனிதநேய மக்கள் கட்சிக்கும், புதிய தமிழகம், சமத்துவ மக்கள் கட்சிக்கும், மூவேந்தர் முன்னேற்றக் கழகம் மற்றும் அனைத்துத் தோழர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினை, எனது கன்னிப் பேச்சில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[திரு. ப. பார்த்தசாரதி] [2011 ஜுன் 8

ஆளுநர் உரையிலே நல்ல பல திட்டங்களை மக்களுக்கு ஆற்றுகின்ற வகையிலே இருப்பது எங்களுக்கு உடன்பாடு உள்ளதாகும். மக்களின் நலனை நாடி எங்கள் இயக்கத்தை நடத்துவதால் எதிர்க்கட்சி என்றாலும், மக்கள் நலத் திட்டங்களை வரவேற்க ஆளுங்கட்சிக்கு முழு ஒத்துழைப்பு கொடுப்போம். தமிழக மக்கள் இந்தக் கூட்டணியை மிகுந்த நம்பிக்கையுடன் வெற்றி பெறச் செய்துள்ளார்கள். நாம் தூய்மையான மக்கள் நலனையே முன்னிறுத்தி, அவர்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்ய வேண்டும். அதுதான் நாம் காட்டும் நன்றிக் கடன் ஆகும். ஒரு நாட்டில் மூத்த குடிமக்கள் பாதுகாக்க வேண்டிய ஒரு பிரிவினர். பல ஏழையெளிய சிறுதொழில் செய்து பிழைப்பவர்கள், மாற்றுத் திறனாளிகள் தங்களது முதுமையில் கவனிப்பாரற்று கிடக்கும் நிலையில், முதியோர் உதவித் தொகை 500-ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாக பயனாளிகளுக்கு உயர்த்தியிருப்பதைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

எங்கள் தலைவர் கேப்டன் அவர்கள் தனது சொந்தப் பணத்தில் எத்தனையோ பேருக்கு இத்தகைய உதவிகளைச் செய்தவர், செய்து வருபவர். இதுகுறித்து எனது வேண்டுகோள் என்னவென்றால், புதுப் பயனாளிகளைக் கண்டறிந்து, அவர்களுக்கு முதியோர் உதவித் தொகை அளித்திட வேண்டும். கடந்த ஆட்சியில் புதுப் பயனாளிகளுக்கு முதியோர் உதவித் தொகை பெற்றுத் தருவதற்கு லஞ்சம் வாங்கினார்கள் என்று பேசப்பட்டது. இதுபோன்ற தவறு இந்த அரசில் நடக்காது என்பது எங்களுக்கு நன்கு தெரியும். இதுபோன்ற தவறு செய்பவர் யாராக இருந்தாலும், அவர்கள்மீது இந்த அரசு இரும்புக் கரம் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றவுடன், தாலுகா அலுவலகத்தில் இருக்கின்ற புரோக்கர்களை ஒழிக்க வேண்டும் என்பதற்காகத்தான் உண்மையான பயனாளிகளைக் கண்டறிந்து, அவர்களுக்கு உதவி வழங்க வேண்டுமென்று ஆணையிட்டுள்ளார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சொன்னதைப்போல, நிச்சயமாக



2011 ஜுன் 8] [திரு. பி. தங்கமணி]

மாண்புமிகு அம்மா ஆட்சியில் நடைபெறாது என்பதை இந்த நேரத்திலே உறுதியோடு கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. ப. பார்த்தசாரதி:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்கு. பொதுவாக கன்னிப்பேச்சு என்கின்ற அளவில் மாண்புமிகு உறுப்பினர்கள் குற்றச்சாட்டாகக் கூறவேண்டாம். அமைச்சருடைய குறுக்கீடு இல்லாமல் கன்னிப்பேச்சு அமைய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ப. பார்த்தசாரதி:** சமச்சீர் கல்வி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. கைவிடப்படவில்லை என்பது அமைச்சரின் பதில் பல்வேறு தரப்பினரையும் மகிழ்ச்சியடையச் செய்துள்ளது. அதேபோன்று தனியார் பள்ளிகளில் கல்விக் கட்டணத்தையும் முறைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையையும் இந்த அரசு முன் வைக்கப்பட்டுள்ளது. அதற்குரிய தீர்வை உடனடியாக எட்ட வேண்டுமென்ற எதிர்பார்ப்பு பெற்றோர்களிடமும், கல்வியாளர்களிடமும் மேலோங்கி உள்ளது.

கடந்த தி.மு.க. ஆட்சியில் எதிர் வரிசையில் அமர்ந்திருந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட அனைவரும் ஒருமித்த குரல் எழுப்பிய விவகாரங்களில் பேருந்துக் கட்டண உயர்வும் ஒன்று. கலர் கலராகப் பேருந்து விட்டு மக்களிடம் மறைமுகமாக காசு பறிக்கிறார்கள் என்ற கூக்குரல் அனைத்துத் தரப்பிலும் எழுந்தது. சென்னை உள்ளிட்ட பெருநகரங்களில் ஒவ்வொரு டெப்போவிலும் இயக்கப்படும் மொத்தப் பேருந்துகளின் எண்ணிக்கையில் 60 முதல் 70 சதவீதம் வரை சாதாரண கட்டணப் பேருந்துகள், அதாவது white board பேருந்துகளை இயக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கின்றேன்.

பிற்பகல் 1-55

இலவச அரிசித் திட்டம், தாலிக்குத் தங்கம், முதியோர் உதவித் தொகை உயர்வு, மீனவர்களுக்கு உதவித் தொகை உயர்வு எனத் தேர்தல் வாக்குறுதிகளை அதி விரைவாக அடுத்தடுத்து இந்த

[திரு. ப. பார்த்தசாரதி] [2011 ஜூன் 8

அரசு குறுகிய காலத்தில் நிறைவேற்றி வருகிறது. இந்தத் திட்டங்களின்மூலம் பயனடையும் பயனாளிகள் அதிகம் என்றாலும், அடித்தட்டு மக்கள், நடுத்தர மக்கள் என பொது வாகனத்தைப் பயன்படுத்துவோர் அனைவரும் பயனடையும் வகையில் white board பேருந்துகளை அதிக அளவிலே இயக்கினால் பேருந்துக் கட்டணத்தில் கணிசமான அளவு மீதமிருக்கும். இந்த அரசுக்கு வாக்களித்ததன்மூலம் கைமேல் கண்ட பலனாக பொதுமக்கள் இதைக் கருதுவார்கள். பள்ளி மற்றும் அலுவலக நேரங்களில் பேருந்துகளில் பயணிக்க முடியாத அளவுக்கு படிக்கட்டுகளில் தொங்கியபடியே மக்கள் பயணம் செய்கிறார்கள். தனியார் நிறுவனத்திலும், கூலி வேலைக்குச் செல்பவரும் அதிகம் வசிக்கும் விருகம்பாக்கம் தொகுதியில் காலை, மாலை நேரங்களில் கூடுதல் பேருந்துகளை இயக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அவ்வப்போது உயர்ந்து வரும் பெட்ரோல், டீசல் விலையினால் ஆட்டோ தொழிலாளிகள் கடும் இன்னலுக்கு ஆளாகியுள்ளனர். அதே நேரத்தில் பொதுமக்கள் ஆட்டோவைப் பயன்படுத்துவதற்கு அஞ்சுகின்றனர். பெட்ரோல் டீசல் விலைவாசிக்கு ஏற்பவும் பொதுமக்களுக்குப் பாதகம் இல்லாத வகையிலும், ஆட்டோ கட்டணத்தை நிர்ணயித்து அதனை ஆட்டோ ஓட்டுநர்கள் உறுதியாகப் பின்பற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த மன்றத்திலே வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதி குறைபாடுகளை அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். விருகம்பாக்கம் தொகுதியில் சேமாத்தம்மன் நகர், குலசேகரபுரம், மேட்டுக்குளம், நியூ காலனி, அரங்கநாதன் நகர், காமராஜர் காலனி, தசரதபுரம், எம்.ஜி.ஆர். நகர், சஞ்சய் காந்தி காலனி, சூளைப்பள்ளம் ஆகிய இடங்களில் நீண்ட காலமாக வசிக்கும் மக்கள் வீட்டு வரி, மின்சாரக் கட்டணம் என்று அரசுக்குச் செலுத்தி வருகிறார்கள். ஆனால் இதுவரை தொகுதியிலுள்ள மக்களுக்குப் பட்டா வழங்கப்படவில்லை. தொகுதியில் இருக்கும் மக்களுக்கு உடனடியாக பட்டா வழங்க விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எம்.ஜி.ஆர். நகர், சூளைப்பள்ளம் பகுதிகளில் உயிரைப் போக்கும் வகையில் தொங்கிக் கொண்டுள்ள மின் கம்பங்களை அகற்றிவிட்டு பூமிக்கடியில் செல்லும் மின் கேபிள்களைப் பதிக்க



2011 ஜூன் 8] [திரு. ப. பார்த்தசாரதி]

நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் 6-6-2011 அன்று இரவு பெய்த மழையில் விருகம்பாக்கம் வெங்கடேசன் நகரில் மின் கம்பி அறுந்து விழுந்ததில் ப்ளஸ் 2 படிக்கும் ஹரீஷ் என்ற மாணவன் மின் கம்பியை மிதித்து அதே இடத்தில் மரணம் அடைந்தான். இறந்த மாணவன் குடும்பத்திற்கு அரசு நிவாரணத் தொகை அளிக்குமாறு இந்த மன்றத்தின்மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

விருகம்பாக்கம் 65-வது வட்டத்திற்கு உட்பட்ட மேட்டுக்குளம், இந்திரா நகர், வெங்கடேசன் நகர், ஷேக் அப்துல்லா நகர், சாய் நகர், நடேசன் நகர் ஆகிய இடங்களிலே பாதாள சாக்கடை அடைப்பு ஏற்பட்டு அனைத்து வீதிகளிலும் கழிவு நீர் வழிந்து ஓடுகிறது. இதனால் மக்கள் நடந்து செல்வதற்கு சிரமம் ஏற்படுகிறது. இந்த துர்நாற்றத்தால் அங்குள்ள மக்களுக்கு சுகாதார பாதிப்பு ஏற்பட்டு மருத்துவர்களை அணுக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதைப் போக்கிட துணைக் கழிவு நீர் அகற்றும் நிலையம் அமைக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

128-வது வட்டத்தில் நெசப்பாக்கம், கே.கே. நகர், ஆற்காடு ரோடு சந்திப்பிலுள்ள காலி மனையில் சமுதாய நலக் கூடமும், 130-வது வட்டத்திலுள்ள சிவலிங்கபுரத்தில் சமுதாய நலக் கூடமும் அரசு கட்டிக் கொடுத்து, அரசின் நேரடி நிருவாகத்தில் நடத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட 5 டிவிஷன்கள் 3 மண்டலங்களாக தனித் தனியாக உள்ளன. சட்டமன்ற உறுப்பினர் மக்கள் நலப் பணிகள், அரசு நலப் பணிகள் துரிதமாக நடைபெற ஒரே மண்டலமாக அமைத்து உத்தரவிடுமாறு இந்த அரசிடம் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று மழைநீர் சேமிப்புத் திட்டத்தை மீண்டும் இந்த அரசு கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி திரைப்படக் கலைஞர்கள் அதிகம் வாழும் தொகுதி. திரைப்படத் துறையில் உள்ளவர்கள் சென்ற ஆட்சியிலே எவ்வளவு பாதிக்கப்பட்டார்கள் என்று உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். அந்தத் திரைப்படக் கலைஞர்கள் வாழ்வில் ஒளியேற்ற திருட்டு V.C.D.-க்களை விற்க விடாமல் தடுத்து அதை ஒழிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[2011 ஜூன் 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உறுப்பினர், முடித்துவிடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் ஜேஜி. பிரின்ஸ் அவர்கள். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிமிடங்கள் 10.*

*பிற்பகல் 2-00*

****திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களே, உங்கள் அனைவருக்கும் வணக்கங்களைச் சொல்லி என் கன்னிப் பேச்சை இந்த கண்ணியமான அவையிலே பேசுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்அனுமதியுடன் பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** நான் சட்டமன்ற உறுப்பினராவதற்குக் காரணமான அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தலைவர் அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், இளம் தலைவர் ராகுல் காந்தி அவர்களுக்கும், மக்கள் தளபதி மாண்புமிகு மத்திய அமைச்சர் அய்யா ஜி.கே. வாசன் அவர்களுக்கும், குளச்சல் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் நன்றி சொல்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் அரும்பெரும் வளர்ச்சிக்காக ஆளுநர் உரையில் சொல்லப்பட்ட நல்ல திட்டங்களை மகிழ்ச்சியோடு வரவேற்பதோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றி சொல்லிக்கொள்கிறேன்.

ஆதரவற்ற முதியோர்களுக்கு ஓய்வூதியமாக மாதந்தோறும் கொடுக்கப்படுகின்ற தொகையை 500-லிருந்து ஆயிரம் ரூபாயாக உயர்த்தியதற்காகவும் மற்றும் பயனாளிகள் பெயரில் வங்கிக் கணக்கு தொடங்கப்பெற்று வங்கியின்மூலமாக அவர்கள் பயன்பெறுவது வரவேற்கக்கூடியது. ஆனால், உண்மையான பயனாளிகள் பயன்பெறுவதில்லை. சில middle class family-களிலே பிள்ளைகளால் கைவிடப்பட்ட தாய்மார்கள் உண்டு, தந்தைமார்களும் உண்டு. அவர்களுக்கும் இந்த முதியோர் உதவித் தொகை பெறுவதிலே கடினம் உண்டு. சட்டம் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. வருமான வரித் துறை அதிகாரிகள் உண்மையிலேயே அப்படிப்பட்ட முதியோர்களுடைய விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்வதில்லை. ஏனென்றால், வீடு இருக்கும், வசதிகள் இருக்கும், ஆனால் தன்னுடைய வாழ்க்கையை



2011 ஜூன் 8] [திரு. ஜே.ஜி. பிரின்ஸ்]

நடத்துவதற்கு அவர்களுக்கு நாதியில்லாத சூழ்நிலை ஏற்படுகிறது. அப்படிப்பட்ட முதியோர்களையும் கணக்கில் கொண்டு அவர்களுக்கு முதியோர் பென்சன் கொடுப்பதற்கு இந்த அவையிலே நான் வேண்டுகின்றேன்.

மீனவர்களின் நலனைப் பேணிக் காக்கும் வகையிலே மீன் பிடிக்கத் தடை செய்யப்பட்ட காலங்களில் உதவித் தொகையை ஆயிரம் ரூபாயிலிருந்து இரண்டாயிரம் ரூபாயாக உயர்த்தியது வரவேற்புக்குரியது. குளச்சல் சட்டமன்றத் தொகுதி மீனவ மக்கள் சார்பிலே நான் நன்றி சொல்கின்றேன்.

வேளாண்மை உற்பத்தித் திறனைப் பெருக்கக்கூடிய வகையிலே நெல், பருத்தி போன்றவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால், ரப்பர், தென்னை பயிர்களுக்கும் இந்த முக்கியத்துவத்தை அளிக்க வேண்டுமென்று இந்த அவையிலே கேட்டுக்கொள்கின்றேன்.

தென் மாவட்டங்களில் தொழில் வளர்ச்சி ஏற்படுவதற்காக எடுக்கப்படும் திட்டங்கள் வரவேற்கப்படுகின்றன. ஆனால், தென் மாவட்டங்கள் என்று தூத்துக்குடியோடு நிறுத்திவிடாமல், திட்டங்களை கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் extend செய்ய வேண்டுமென்று பணிவோடு வேண்டுகின்றேன்.

அனைவருக்கும் பயனளிக்கக்கூடிய தரமான மருத்துவச்சேவையான பொதுக் காப்பீட்டுத் திட்டத்தை வரவேற்கிறேன். ஆனால் எந்தக் கொடிய நோயாளிக்கும் பயனளிக்கும் வகையிலே L.I.C.-யோடு இணைந்து செய்தால், தேவையான பணத்தை L.I.C. மூலம் பெற்று, இந்தத் திட்டத்தைச் சிறப்பாகச் செய்ய முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பள்ளி, கல்லூரிகள் மற்றும் இதர அரசுத் துறைகளில் பணி நியமனம் குறித்த அறிவிப்புகள் ஆளுநர் உரையில் இல்லாதது, படித்த, வேலைவாய்ப்புக்காகக் காத்திருக்கும் இளைஞர்களுக்கு வருத்தம் அளிக்கிறது. இதனைக் கருத்தில் கொண்டு அதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளக் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்தியாவிலே, தென் கோடியிலே முக்கடலும் சங்கமிக்கும் குமரி மண்ணில் அனைத்து இயற்கை வளம் நிறைந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தொகுதியிலிருந்து நான் வெற்றி பெற்று வந்தவன். தென் கோடியிலே குமரி மாவட்டத்திற்குத் தனிச் சிறப்பு உண்டு. எங்களுடைய தொகுதிக்குத் தலைசிறந்த சிறப்பு உண்டு. (குறுக்கீடு)

[2011 ஜூன் 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நோயில் கொடிய நோய் என்றுதான் இருக்கிறது. கொடிய நோயாளி என்றில்லை. அதனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடிய நோய் எனக் கூறலாம். கொடிய நோயாளி அல்ல.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், சென்ற ஆட்சியிலே ஒரு இலட்சம்தான் காப்பீட்டுத் தொகை கொடுக்கப்பட்டது. அதை extend செய்து, ஒருவேளை கேன்சர் போன்ற மோசமான நோய் ஏற்பட்டிருந்தால்கூட, அவர்களுக்கும் உதவியாக இருக்கும் என்பதற்காகத்தான் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அந்தப் பொருளில் சொல்லவில்லை. அந்த வார்த்தையைத் திருத்திக்கொள்ளச் சொல்கிறேன். அவ்வளவுதான்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** என்னுடைய தொகுதியிலே . .(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. கோபிநாத், இதில் என்ன point of order இருக்கிறது?. (குறுக்கீடு) இதிலே ஒரு point of order-ம் இல்லை. நீங்கள் உட்காருங்கள். இப்போது நேரம் 2.04 ஆகிறது. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள். மைக் ஆன் செய்தாகிவிட்டது.

**திரு. கே. கோபிநாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் வழக்குத் தமிழில் சொல்கிறார். He belongs to Kanyakumari District. அது அந்தப் பகுதியிலுள்ள தமிழ். நான் பேசும்போது நமது நண்பர்கள் சிரித்தார்கள். நான் மாநிலத்தின் இந்தக் கடைசியில் இருக்கிறேன். அவர் அந்தக் கடைசியில் இருக்கிறார். அங்கு இருக்கின்ற local language-ல்-உள்ள slang-தான் அது அவர் சொல்லுகின்ற meaning சரிதான் (குறுக்கீடு)

பிற்பகல் 2-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அந்தக் கொடிய நோயாளி என்ற வகையிலே சொன்னார். அதைச் சொல்ல வேண்டாம் என்று சொல்கிறேன்.

**திரு. கே. கோபிநாத்:** இல்லை, இல்லை. அது slang தான். அது அந்த slang தான். தயவுசெய்து அதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும், வேறு ஒன்றும் இல்லை.



2011 ஜூன் 8]

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1741 ஆம் ஆண்டு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, நீங்கள் என்ன சொல்ல வந்தீர்கள்? கொடிய நோயா? இல்லை கொடிய நோயாளியா?

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** கொடிய நோய் என்றுதான் சொன்னேன். கொடிய நோயால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொடிய நோயால்? அதுதான் correct.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** Yes. நான் எதைச் சொன்னேன் என்று சொன்னால், கொடிய நோயால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு என்றுதான் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது சரி. அதன்படி இருக்கும்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** என்னுடைய தொகுதிக்குத் தனிச் சிறப்பு உண்டு. 1741 ஆம் ஆண்டு போர்ச்சுகீசியப் போர் வீரர்களை வீழ்த்தி கையடக்கிய பெருமை குளச்சல் தொகுதிக்கு உண்டு. அந்தத் தொகுதியிலிருந்து நான் வெற்றி பெற்று வந்தவன். இயற்கைத் துறைமுகமாக குளச்சல் துறைமுகம் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே மற்ற நாடுகளோடு வியாபாரம் செய்து வந்த பெருமையுண்டு. ஆனால், இப்போது நம்முடைய ஆளுநர் உரையிலே அன்புக்குரிய நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குளச்சல் துறைமுகத்தை அதிலே உட்படுத்தியிருக்கிறார்கள். நான் வரவேற்கிறேன். நன்றி சொல்கிறேன். ஆனால், அது தவறாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கடலூரிலும், நாகப்பட்டினத்திலும், குளச்சலிலும் துறைமுகங்கள் செயல்படுகின்றன என்று தவறாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், குளச்சலிலே not yet started. அதை உங்களுடைய கனிவான கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். (குறுக்கீடு) Sorry, sorry, no, no. இதுவரை, நாகப்பட்டினத்திலும், கடலூரிலும்தான் . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

[2011 ஜூன் 8

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தச் சபைக்குத் தவறான தகவலைத் தருகிறார். குளச்சலிலே பணி ஆரம்பிக்கப்பட்டு இப்போது பணி நடந்துகொண்டிருக்கிறது. அது விரிவுபடுத்தப்படும் என்றுதான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இப்போது முட்டத்திலே தனியார் பங்களிப்புடன் தூண்டில் வளைவுத் துறைமுக வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. குளச்சலிலே அரசு மூலமாக அந்தப் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நடைபெறவில்லை என்று தவறான தகவலைச் சொல்ல வேண்டாம்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** வர்த்தகத் துறைமுகத்தைத்தான் நான் சொன்னேன், மீன்பிடித் துறைமுகத்தைச் சொல்லவில்லை. அன்புக்குரிய நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வர்த்தகத் துறைமுகத்தை ஆரம்பிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை வரவேற்கிறேன், நன்றி சொல்கிறேன். இதைத்தான் சொன்னேன். வர்த்தகத் துறைமுகத்தை மிகச் சிறப்பான வர்த்தகத் துறைமுகமாக எங்களுக்கு ஆக்கித் தர வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுதல்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் பேரவைக்கு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சரியான தகவலைத் தர வேண்டும். கடலூர், நாகப்பட்டினம் மற்றும் தூத்துக்குடிக்கு வர்த்தகத் துறைமுகம்தான் என்று நம்முடைய கவர்னர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் அதை அறிவித்திருக்கிறார்கள். ஆனால், குளச்சலிலே மீன்பிடித் துறைமுகம்தான். அந்தப் பணிதான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** நான் மாண்புமிகு அமைச்சரிடம் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், நீங்கள் வேறு subject-க்குப் போங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** சரி. அடுத்தபடியாக நான் வேண்டிக்கொள்வது, 27 கோடி ரூபாய் முதலீட்டிலே சென்ற ஆட்சியிலே ஒரு மீன்பிடித் துறைமுகம் குளச்சலிலே அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணி விரைவாக . . .



2011 ஜூன் 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரும்பவும் அங்கேயேதான் வருகிறீர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** இல்லை, இல்லை. அது மற்ற துறைமுகம். அதை விரிவுபடுத்தி கிழக்கு மற்றும் மேற்கு கடலலை தடுப்புச் சுவர்களை 100 மீட்டர் extend செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. உங்கள் கோரிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்கள். அடுத்தது, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.வ. மார்க்கண்டேயன் அவர்கள். (குறுக்கீடு) திரு. ஜே.ஜி. பிரின்ஸ், நீங்கள் மானியக் கோரிக்கையிலே நிறையப் பேசிக்கொள்ளலாம். நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. மார்க்கண்டேயன் உட்காருங்கள். திரு. ஜே.ஜி. பிரின்ஸ், சீக்கிரம் உரையை முடியுங்கள். தொகுதிப் பிரச்சினையைப் பற்றிப் பேசி முடியுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** என்னுடைய தொகுதிக்குட்பட்ட கடலோரப் பகுதிகளிலே தண்ணீர் தட்டுப்பாடு இருக்கிறது. சாலைகள் சரியாக இல்லை. பாலங்கள் எல்லாம் முடக்கப்பட்டிருக்கின்றன. இப்படி அடிப்படை வசதிகளெல்லாம் குறைவாக இருக்கிற காரணத்தால் மக்கள் கஷ்டப்படுகிற நிலை காணப்படுகிறது. குமரி மாவட்டத்தினை வரலாற்றுச் சிறப்புமிக்க மாவட்டம் என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. தென்கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. எந்த நலத் திட்டங்களும் இல்லை. நமக்குச் சுதந்திரம் கிடைக்கும், நன்மைகள் கிடைக்கும் என்று எங்களுடைய மூதாதையர்கள் 1956-லேயே தாய்த் தமிழகத்தோடு குமரி மாவட்டத்தை இணைத்த பிறகு, there is no development. அனைத்து development-களும் எங்களுக்கு வேண்டுமென்பதை இந்த நேரத்திலே சொல்லி, வாய்ப்புக்கு நன்றி சொல்லி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.வ. மார்க்கண்டேயன் அவர்கள். 5 நிமிடங்களில் உங்கள் உரையை முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) நீங்கள் 5 நிமிடத்திலே உரையை முடித்தீர்கள் என்றால், எல்லோரும் உங்களைப் பாராட்டுவார்கள்.

[2011 ஜூன் 8

**திரு. கு.வ. மார்க்கண்டேயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைவிட நாளைக்குப் பேசச் சொன்னால் மற்ற அத்தனைபேரும் சந்தோஷப்படுவார்கள்.

*பிற்பகல் 2-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி நீங்கள் பேசுங்கள்.

**திரு. கு.வ. மார்க்கண்டேயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்"

என்ற வள்ளுவப் பெருந்தகையினுடைய வாக்குக்கேற்ப தன்னுடைய கடுமையான உழைப்பினால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் கூட்டணிக் கட்சிகளினுடைய சகோதரர்கள் அத்தனை பேரையும் இந்தச் சட்டப் பேரவைக்குள் வரவேற்று, அவர்களைச் சட்டப் பேரவை உறுப்பினர்களாக, அமைச்சர்களாக ஆக்கி அழகு பார்க்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய காலடிப் பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன்.

"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு"

என்ற வள்ளுவப் பெருந்தகையினுடைய குறளுக்கேற்ப ஊருக்கு நடுவே இருக்கக்கூடிய ஒரு கிணற்றில் எப்படி ஊர் மக்களெல்லாம் குடிதண்ணீரை எடுத்துப் பருகி சந்தோஷப்படுவார்களோ, அதைப்போன்று நம் தமிழக மாநிலத்தில் இந்த நாட்டினுடைய மக்கள் அத்தனைபேரும் பயன்பெறுகிற வகையில் கற்பக விருட்சமாக இருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்கள், விளாத்திக்குளம் சட்டப் பேரவை உறுப்பினராக ஆவதற்காக என்னைத் தேர்வு செய்ததற்கும், அதற்கு உறுதுணையாக இருந்த விளாத்திக்குளம் தொகுதியினுடைய வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"சாதிகள் இல்லையடி பாப்பா—குலத்
தாழ்ச்சி உயர்ச்சிசொல்லல் பாவம்"

என்று சொன்ன பாரதியினுடைய வரிகள்,



2011 ஜூன் 8] [திரு. கு.வ. மார்க்கண்டேயன்]

"இருட்டறையில் உள்ளதடா உலகம்-சாதி
இருக்கின்றது என்பானும் இருக்கின்றானே"

என்று சொன்ன பாவேந்தன் பாரதிதாசனுடைய வரிகள் இவற்றைச் சீன மொழிகளிலும், அரேபிய மொழிகளிலும் translate செய்து இணைய தளத்தில் பாரதியையும், பாரதிதாசனையும் உலக நாட்டு மக்களெல்லாம் அத்தனை மொழிகளிலும் படிக்க வேண்டுமென்று இந்த ஆளுநர் உரையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. தமிழிய கவிஞர்களை உலக அரங்கிற்குக் கொண்டு செல்லக்கூடிய அளவுக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்திருக்கிறார்கள் என்பது இதுவரையில் இல்லாத ஒரு மிகப் பெரிய சாதனை என்பதை இந்த அவையில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற நேரம் 5 நிமிடங்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் 10 நிமிடங்கள் எடுத்துக்கொள்ளுங்கள்.

**திரு. கு.வ. மார்க்கண்டேயன்:** ஒரு சரித்திரமிக்க இந்த தமிழக சட்டப் பேரவையில் மாண்புமிகு இதய தெய்வம், இன்றைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஈழத் தமிழர்களுக்கு இழிவு செய்யப்பட்ட இலங்கையில் இருக்கக்கூடிய அரசுக்கு பொருளாதாரத் தடை விதிக்க வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தை இன்று கொண்டு வந்திருக்கிறார்கள். இது ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானம். இதற்கு முன்னர், தமிழகத்தினுடைய முன்னாள் முதலமைச்சரும் டெல்லிக்குச் சென்றிருக்கிறார். எப்போது டெல்லிக்குச் சென்றிருக்கிறார் என்று சொன்னால், இன்று திகார் சிறையில் இருக்கிற கனிமொழி அவர்களை நாடாளுமன்ற உறுப்பினராக்கி பிரதமரிடமும், சோனியா காந்தியிடமும் அறிமுகம் செய்யச் சென்ற மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் கருணாநிதி அவர்கள், அவர்களைக் கூப்பிட்டுச் சென்றார்கள். மற்றொரு முறை டெல்லிக்குச் சென்றார். தயாநிதி மாறனுக்கும் தன்னுடைய மூத்த மகன் அழகிரிக்கும் மத்திய அமைச்சர் பதவியைப் பெற்றுக் கொடுக்க வேண்டுமென்பதற்காக டெல்லிக்குச் சென்றார். என்றாவது ஒரு நாள் தமிழர் தலைவன், தமிழ் மக்களுக்காக வாழுகிறவன், செம்மொழியைப் பற்றி இந்த நாட்டுக்கு எடுத்துச் சொல்கிற

[திரு. கு.வ. மார்க்கண்டேயன்] [2011 ஜூன் 8

அப்பேற்பட்ட ஒரு தமிழ்மொழிப் புலவன் என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டிருக்கக்கூடிய மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கருணாநிதி அவர்கள் இந்தத் தமிழ் மக்களுக்காக பாரதத்தினுடைய பிரதமர் மன்மோகன் சிங் அவர்களையோ, சோனியா காந்தி அவர்களையோ சந்தித்திருக்கிறார்களா? நீங்கள் ரேடாரைக் கொடுக்கிறீர்கள். போர் வீரர்களைக் கொடுக்கிறீர்கள். இங்கு பயிற்சி அளிக்கிறீர்கள். ஆனால், என் தொப்புள்கொடி உறவுகள் இலங்கையில் நசுக்கப்படுகிறார்கள், 4 இலட்சம் மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள்; இதற்கு என்ன பதில் சொல்லப்போகிறீர்கள்? சக்கர நாற்காலியில் ஏறி, என்றைக்காவது டெல்லிக்குச் சென்றிருக்கிறார்களா என்றால், இல்லை. அவருடைய செயல் வேறு. அவருடைய வாயிலிருந்து வரக்கூடிய வார்த்தைகள் வேறு. எதையுமே செய்தது கிடையாது. புறநானூற்று வரிகளைப் பற்றிப் பேசியிருக்கிறார். தமிழ் மொழியைப் பற்றிப் பேசுவார். ஆனால், இந்தத் தமிழ் மக்கள் வாழ்வதைப் பற்றி, இந்தத் தமிழ் மக்களுடைய பூர்வாங்க குடிமக்கள் இலங்கையில் எப்படி இருப்பார்கள் என்பதைப் பற்றி, உலகத் தமிழ் மக்களைப் பற்றி ஒரு நாளும் சிந்திக்காத முன்னாளைய திராவிட முன்னேற்றக் கழக அரசு ஒட்டுமொத்த தமிழ் மக்களுக்கு மிகப் பெரிய ஒரு தீங்கைச் செய்திருக்கிறது. இந்தத் தீங்கைத் துடைத்தெறிவதற்காகத்தான் அன்பிற்குரிய உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 28 நாட்கள் சிறைச்சாலையில் இருந்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார். அரசியலில், சிறையில் இருந்தவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை உலக தேசத்தில் இருக்கிறவர்களைப் பற்றி எடுத்துப் பார்த்தோமென்று சொன்னால், பல இலட்சக்கணக்கானவர்களும், பல கோடிக்கணக்கானவர்களும் உலக அரங்கில் தன்னம்பிக்கைக்கு ஒரு தலைசிறந்த தலைவராக நெப்போலியனைப் பற்றிப் பேசுவார்கள். நெப்போலியன், வாட்டர்லூ சிறையில், வாட்டர்லூ போர்க்களத்தில், செயின்ட் கதினார் தீவில் அடைக்கப்பட்டதற்குப் பிறகு அந்த வரலாறு பேசப்படவில்லை. 28 நாட்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சிறையில் அடைத்துவிட்டால் நம் இயக்கத்தினை ஒழித்துவிடலாம் என்று நினைத்திருந்த சூழ்நிலையில், அம்மா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம் என்று ஒரு அரசியல் கட்சி இல்லாத அளவிற்கு தமிழ்நாட்டில்



2011 ஜூன் 8] [திரு. கு.வ. மார்க்கண்டேயன்]

மிகப் பெரிய வெற்றி வாய்ப்பினை ஏற்படுத்தி, அத்தனை பேரையும் இந்த அவைக்கு கொண்டு வந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, விளாத்திகுளம் தொகுதி மக்கள் அத்தனை பேருக்கும் எனது நன்றியினை இந்த நேரத்தில் காணிக்கையாக்கிக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-15

ஆளுநர் உரையில் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு எவ்வளவு சிறப்பாகச் செயல்படுகிறது என்பதற்காக 500 மக்கள் தொகை இருக்கக்கூடிய அத்தனை கிராமங்களுக்கும் சாலை வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியில் திருமணம் ஆகாதவர்களுக்கெல்லாம் தாலிக்குத் தங்கம் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ‘தனி மனிதன் ஒருவனுக்கு உணவில்லையெனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம்’ என்று சொன்ன பாரதியினுடைய வாக்குக்கேற்ப, 20 கிலோ அரிசி ஒவ்வொரு குடும்பத்திற்கும் இலவசமாகக் கொடுப்பதாக இருக்கிறார்கள். இப்படி வரிசையாக ஒவ்வொரு திட்டத்தையும் எடுத்துக்கொண்டு பார்த்தால், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சர்க்காரில் பல ஆயிரக்கணக்கான திட்டங்கள் ஆளுநர் உரையில் சிறப்பான முறையில் எடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன.

விளாத்திகுளம் தொகுதியினுடைய மக்களுக்காக, விளாத்திகுளம் தொகுதியில் இருக்கக்கூடிய ஒருசில குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டுமென்பதற்காக என்னுடைய பணிவான கோரிக்கையைப் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய காலடிப் பாதங்களில் நான் பணிவாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். விளாத்திகுளத்தில் வழக்கறிஞர் சங்கத்தில் நானும் ஒரு உறுப்பினர் என்ற முறையில் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் G.O. போடப்பட்டு, 12 நீதிமன்றக் கட்டடங்கள் புதிதாகக் கட்டுவதற்காக அந்த அரசாங்கம் ஆணை பிறப்பித்திருக்கிறது. ஆனால், கடந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு விளாத்திகுளத்தில் அந்த நீதிமன்றக் கட்டடங்கள் கட்டப்படவில்லை. மழையில் ஒழுகக்கூடிய பழைய கட்டடத்தில் இருக்கக்கூடிய அந்த நீதிமன்றத்திற்குப் புதிதாகக் கட்டடம் கட்ட சட்ட

[திரு. கு.வ. மார்க்கண்டேயன்]

அமைச்சகத்தின்மூலம் ஏற்பாடு செய்யும்படி அரசை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

விளாத்திகுளம் Black Cotton Soil கொண்ட பகுதியாகும். 100 சதவீதம் கறுப்பு மண் பகுதியாக இருக்கக்கூடிய விளாத்திகுளத்தில், தமிழகத்திலே சாலைகளுடைய ஒரு மோசமான வரலாறு விளாத்திகுளத்தில் இருக்கிறது. 30 கிலோ மீட்டர் சாலையைப் பேருந்தில் கடக்க வேண்டுமென்று சொன்னால் 2 மணி நேரம் ஆகும். விளாத்திகுளத்திற்கு பிரத்தியேகமான திட்ட மதிப்பீட்டில் அதற்கான திட்டத்தை ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2002-2004 ஆம் ஆண்டுகளில் சீவலப்பேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் வளநாடு கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்ற இரண்டு மிகப் பெரிய திட்டங்களை அறிவித்தார்கள். 68 கோடி ரூபாய்க்கும், 97 கோடி ரூபாய்க்கும் அறிவிக்கப்பட்ட அந்தத் திட்டங்கள் கடந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசால் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட திட்டம் என்ற காரணத்தினால், சாதாரணமாக பட்ஜெட்டில் நான்கு கோடி ரூபாய்கூட பராமரிப்புச் செலவு இல்லாமல் கிடப்பில் போடப்பட்டிருக்கிறது. அன்புக்குரிய மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இந்த பட்ஜெட்டில் 4 கோடி ரூபாயை அந்தத் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்வார்கள் என்று சொன்னால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திட்டம் ஒரு ஜீவநதியாக தாமிரபரணியிலிருந்து விளாத்திகுளம், தூத்துக்குடி மற்றும் விருதுநகர் மாவட்டங்களுக்குப் பயன்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விளாத்திகுளம் தொகுதியில் பல்வேறு அரசு திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட வேண்டும். இதுவரை கல்லூரியே இல்லாத ஒரு தொகுதியாக இருக்கிறது என்று சொன்னால், அது விளாத்திகுளம் தொகுதி. விளாத்திகுளம் தொகுதியில் எந்த ஒரு தொழிற்சாலையும் இல்லை. விளாத்திகுளம் தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளை Special Economic Zone-ஆக அறிவித்து அந்தப் பகுதிகளுக்கு subsidy கொடுத்து பல்வேறு புதிய தொழிற்சாலைகளைத் தொடங்க வேண்டுமென்று புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய காலடிப் பாதங்களில் விண்ணப்பிக்கிறேன்.



[திரு. கு.வ. மார்க்கண்டேயன்]

அந்தப் பகுதிகளில் இருக்கக்கூடிய மாணவர்கள் கல்லூரிக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், அருப்புக்கோட்டைக்குப் போக வேண்டும்; இல்லையென்று சொன்னால், தூத்துக்குடிக்குச் செல்ல வேண்டும்; இல்லையென்று சொன்னால், கோவில்பட்டிக்குச் செல்ல வேண்டும். எந்தப் பகுதிக்குச் சென்றாலும் 60 கிலோ மீட்டர் சுற்றளவுக்குச் சென்றுதான் கல்லூரிப் படிப்பைத் தொடங்க முடியும் என்ற சூழ்நிலை இருக்கிறது. கடந்த முறை மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திலிருந்து பல்கலைக்கழகக் கல்லூரியாக ஒரு கல்லூரியை உருவாக்கியிருக்கிறார்கள். அந்தக் கல்லூரியை அரசுக் கல்லூரியாகப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விளாத்திகுளம் தொகுதி மக்களுக்குப் பால் வார்த்துக் கொடுத்திட வேண்டுமாய் பணிவன்புடன் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆளுநர் உரையில் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய திட்டங்களில் அனைத்து மக்களுக்கும் சுகாதாரமான குடிநீர் வசதி கொடுக்கப்படும், அனைத்துக் கிராமங்களுக்கும் கழிப்பறைகள் கட்டித் தரப்படும் என்ற மிகச் சிறப்பான திட்டங்களைக் கொடுத்திருக்கிறார்கள். கடந்த ஆட்சியில் Total Sanitation என்ற ஒரு திட்டத்தைக் கொடுத்து அதன்மூலம் 2,500 ரூபாய் ஒரு கழிப்பறைக்கு subsidy- ஆகக் கொடுத்து பல இலட்சக்கணக்கானப் பணத்தை மோசடி செய்திருக்கிறார்கள். மக்கள் தங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்காக, தேவைப்படுகிறவர்களுக்குக் கழிப்பறை வசதி செய்துகொள்ள Total Sanitation என்கிற திட்டத்தில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுங்கள்.

பிற்பகல் 2-20

**திரு. கு.வ. மார்க்கண்டேயன்:** 2,500 ரூபாயிலிருந்து அந்தப் பணத்தை 5,000 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 75,000 ரூபாய் கொடுக்கப்பட்ட வீட்டிற்கு, ஒரு சாதாரண செங்கல்லினுடைய விலை புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சிக் காலத்தில் 2 ரூபாய் 50 காசிலிருந்தது இன்று 7 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் தனியாக ஒரு வல்லுநர் குழுவினை அமைத்து total schedule of rates,

[திரு. கு.வ. மார்க்கண்டேயன்] [2011 ஜூன் 8

மொத்தப் பொருள்களினுடைய market price-ஐயொட்டி வழங்கினால் தரமானப் பணிகள் நடைபெறும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் தெரியப்படுத்திக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையில் மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களுடைய நல்லாசியால் 10 ஆண்டுக் காலம் ஒன்றியக் குழுவினுடைய தலைவராக இருந்த காரணத்தினால், இதுவரை DRD-க்கு, ஊரக வளர்ச்சித் துறைக்குத் தலைமைப் பொறியாளர் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. கு.வ. மார்க்கண்டேயன்**: ஒரு தலைமைப் பொறியாளரைக் கொண்டு ஊரக வளர்ச்சித் துறை இயங்கினால் மிகவும் சிறப்பாக இருக்கும் என்பதைத் தெரியப்படுத்திக்கொண்டு, வாக்களித்த விளாத்திகுளம் தொகுதி மக்களுக்கும், வாய்ப்பினைக் கொடுத்த புரட்சித் தலைவி இதய தெய்வம், தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், என்னை இந்தப் பேரவையில் முதன் முதலாக கன்னிப் பேச்சுக்கு அழைத்திட்ட மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்து, நன்றி பாராட்டி விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை 9-6-2011 (வியாழக்கிழமை) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 2-21 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

—ஏதுமில்லை—